# குறளுக்குப் புதிய பொருள்



பல்கலைப் பேரறிஞர்
டாக்டர் எஸ்.நவராஜ் செல்லையா
M.A; M.P.Ed; Ph.D; D.Litt; D.Ed; FUWAI.

# குறளுக்குப் புதிய பொருள்

**(புகழ் மிக்க சில குறள்பாக்களுக்கு மட்டும்)**

தேசிய விருது பெற்ற பேராசிரியர்,
**பல்கலைப் பேரறிஞர்**
## டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா
**M.A., M.P.Ed., Ph.D., D.Litt., D.Ed., FUWAI**

**ஆய்வுத் தமிழ்ப் பதிப்பகம்**
10, ரெங்கனாதன் தெரு, முதல்தளம்
தி. நகர். சென்னை - 17
தொலைபேசி: 4341109.

## நூல் விவர அட்டவணை


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **குறளுக்குப் புதிய பொருள்** |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | இலக்கிய ஆய்வை முதன்மையாகக் கொண்டது |
| ஆசிரியர் | : | **டாக்டர் .எஸ். நவராஜ் செல்லையா** |
| பதிப்பு | : | டிசம்பர் 1999 |
| நூலின் அளவு | : | கிரவுன் |
| அச்சு | : | 11 புள்ளிகள் |
| பக்கங்கள் | : | 128 |
| நூல் கட்டுமானம் | : | அட்டைக் கட்டு |
| **விலை** | : | **ரூ. 25/** |
| உரிமை | : | ஆசிரியருக்கே |
| தாள் | : | வெள்ளைத்தாள் |
| வெளியிட்டோர் | : | ஆய்வுத் தமிழ்ப் பதிப்பகம்<br>10, ரெங்கனாதன் தெரு<br>தி. நகர். சென்னை - 600 017<br>தொலைபேசி: 4341109. |
| அச்சிட்டோர் | : | கிரேஸ் பிரிண்டர்ஸ்<br>8, காவலர் குடியிருப்பு<br>தி. நகர், சென்னை - 600 017.<br>போன்: 4332696 |

# புகழ்மிக்க சில குறள்களுக்குப் புதிய பொருள்

**முன்னுரை:**

குறள் பற்றி உங்களுக்குத் தெரியாததல்ல. படித்து மகிழ்ந்தவர்கள் அதிகம். அதை அனுபவித்து ரசித்தவர்கள் அநேகம். அதைப் பின்பற்றி நடந்து உயர்ந்தவர்கள் இன்னும் அதிகம். ஆனால் படிக்காமலேயே படித்தது போல் நடித்துப் பேசுபவர்களோ ஆயிரம் ஆயிரம்.

படித்துச் சுவைத்து ரசித்து, அதில் ஒன்றிப் போனவர்கள் சிலர். அதற்கு உரையெழுதிப் பார்த்தவர்கள் தங்கள் உணர்வுகளை அதன் மேல் ஏற்றி, தங்களுக்குத் தகுந்த மாதிரி, பொருள் கூறிப் போனாவர்கள் பலர்.

வள்ளுவரைப் பெளத்தர் என்றனர் சிலர். சமணர் என்றனர் சிலர். இந்து மதத்தின் இணையிலாப் பற்றினர் என்றனர் பலர்.

எல்லாவற்றிற்கும், எல்லோருக்கும் அவர் பொருந்து பவராகவே இருந்தார். குறளுக்கு உரை கண்டவர்கள் பரிமேலழகர், தருமர், மணக்குடவர். தர்மதத்தர், நச்சர், பருதி திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காலிங்கர் போன்றோர். முற்காலத்தவர்கள்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், கா.அப்பாத்துரை, புலவர் குழந்தை, தேவநேயப் பாவாணர், புலவர் ஆதித்தனார், கு.ச ஆனந்தன். டாக்டர் மு.வ, வ.உ.சி., திருக்குறள் முனுசாமி, போன்றவர்கள் தற்காலத்தவர்கள். தெளிவுரை என்பதாகச் சொல்லிச் சென்றார்கள்.

நான் சில ஆய்வுக்காக. திருக்குறளைப் படித்து சுவைத்த போது என்னுடைய மனோ நுட்பங்களுக்கு ஏற்ப தெரிந்து கொண்ட புதிய சிந்தனைகளை இந்த நூலில் படைத்திருக்கிறேன்.

**வள்ளுவரின் விளையாட்டுச் சிந்தனைகள்** என்னும் நூலை எழுதும் போதும், வள்ளுவர் எந்த மதத்தைச் சேர்ந்தவர், எந்தக் கடவுளை வணங்கினார் என்ற ஆய்வு நோக்குடன் **'வள்ளுவர் வணங்கிய கடவுள்'** என்னும் புத்தகத்தை எழுதும் போதும் திருக்குறளைத் திரும்பத் திரும்பப் படிக்க நேர்ந்தது.

பல சொற்பொழிவுக் கூட்டங்களுக்குச் சென்றபோது சொற்பொழிவாளர்கள் திருக்குறளுக்குச் சொன்ன விளக்கங்கள் மிகச் சாதாரணமாக இருந்தன என்பதும் எனக்கு புரிய வந்தது.

இவ்வளவு சாதாரண எளியக் கருத்துக்களைச் சொல்வதற்குத் தெய்வமாப் புலவர் திருவள்ளுவர் எதற்கு, என்று என் உள்ளத்திலே ஒரு உறுத்தலான கேள்வி எழுந்தது. அப்பொழுது என் கேள்விக்கு விடையாக ஒரு கவிதை கிடைத்தது.

**'வல்லமையால் சொல்லுக்குள் சொல்லை வைத்தே**

**வள்ளுவனும் மர்மத்தின் மர்மம் சொன்னான்'**

என்னும் அந்த இரண்டு வரிகளும் என் இதயக் கடலைக் குழப்பி விட்டன.

**'கற்க கசடற'** என்னும் குறளானது எப்படி கற்க வேண்டும் என்று சொல்வதைத் தவிர எதைக் கற்க வேண்டும் என்பதைச் சொல்லவில்லை என்று எல்லோரும் பொருள் சொன்னார்கள். ஆனால் வள்ளுவரே 'க' என்ற சொல்லுக்கு உடல், வியாதி, எமன், காமன், இயற்கைப் பஞ்ச பூதங்கள் என்றெல்லாம் பொருள் இருப்பதால் இயற்கையை பயன்படுதுவதற்காக கசடறக் கற்றுக் கொள்ளுங்கள். நோய் இல்லாமல் வளமுடன் வாழக் கற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்லுக்குள்ளே சொல்லை வைத்த அந்த மாமேதையின் திறம் வியந்து மனமகிழ்ந்து பாராட்டினேன். அதுபோல மழித்தலும் நீட்டலும் வேண்டா என்னும் போலித் துறவிகளின் பொய் வேடத்தைப் படம் பிடித்துக் காட்டினார் வள்ளுவர்.

**மழித்தல்** என்ற சொல்லுக்கு மொட்டை அடித்துக் கொள்ளுதல் என்றும், **நீட்டல்** என்ற சொல்லுக்கு நீண்ட முடி, தாடி வளர்த்தல் என்றும், எல்லா உரை ஆசிரியர்களும் பொருள்

சொன்னார்கள். ஆனால், வள்ளுவரின் உள்ளம் எண்ணியதோ வேறு விதமாக இருந்தது.

**மழித்தல்** என்றால் அழித்தல் என்று பொருள். **நீட்டல்** என்றால் பெரும் கொடை என்று பொருள். அந்தக் காலம் தொட்டு, இந்தக் காலம் வரை துறவி வேடம் பூண்ட தீய சக்திகள். தமக்குப் பிடித்தால் ஒவருக்கு வாரி வழங்குவதையும், தமக்குப் பிடிக்காவிட்டால் அவர்களை அழித்து விடுவதையும் கொள்கையாகக் கொண்டு வாழ்ந்ததை வரலாறு விரித்து உரைக்கின்றது. அதற்கு உதாரணமாகப் பிரேமானந்த சாமியார், சந்திராசாமியார் போன்றோர் பலரைச் சான்றாகக் கூறலாம்.

இப்படிப் புகழ் மிக்க சில குறள்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு நண்பர்கள் பலர் என்னிடம் விளக்கம் கேட்ட பொழுது, நான் கூறிய புது விளக்கங்கள்தாம் இன்று இந்தப் புத்தக வடிவிலே உருவாக்கம் பெற்றிருக்கிறது. நான் கூறுகிற புதிய விளக்கங்கள் உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால் மறுப்புத் தெரிவிக்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தால் என்னிடம் நீங்கள் தொடர்பு கொண்டு விவாதிக்கலாம்.

புதிய விளக்கங்களைத் தருவதற்காக நான் அந்த புகழ் மிக்க குறட்பாக்களில் இருந்து எந்தச் சொல்லையும் சேர்க்க வில்லை. எந்தச் செயல்களையும் குறைக்கவுமில்லை மாற்றவுமில்லை. இருக்கும் சொல்லைப் பிரித்துப் பார்த்திருக்கிறேன். அவ்வளவுதான்!

இப்படி ஆய்வு செய்து, கொண்டிருந்த என் முயற்சியைக்கண்டு தமிழறிஞர்கள் பலர் திருக்குறளுக்கு நீங்கள் புதுவுரை எழுதலாமே என்று உற்சாகம் தந்ததின் விளைவாக திருக்குறள் புதுவுரை என்ற நூல் தயாராகிக் கொண்டிருக்கிறது. அறத்துப்பால் முழுவதும் புதுவுரைப் பெற்று வருகிற இரண்டாயிரம் ஆண்டில் ஜனவரி திங்களில் வெளிவர இருக்கிறது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலில் இடம் பெற்றுள்ள குறட்பாககளையும் இங்கே தந்துள்ளேன்.

1. உறங்குவது போலும்சாக்காடு உறங்கி

விழிப்பது போலும் பிறப்பு (339)

2. புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துக்கில் இருந்த உயிர்க்கு (340)

3. நாள்என ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாள்அது உணர்வார்ப் பெறின் (334)

4. கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. (401)

5. பகச் சொல்லி கேளிர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர்.

6. பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

7. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பந்து
வேண்டும் பனுவல் துணிவ. (21)

8. தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று. (236)

9. உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார் (140)

10. அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளிலார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு (247)

11. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான் (1062)

12. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. (423)

13. ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும். (241)

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை

14 அடக்கம் அமரருள் உய்க்கும் அட்ங்காமை
ஆரிருள் உய்த்து விடும். (121)

15. மங்கலம் என்ப மமைனாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு. (60)

16. தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தார் காணப் படும் (114)

17. தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு (129)

18. எண்ணிய எண்ணியாங்கு எய்துப் எண்ணியர்
திண்ணியர் ஆகப் பெறின். (666)

19. மடியிலா மன் னவன் எண்தும் அடியளந்தான்
தாவுலதெல்லாம் ஒருங்கு (610)

20. அகனமர்ந்து செய்யார் உறையும் முகமர்ந்து
நல்விருந்து ஓம்பு வான் (84)

21. ஐயுணர்வு எய்திய கண்ணும் பயமின்றே
மெய்யுணர்வு இல்லா வர்க்கு. (354)

இந்த நூலை அழகுற அச்சிட்டுத் தந்த திரு. ஆர்.ஆடம் சாக்ரட்டீஸ் அவர்களுக்கும், திரு ஏ. கோமதி நாயகம் அவர்களுக்கும், கிரேஸ் பிரிண்டர்ஸ் நிறுவனத்திற்கும் என் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்

**டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா,**
லில்லி பவனம்,
சென்னை - 17.

# ஆய்வுத் தமிழ் பதிப்பகம்

**பதிப்புரை :**

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ், என்ற முத்தமிழ் பிரிவுகளில்தான் இலக்கியங்கள் படைக்கப் பெற்றன. அதனைத் தொடர்ந்து விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக அறிவியல் தமிழ் என்ற புதுப்பிரிவினை ஏற்படுத்தி அறிவியல் நூல்கள் பதிப்பிக்கப் பெற்றன. இப்பொழுது ஆய்வுத் தமிழ் என்ற புதுப் பகுதியினை ஐந்தாவது தமிழாகத் தொடங்கி இருக்கிறோம்.

பழங்கால இலக்கிய நூல்களை ஆய்வு செய்து இன்றைய அறிவியல் கருத்துக்களோடு ஒப்பிட்டு நோக்கி, நமது முன்னோர்கள் எவ்வளவு நுண்மாண் நுழை புலம் பெற்று விளங்கினார்கள் என்று பணியை ஆய்வு செய்து நூல்கள் வெளியிடுவது என்னும் இலட்சியமாக கொண்டிருக்கிறோம். அதற்காக உருவாக்கப்பட்டதே எங்களது ஆய்வுத் தமிழ் பதிப்பகம். எங்கள் முதல் ஆய்வு நூலாக **குறளுக்குப் புதிய பொருள்** என்ற நூல் வெளிவருகிறது. இந்த நூலைத் தொடர்ந்து இதுவரை எழுதப்படாத புது உரை எனத் தொடர்கிறோம்.

1. **திருக்குறள் புது உரை (அறத்துப்பால்)**
2. **திருக்குறள் புது உரை ( பொருட் பால்)**
3. **திருக்குறள் புது உரை (காமத்துப் பால்)**
4. **திரு மூலர் கற்பிக்கும் தேக நலம்**
5. **திருவள்ளுவர் கற்பிக்கும் தேக நலம்.**
6. **வள்ளலார் கற்பிக்கும் தேக நலம்.**
7. **சிற்றிலக்கியம் கற்பிக்கும் தேக நலம்.**

விரைவில் வெளியிட இருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ் அறிந்த தகை சால் பெருமக்கள் எங்கள் இலட்சிய எழுத்துப் பணிக்கு ஆதரவு தந்து உற்சாகப் படுத்தி வழிகாட்டி வாழ்த்துமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.

பதிப்பகத்தார்

## பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| 1. பிறப்பும் சாக்காடும் | 10 |
| 2. உடம்பும் உயிரும் | 15 |
| 3. நாளும் வாளும் | 20 |
| 4. கற்க நிற்க | 26 |
| 5. கேளிர் கேளிர் | 31 |
| 6. பிறப்பும் சிறப்பும் | 36 |
| 7. துறவும் உறவும் | 41 |
| 8. தோற்றமும் புகழும் | 46 |
| 9. கல்லாரும் கற்றவரும் | 51 |
| 10. அவ்வுலகமும் இவ்வுலகமும் | 56 |
| 11. இரந்து வாழும் ஈனம் | 61 |
| 12. பொருள் பொதிந்த பொருள் | 66 |
| 13. ஒத்ததும் செத்ததும் | 71 |
| 14. அடக்கமும் அடங்காமையும் | 76 |
| 15. மண்கலமும் நன்கலமும் | 82 |
| 16. எச்சமும் மிச்சமும் | 88 |
| 17. புண்ணும் வடுவும் | 94 |
| 18. எண்ணியரும் திண்ணியரும் | 99 |
| 19. மடியும் அடியும் | 105 |
| 20. செய்யாளும் பொய்யாளும் | 110 |
| 21. ஐயுணர்வும் மெய்யுணர்வும் | 117 |
| 22. மழித்தலும் நீட்டலும் | 123 |

# 1. பிறப்பும் சாக்காடும்

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு

சாக்காடு - உறங்குவது போலும்; பிறப்பு - உறங்கி விழிப்பது போலும் என்றே எல்லா ஆசிரியர்களும் உரை எழுதிப் போயிருக்கின்றனர்.

உறக்கம் சாவைப் போன்றது. பிறப்பு விழித்து எழுவது போன்றது. இவ்வளவு எளிய செய்தியை எல்லாம் அறிந்த வல்லவரான வள்ளுவர், இந்தச் சாதாரண செய்தி பற்றிப் பாடியிருப்பாரா? அதில் உள் நோக்கம் இருக்குமே! பொடி வைத்துப் பேசுவதில் மட்டுமல்ல. போடுகிற சொல்லையும் பல சிந்தனைகள் உண்டாக்குவது போலத்தானே சொல்லி இருப்பார்!

அதன் விளைவுதான் இந்தப் புது விளக்கம்.

சாக்காடு என்றால் சாவு என்று பொருள் உண்டு. அதைச் சொல்லி இருப்பார்! செத்துப் போவது என்பார்கள். சத்துப் போவதால்தான் செத்துப் போவது என்று கூறுவது இன்றைய ஆராய்ச்சியின் முடிவாக இருக்கிறது.

உடம்பில் சத்துக் குறைய குறைய. உறுப்புகள் தளர்ந்து தளர்ந்து மெலிந்து, வதங்கி குறுகித்தான் உயிர்கள் மடிந்து போகின்றன. உடல்கள் நைந்து சாகின்றன என்பது எல்லோரும் அறிந்த உண்மைதான்.

இங்கே வள்ளுவர் கூற வருகின்றதாக என் கருத்தைப் பார்ப்போம். சாவில் இருப்பது போல் நாம் உறங்கும் உறக்கம் இருக்கிறது. அதாவது சாக்காடு போலும் உறங்குவது என்பதன் பொருளாக வருகிறது. பிறப்பு என்றால் தொடக்கம். ஆரம்பம் என்பது பொருள்.

உறங்கி விழித்ததும் வாழ்க்கை ஆரம்பமாகி விடுகிறது. விழித்தது போலும் பிறப்பு என்பதே இதன் பொருளாகிறது. கண்களை மூடி உறங்குகிறோம். எதற்காக?

ஒவ்வொரு நாளும் பகலில் விழித்திருக்கும் போது நாம் பலதிறப்பட்ட முயற்சிகளில் ஈடுபட்டு 'மிகவும் களைத்துப் போகிறோம். இவ்வாறு உழைப்பிலும் ஒரு முகப்பட்ட முயற்சிகளிலும் ஏற்பட்ட களைப்பும், இளைப்பும் தீரும் பொருட்டுத்தான், நாம் இரவிலே விழிப்பு ஏற்படாமல் கனவுகளால் அலைக்கழிக்கப்படாமல், அரைத்தூக்கம் குறைத் தூக்கம் என்று தூக்கமில்லாமல். நன்றாக விழிக்கையில் உடல் சுறுசுறுப்புடன் எழுகிறது.

களைப்பு நீங்கிய உடம்பும் மனமும், மீண்டும் பணிகளை ஆற்ற முனைகிறது; விரைகிறது. தட்டுத் தடங்கலின்றித் தொடர்கிறது; ஆகவே, தூக்கம் என்பது, உழைப்பினால் உடம்பின் வழியாக உயிருக்கு வந்த களைப்பு நீங்கப் பெறுதற்கேயாம். சரியான உறக்கம் இல்லையென்றால உடலின் ஆற்றலில் சரிவு ஏற்படுகிறது.

உதாரணத்திற்கு ஒன்றைப் பார்போம்.

விளக்கு எரிகிறது. அதனால் எரிகின்ற திரியும் அகல் விளக்கில் இட்ட எண்ணெயும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டேவருகிறது. மீண்டும் எண்ணெயும் திரியும் இருந்தால் விளக்கு எரியும். இல்லையேல் ஒளியும் இல்லை. விளக்கினால் பயனும் இல்லை.

அதுபோலவே, நமது உடம்பும் மூளையும் பணியில் ஈடுபடுகிற போது இரத்தமாகிய எண்ணெயும் திரியாகிய மூளைச் செல்களும் மற்றும் நரம்புகளும், களைத்துப் போகின்றன. வலிமை குன்றுகின்றன.

அதற்காகத்தான் உடம்பானது உணவைக் கேட்கிறது. தாகத்தை ஏற்படுத்தித் தண்ணீரைக் குடிக்கிறது. சோறும் தண்ணீரும் உடலுக்கு வலிமை ஏற்பட உதவுகின்றன என்றால் அவைகளுக்கு மேலும் உதவத்தான் உறக்கம் வருகிறது.

தூக்கம் என்பது இரண்டு வகைப்படும். ஒன்று அறியாமை என்னும் இருளில் ஏற்படும் தூக்கம். இது சாதாரணமாக, எல்லா

உயிரினங்களுக்கும் ஏற்படும் - இரவில் உள்ள **இருளில் தூக்கம்.**

இரண்டாவது அரிதுயில் என்பது, பொதுவாகத் தவத்தில் உள்ளவர்கள் அல்லது புலனடக்கம் நிறைந்தவர்கள், மற்றும் மெய்யறிவு பெற்றவர்கள் இடத்து ஏற்படும் - **அருளில் தூங்கும் தூக்கம்.**

**"ஆங்காரம் உள்ளடக்கி, ஐம்புலனைச் சுட்டெரித்து**
**தூங்கிச் சுகம் பெறுவது எக்காலம்"**

என்று பெரியார்கள் ஏங்கிப் பாடியதைக் கேட்டீர்களா!

இங்கே நாம் குறிப்பிடுவது செத்த நிலை போல உறங்குவது என்பது. சுகமான நித்திரை. ஆழ்ந்த நித்திரை. அல்லது நிம்மதியான நித்திரை என்றுகூட நாம் கூறலாம். இப்படி செத்துக் கிடப்பதுபோல எப்போது தூக்கம் வருகிறது? உடலில் தொல்லைகள் இல்லாத போதும் மனத்தில் கவலைகள் இல்லாத போதும்தான்.

குறை வயிற்றுக்காரனுக்கும் குத்துப்பட்ட மனிதருக்கும் தூக்கம் குறைவு. தூக்கமே வராது என்பது பழமொழி.

உடலும் மனமும் வலிவாகவும் தெளிவாகவும் இருந்தால் தான், செத்திருப்பது போல உறக்கம் வரும். இதைத்தான் விழித்திருக்கும் போதே, பயிற்சி செய்திடச் **சவாசனம்** என்னும் ஆசனப் பயிற்சியை அறிவாளர்கள் மேற்கொண்டார்கள்.

மல்லாந்து படுத்துக் கை கால்கள் உறுப்புக்களைத் தளரவைத்து மனத்தை ஒருமுகப்படுத்திச் சவம் போலக் கிடக்கும் உறக்க நிலை. இதில் உறங்கவும் கூடாது. விழித்திருக்கவும் கூடாது என்ற புலன் அடக்க நிலை.

இப்படிப்பட்ட இனிய நிலையை ஆஸ்கார் ஒயில்டு என்னும் ஆங்கிலக் கவிஞன் இப்படிப் பாடுகிறான்.

'Death is the brother of sleep'.

இறப்பின் உடன்பிறப்புதான் உறக்கம். இதையே அப்துல்

ரஹ்மான் என்னும் கவிஞர் பாடுகிறார். **உறக்கம் என்பது மரணத்தின் ஒத்திகை.**

நல்ல மனமும் நல்ல உடலும் இருக்கிறபோது உண்டாகிற உறக்கம் அமைதியானது. அலை பாயாதது. அப்படி உறங்கி விழித்தபிறகு அதிகாலையில் உண்டாவது பிறப்பு என்கிற ஆரம்பம். அதாவது வாழ்க்கையின் தொடக்கம்.

மீண்டும் அந்த நாளை, புத்துணர்ச்சியோடு தொடங்க வேண்டும். புதுப் பொலிவுடனும் புது வலிவுடனும் ஆரம்பித்து இனிவரும் நேரத்தை எதிர்வரும் சவால்களைச் சமாளிக்க வேண்டும். அதற்காக நீ எப்பொழுதும் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

**களைப்பை நீக்கும் உறக்கமும், அடுத்த நாள் உழைப்பை ஏற்கும் ஆரம்பமும்தான் ஒருவரைச் சிறந்த மனிதனாக்கும்** என்று கூறிய வள்ளுவர், இந்தப் பாடலை நிலையாமை என்னும் அதிகாரத்தில் வைத்தார்.

பொருள்தான் வாழ்க்கையின் பொற்பீடம் என்பதுபோலப், பொருள் சார்ந்த கருத்துக்களைச் சந்தர்ப்பம் பார்த்து, விதைத்துவிட்டு மகிழ்ந்தனர். உரையாசிரியர்கள். ஆனால் வாழ்க்கை இயலை, பொருளியல் என்று பேசினார்களே ஒழிய இதை மனிதவள உடலியல் என்றுஇதுவரை யாரும் எழுதவும் இல்லை பேசவும் இல்லை.

வள்ளுவர் அறம், பொருள், இன்பம் என்னும் இலட்சியத்துடன் பாடினார் என்றால், அறத்தைப் பின்பற்ற, பொருளைத் திரட்ட, இன்பத்தை முழுதும் நுகர, அதற்கு அடிப்படை ஆதாரமாக உடல் அமைந்திருக்கிறது. அதனைக் காத்து, வளர்த்து, உயர்த்தி உயர்ந்த வாழ்வு வாழுங்கள் என்னும்கருத்தை, மறைபொருளாக வைத்துப் பாடிச் சென்றார். அந்த மறைபொருளை மற்ற உரையாசிரியர்கள் தொடவே இல்லை என்பதால், என் விளையாட்டுத்துறை உடல்துறை பற்றிய அறிவைத் தெளிவாக்கவே இந்த ஆய்வு என்று கூறி, மீண்டும் தொடர்கிறேன்.

நிலையாமை என்பது 34 ஆம் அதிகாரம்.

நிலையாமை என்றால் எல்லோரும் நிலை+யாமை என்று பிரித்து, யாமை என்றால் இல்லை என்றும், நிலை இல்லாமை என்றும் வாழ்வுக்குப் பொருள் கூறினார்கள்.

நிலை இல்லை என்பதை வள்ளுவர் மிகச் சாதாரணமாகவா சொல்லியிருப்பார்? அதன் உள்ளே மறைந்து கிடக்கும் உண்மை என்று தெரிந்து கொள்ள நிலையாமை என்ற சொல்லைப் பிரித்துப் பார்த்தேன்.

நிலை+யாம்+மெய் என்றுபிரிந்து கொண்டது. யாம் என்றால் எனது! மெய்ந்நிலை என்றால் உண்மை நிலை. உடம்பு நிலை என்று பொருள் வந்தது.

நமது உடம்பு நிலையில்லாதது என்பதைவிட நமது உடம்பின் உண்மை என்ன? உடம்பின் நிலை என்ன என்று எண்ணிப் பார்க்கும் பே¯து நமக்குப் பல புதிய சிந்தனைகள் பிறக்கின்றன. அவற்றையும் பார்ப்போம்.

நமது உடம்பின் சக்தியானது நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது, நலிந்து கொண்டே வருகிறது என்பது மெய்நிலை.

அரிய சக்திபெற்ற மனித உடலை இப்படி அநியாயமாக அழிய விடாமல், **'சக்தி இருக்கிற பொழுதே சாதித்துக் கொள்; காலத்தை வீணாகக் கழிககாதே'** என்பதுதான் உண்மைநிலை

இந்தக் கருத்தைத்தான் உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு என்று பாடி வள்ளுவர் வலியுறுத்தினார்.

# 2. உடம்பும் உயிரும்

2. புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு (340)

நிலையாமை அதிகாரத்தில் வருகிற பத்தாவது குறள், கடைசிக் குறள் இது. இதற்குப் பொருள் எழுதியவர்கள் தந்த கருத்துகள் இவைதாம் ''வாத முதலியவற்றில் இல்லாய உடம்புகளுள் ஒதுக்கிருந்தே போந்த உயிர்க்கு எஞ்ஞான்றும் இருப்பதோம் இல்இதுகாறும் அமைந்ததில்லை போலும்'' என்று பரிமேலழகர் இதற்கு உரை எழுதிச் சென்றார்.

உடம்பின் ஒரு பக்கமாக உயிர் ஒதுங்கியிருக்கிறது என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதன்று, இதன் பொருளே வேறு.

துச்சில் என்றால் ஒதுக்கிடம், சரீரம், தங்குமிடம் என்று பல பொருள்கள் உண்டு.

புக்கில் என்றால் உடல், வீடு, தங்குமிடம், புகலிடம் என்று பல அர்த்தங்கள் உண்டு.

கொல் என்றால் ஒரு அசைச் சொல். பூட்டு, ஓர் ஐயப் பொருளில் வரும் இடைச் சொல். பெரும்பாலும் செய்யுளில் வரும் ஓர் அசைநிலை. குறுக்குத் தாழ் என்று பல பொருட்கள் உண்டு.

நான் மற்றவர்கள் துச்சில் என்பதற்கு ஒதுக்கிடம் என்று கூறியதை தவிர்த்து,. தங்குமிடம், புகலிடம் என்று பொருள் கொண்டிருக்கிறேன்.

கொல் என்றால் எல்லோரும் அசைச் சொல் என்று அர்த்தம் கண்டனர்.இங்கே நான் பூட்டு, குறுக்குத்தாழ் என்று பொருள் கொண்டிருக்கிறேன். இங்கே நான் கூறவந்த பொருளை இப்பொழுது தொகுத்துக் கூறுகிறேன்.

உடம்பின் உள்ளே முழுவதுமாக நிறைந்து தங்கியிருக்கும் உயிர் புகுந்த இடமான உடல், என்றும் நிலைத்திருப்பது போல், அடைத்துக் காக்கின்ற

தாழ்ப்பாளான பூட்டு எதுவும் உண்டோ? அடைக்கும் தாழ்ப்பாள் எதுவும் இல்லாத உடம்பு இது!

உடலில் தாழ்ப்பாள் போட்டுத் தடுத்து நிறுத்தக்கூடிய வழிகள் எதுவும் இல்லை. ஏனென்றால், உடல் என்பது ஒன்பது வாயில் கோட்டை. வாயில் வழியே உயிர் போக எப்போதும் தயாராகவே இருக்கிறது.

இங்கே உயிர் என்பது பிராணன். பிராணன் என்றால் காற்று அதாவது உயிர்க்காற்று.

உயிர்க்காற்றுதான், உடல் முழுவதும் உயிராக மாறி வந்து, உயிர்ப்புச் சக்தியைத் தந்து, உலா வந்து கொண்டிருக்கிறது. உடல் உயிர்க்காற்று நிறைய இருக்கும் வரையில் உடலுக்கு ஊறு இல்லை. வருத்தமும் நோயும் இல்லை.

உடம்பில் பிராணன் குறையக் குறைய, பிராணன் போகிறதே என்ற புலம்பல்தான் மக்களிடமிருந்து அலைபாய்ந்து வருகிறது.

உயிர்க்காற்று என்பதுதான் உயிராக வந்திருப்பதைப் பாருங்கள்.இந்தக் காற்றாகத் திரியும் உயிரானது உடம்பு முழுதும் நிறைந்திருக்கிறது. இது ஓரமாக ஒதுக்குப்புறமாக உடலில் இருக்கிறது என்றால், அது எப்படி முடியும்?

உயிர்க்காற்று எரிந்து குறைந்தவுடன் அங்கே கரியமல வாயுவானது இடம்பிடித்துக் கொள்கிறது.

உயிர்க்காற்று எரிந்து குறைந்தவுடன் அங்கே கரியமில வாயுவானது, ஓடிவந்து இடம்பிடித்துக் கொள்கிறது. எங்கெங்கே கரியமில வாயுவானது உடலில் இடம் பிடித்துக் கொள்கிறதோ. அங்கெல்லாம் வலியும் வருத்தமும் மிகுதியாகிவிடுகின்றன.

மீண்டும் அந்த இடத்திற்கு அதிகமாக உயிர்க்காற்று வந்தவுடன்தான், உடலில் ஏற்பட்ட அசதியும் துன்பமும் அகன்று போய் விடுகிறது.

இன்னொன்று, உடலில் காயம்பட்டோ அல்லது தீப்பட்டோ இருந்தால் அந்த இடத்திற்குச் சரியான இரத்தமும் உயிர்க்காற்றும் போகாமல் இருப்பதால்தான் அந்த இடம் கறுத்துப் போகிறது; கன்றியும் போகிறது; அழுகும் நிலைக்கு ஆளாகிறது.

மீண்டும் அந்தப் பகுதிக்குள் உயிர்க்காற்று போகிறபோதுதான் பாதிக்கப்பட்ட உறுப்புக்கள் பழைய நிலையை அடைகின்றன; புத்துணர்ச்சி பெறுகின்றன.

ஆகவே, உயிரானது ஒதுங்கியிருந்தால், உடல் உறுப்புகளுக்கு வாழ்வும் இல்லை; வளர்ச்சியும் இல்லை; செயல்பாடும் இல்லை.

எனவே உடல் முழுவதும் உயிர் இருக்கிறது என்பதுதான் இன்றைய உடலியல் வல்லுநர்களின் அரிய கருத்தாகும்.

இப்படி உடல் முழுவதும் புகுந்து தங்கியிருக்கின்ற (காற்று) உயிர்க்காற்றானது பத்து விதமாகப் பிரிந்து தமக்குரிய தொழிலைத் தொய்வுறாமல் செய்து வருகின்றது என்ற உண்மை நிலையையும் இங்கே நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

பிராணன் என்கிற உயிர்க்காற்றானது பத்துவிதக் காற்றாகப் பிரிந்து கொள்கின்றன. பிராணன், அபாணன், சமானன், வியானன், உதானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்செயன் என்றெல்லாம் அதற்குப் பிரிவு சார்ந்த பெயர்கள் உண்டு. இனி அந்தப் பிரிவுக் காற்றின் பணிகளையும் இங்கே காண்போம்.

**1. பிராணன்:**

சுவாசத்தைக் கட்டுப்படுத்துவதுடன் இதயப் பகுதி முழுவதையும் சரியாக இயக்கும் பணியைச் செய்கிறது; செய்விக்கிறது.

**2. அபாணன்:**

உடலில் உள்ள கழிவுப் பொருட்களை உரிய முறையில்

உரிய நேரத்தில் வெளியேற்றும் வேலையைச் செய்கிறது.

**3. சமாணன்:**

உண்ணுகிற உணவுப் பொருட்களைச் சிறப்பாக ஜீரணம் செய்யும் பணியைச் செம்மையாகச் செய்ய வைக்கிறது.

**4. உதானன்:**

காற்றை உள்ளே இழுக்கும் போதும் உணவு உட்கொள்ளும் போதும் எதுவும் இடையூறாக ஏற்பட்டுவிடாமல் கட்டுப்பாட்டுடன் அந்த உறுப்புகளை நெறிமுறையுடன் இயக்கி வருகிறது.

**5. வியானன்:**

உணவுச் சத்தையும் உயிர்க்காற்றையும் எல்லாச் செல்களுக்கும் ஏந்திச் சேர்க்கும் பணியைக் காட்டி வழி நடத்துகிறது.

**6. நாகன்:**

கரியமில வாயுவை எருவாயின் கீழ் வழியாக வெளியேற்றுகிறது.

**7. கூர்மன்:**

கண்களில் திடீரென்றுப் பாயும் வெளிச்சத்திலிருந்தும் வருகிற தூசிகளிலிருந்தும் இமைகளைத் திடீரென்று இயக்கி மூடச் செய்து கண்களைக் காப்பாற்றுகிறது.

**8. கிரிகரன்:**

மூக்கின் வழிகள் அடைபடாமல் சுத்தப்படுத்தி சுகமாகப் பணியாற்ற வைக்கிறது.

**9. தேவதத்தன்:**

உடம்பில் உயிர்க்காற்று குறைகிற இடங்களில் எல்லாம் தேவையான உயிர்க்காற்றைக் கொண்டுபோய் நிரப்புகிற பணியைச் செய்கிறது. கொட்டாவி மூலம் நிறைய காற்றைப் பெற வைக்கிறது.

**10. தனஞ்செயன்:**

உயிர் பிரிந்த பிறகு சிறிது நேரம் தங்கி இருந்து பின் வெடித்து வெளியேறுகிற வீங்கற் காற்றுதான் இது. இந்தக் காற்று வெளியேறிய பிறகுதான் உடல் வீங்குகிறது; நாற்றமெடுக்கிறது; கனக்கிறது.

இவ்வாறு பல பிரிவுகளாகப் பிரிந்து பணியாற்றுகிற உயிர்க்காற்று ஒதுங்கியிருந்தால் உடல் உறுப்புக்கள் என்ன ஆகும். இவ்வாறு உரம் பெற்ற உயிரானது உடல் முழுவதும் தங்கி இருக்கிறபோது அது போய்விடாமல் காக்கின்ற பூட்டும், குறுக்குத் தாழ்ப்பாளும் (Volves) உடலுக்குள் இல்லை அல்லவா?

அப்படித் தடுக்க இயலாத தேகத்திற்குள் தங்கி இருக்கும் உயிரையும், உயிர்ப்பான உடலையும் வைத்துக் கொண்டு வீணாக நேரத்தையும், நாட்களையும் போக்குவது கடைத்தனம் அல்லவா! மடத்தனம் அல்லவா! நீங்கள் மனிதர்கள் தாமே!

ஆகவே, நமது உடலின் உண்மை நிலையை நமது வாழ்க்கையின் மெய் நிலையை மக்கள் உணர்ந்து கொண்டு, நேரத்தே வேண்டியதைச் செய்து வளமாக வாழ வேண்டும் என்ற மெய்ப் பொருளைத்தான் மறைபொருளாகப் பாடியிருக்கிறார் வள்ளுவர்ப் பெருந்தகை.

காக்கும் கதவில்லாத, தடுக்கும் தாழ்ப்பாள் இல்லாத கதவுள்ள வீட்டுக்குப் பாதுகாப்பு இல்லை அல்லவா? அப்போது வீட்டுக்காரரர் மிகவும் எச்சரிக்கையாக வாழ வேண்டும் அல்லவா! அதுதானே புத்திசாலித்தனம்.

புகுந்து வாழ்ந்து போகிற உயிரை பிடித்து நிறுத்த பூட்டில்லாத தேகத்தின் உண்மை நிலையைத் தெரிந்து கொள்ளுங்கள். அதற்கேற்றவாறு புத்திசாலித்தனமாக வாழுங்கள் என்றுதான் வள்ளுவர் போதிக்கிறார். இந்த மெய்ந்நிலைதான் வாழ்வின் மேன்மை நிலையாகும். உயிர் இருக்கும் போதே இந்த உணர்வுடன் வாழுங்கள் என்னும் வழியில் நாமும் வாழலாமே!

# 3. நாளும் வாளும்

நிலையாமை என்றால், நிலை இல்லை என்றும், நிலையில்லாத வாழ்வு என்றும் பிரித்துப் பொருள் தந்திருக்கின்றார்கள் பலர். நிலையாம்மெய் என்று பிரித்து, நம் உடம்பின் நிலை என்ன? உண்மை நிலை என்ன? என்று நாம் பிரித்துப் பொருள் கண்டிருக்கிறோம். விளக்கமும் தந்திருக்கிறோம். நிலையாமை என்ற அதிகாரத்தில் நான்காவதாக வருகின்ற பாடல்பற்றி இப்போது பார்ப்போம்.

நாள்என ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாள்அது உணர்வார்ப் பெறின் (334)

நாள் ஒன்று வந்து போவது, உயிரை அறுக்கின்ற வாளாக இருப்பதை, அறிவுடையோர் உணர்வார்கள் என்பதாகப் பொருள் கூறுவதாக, எல்லா உரைகளுமே இருக்கின்றன.

புதியதான பச்சை மண்குடம் ஒன்று இருக்கிறது. அதற்குள்ளே தண்ணீரை முழுவதுமாக நிறைத்து வைக்கிறோம். அதிலிருந்து அந்த நீர் ஆவியாகிப் போய்விடாமல் இருப்பதற்காக, நல்ல மூடியாக அல்லது கனமான துணி ஒன்றால், அதன் வாயை மூடிக் கட்டி, காற்றுகூட உள் நுழையாதவாறு காத்துவிட முயற்சிக்கிறோம். நமக்குள்ளே ஒரு நம்பிக்கை தண்ணீர் பத்திரமாக இருக்கிறது. பாதுகாப்பாக இருக்கிறது என்ற பெரும் திருப்தியுடன் இருக்கிறோம்.

சில நாட்கள் கழிகின்றன.

சிந்தையிலே பரபரப்புடன் பானையின் வாயிலில் கட்டியிருந்த துணிக்கட்டை அவிழ்த்து விட்டு உட்புறம் பார்க்கிறோம்.

வாய்வரை அலையாடிக் கொண்டிருந்த தண்ணீரின் அளவு, அப்படியே இல்லை. அளவு குறைந்திருக்கிறது.

இருந்த தண்ணீர் எங்கே போயிற்று! மண்குடம் குடித்து விட்டதா? மறைத்தபோதும் சூரியக் கதிர்கள் நுழைந்து குடித்து விட்டனவா?

கண்ணுக்கு நேராக கட்டி வைத்ததை, காத்து வந்ததைக் காணவில்லையே? எங்கு மறைந்து போயிருக்கும்?

மண்குடத்திற்கு ஒரு மகிமை உண்டு. அதுதான் கசிகிற தன்மை. வாயில் வழியே தண்ணீர் வெளியே போக முடியாதவாறு இருந்தாலும், அந்தக் குடத்தைச் சுற்றியுள்ள பகுதியிலெல்லாம் கசிந்து கசிந்து, ஒசிந்து ஒசிந்து ஆவியாகி விட்டது. இதுதான் உண்மை.

இந்த உண்மைக்கும் உடலின் தன்மைக்கும் நிறைந்த ஒற்றுமை உண்டு. உடம்புக்கு **குடம்** என்றும் **கடம்** என்றும் பெயர்கள் உண்டு.

குடத்துக்குள்ளே தண்ணீர் இருப்பதுபோல, உடலுக்குள்ளே உயிர்க்காற்று நிறைய இருக்கிறது. நிறைந்து இருக்கிறது.

குடத்தைச் சுற்றி தண்ணீர்க் கசிவு கொள்ள, மண்பானையில் நுண்ணிய கண்கூறுகள் உண்டு. அதுபோலவே ஒன்பது வாசல்கள் உடலில் உண்டு. தேகத்திலும் தோலில் கண்கூறுகள் எண்ணற்ற எண்ணிக்கையில் உண்டு.

உடலிலே உயிர்க்காற்றானது, உயிர்ப்புச் சக்தியைத் தந்து கொண்டே இருக்கிறது. இந்த உயிர்ப்பிலே ஏற்படுகின்ற அயிர்ப்பானது (மாறுபடுதல்) உடலின் சக்தியை வளர்ப்பதும் குறைப்பதும், இழப்பதும், உழப்பதுமாக மாறிக் கொண்டே வருகிறது.

உடல் மாறிக் கொண்டு வரும் தன்மையைத்தான், இளமை என்றும் முதுமை என்றும் குறித்துக் காட்டுவார்கள். பலத்தின் நலத்தின் மேன்மையைப் பற்றி பிரித்துக் காட்டுவார்கள்.

பசுமையாக, வலிமையாக இருக்கும் நிலையை இளமை என்றும், முற்றி முதிர்ந்து போய், ஒட்டித் தளரும் நிலையை முதுமை என்றும் எல்லோருமே விளக்கிக் கூறுவது யாவர்க்கும் தெரியும்.

இளமைக்கு எத்தனை வயது? யாருக்குத் தெரியும்? இன்னும் கண்டு பிடிக்கப்படாத உண்மை இது.

இளமை எத்தனை வயதில் முடிகிறது? முதுமை எந்த வயதில் தொடங்குகிறது? இளமை முடியும் இடம் எங்கே? முதுமை வந்து பிடிக்கும் இடம் எங்கே? முதிர்ந்த இந்த கேள்விக்கு உதிர்ந்த பதில்கள் கேட்பவர்களுக்குரிய ஐயத்தை இன்னும் நீக்கி விட வில்லை.

இந்த இளமை நிலையும் முதுமை நிலையும் வாழ்ந்து விட்ட ஆண்டுகளுக்காகவும் வயதுக் கணக்கு அதிகமாகி விட்டதற்காகவும் வருவதும் அல்ல.

உடலில் உள்ள அடிப்படை ஆதாரமான செல்கள், வளர்ச்சி அடைந்து கொண்டே வருகிறபோது, வாலிபம் இருக்கிறது.

உடலின் செல்கள், வளர்ச்சி பெற்று பிரிந்து விட இயலாமல் (Metabolism) மென்மேலும் தளர்ச்சி யடைகிறபோது தள்ளாமை வந்து விடுகிறது என்கிற உண்மை நமக்குப் புரிகிறது.

இது எங்கே எப்பொழுது இடம் பெறுகிறது? எப்படி இடம பிடிக்கிறது என்கிற சூட்சமம் தான் இன்னும் மர்மநிலையாக மண்டிக் கிடந்து கொண்டிருக்கிறது.

இதற்குப் பதில் கூறுகிற வகையில்தான் வள்ளுவரும் இந்தப் பாடலைப் பாடிச் சென்றிருக்கிறார்.

உயிரை அறுக்கும் வாளாக, நாள் ஒன்று வந்து போகிறது என்பதுதான் வள்ளுவர் வழி என்பதில், மேலோட்டமான கருத்தைத்தான் நம்மால் தெரிந்து கொள்ள முடிகிறது.

இந்தக் குறளுக்குள் இன்னும் கொஞ்சம் ஆழ்ந்து செல்வோம். நெஞ்சத்தில் நமக்குப் புரிகிறது, புலன்படுகிறது என்னவென்று பார்ப்போம்.

**நாள் என** என்பதற்கு ஒரு காலப்பொழுது என்றனர்.

**நாள்** என்ற சொல்லுக்கு ஆயுள், பகல், இளமை, எல்லை என்று பல பொருட்கள் உண்டு.

நாள் என என்கிறபோது இளமையும் புதுமையும் வாழ்கிற நாளின் எல்லையைக் குறித்துக் காட்டக்கூடிய தினமாக, ஆயுளை குறித்துக் காட்டக்கூடிய விதமாக அர்த்தம் வருகிறது.

ஒன்று என்பதற்கு ஒற்றுமை, மதிப்பிற்குரிய பொருள், ஒப்பற்றது என்று பல பொருள் உண்டு.

காட்டி என்பதற்கு உதாரணம், ஒளி, காண்பித்தல், விளக்கு, கருவி என்று பல சுவையான பொருட்கள் உண்டு.

ஈர் என்பதற்கு பசுமை, இழுத்தல், நுண்மை, பிள, அறு என்றும்,

வாள் என்பதற்கு கத்தி என்றும் ஒளி என்றும் பல பொருள்கள் உண்டு.

உணர்தல் என்பதற்கு அறிதல்,ஆராய்தல், துயிலெழுதல், அயர்வு நீங்குதல், தெளிதல், பகுத்தறிதல், அனுபவித்தல் என்றும் அர்த்தம் உண்டு.

இப்பொழுது நாம், தெரிந்து கொண்ட புது அர்த்தங்களுடன், இந்தக் குறளுக்குரிய இயல்பான பொருளைத் தெரிந்து கொள்வோம்.

நாள் என்பது இரவும் பகலும் கொண்ட ஒரு கால அளவு. அது ஆயுளை அளித்திருப்பதுடன் ஒவ்வொரு நாள் தொடங்குகிற போதும், புதுமையான பல நிகழ்ச்சிகளைப் பிறப்பித்துக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்டப் புதுமைகள் ஏற்படுவதற்கு ஓர் அளவு இருக்கிறதா என்றால் அதற்கு எல்லையே இல்லை.

ஆகவே, இரவும் பகலும் என்று ஒருநாள் இருப்பது, இருளும் ஒளியும் என்பதான இயல்பு நிலை. அதுபோ

உயிருக்கு இரண்டு நிலை உண்டு. ஒன்று **உயிர்ப்பு** என்பது பகல்போல. ஒளிபோல. **அயிர்ப்பு** என்பது இரவுபோல இருள்போல.

உயிர்ப்பு எழுச்சியையும் அயிர்ப்பு தளர்ச்சியையும் கொடுப்பது. ஆக, நாள் என்பதும் உயிர் என்பதும் ஒன்றுபோல உள்ளது என்பதற்காகவே ஒன்று போல காட்டி என்றார். அதாவது உதாரணமாகக் காட்டி இரண்டின் ஒற்றுமையும் ஒப்பற்றவையே என்பதைக் காட்டியிருக்கிறார்.

நாளும் உயிரும் கொண்டிருக்கும் நுண்மையை, பசுமையை, இனிமையை, இழுக்கின்ற சக்தியாக வாள் இருக்கிறது. வாள் என்றால் கத்தி . அறுக்கும் ஓர் ஆயுதம் என்ற அர்த்தத்திலிருந்து, நாம் இங்கே சற்று மாறுபடுகிறோம்.

நாளின் தன்மையையும் உயிரின் தன்மையையும் இணைத்துக் காட்டி அவற்றின் பெருமையை விளக்கும் ஒளியாக நமது உடலின் உண்மை நிலை இருக்கிறது.

அந்த உண்மை நிலை என்ன? உணர்தல் எப்படி?

உணர்தல் என்பதற்கு துயிலெழுதல்; அயர்வு நீங்குதல் என்று அர்த்தம்.

உடல் உறங்குகிறபோது உயிர்ப்பு சக்தி குறைந்து வருகிறது. விழித்ததும், உயிர்ப்பு சக்தி கூடி விடுகிறது.

இருளும் பகலுமாக விளங்குகிறது உலகம்.

உயிர்ப்பும் அயிர்ப்புமாக விளங்குகிறது உயிர்.

இந்த உலகம் என்னும் இடத்தில் உயிர் நிறையாக உலா வர, உடல் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

உயிர்ப்புச் சக்தியை வளர்த்துக் கொண்டு உடலின் சக்தியை நிறைத்துக் கொண்டு, உலக வாழ்க்கையின் உண்மை நிலையை உணர்ந்து கொண்டு, ஒப்பற்ற வாழ்வு வாழ்ந்திட வேண்டும் என்பதைத், தெளிந்து அறிந்து கொள்ள வேண்டும்.

அப்பொழுதுதான் பயனுள்ள வாழ்வு வாழமுடியும்.

வாள் என்பதற்குச் சத்தி என்பது போல, ஞானம் என்றும் அர்த்தம் உண்டு. அதனால்தான் வாள் இது என்றார். மிகுந்த ஞானம் கொண்டு, உயிரைக் காக்கும் கலையைத் திறம்படச் செய்து வாழ வேண்டும். இதைத்தான் உணர்வார்ப் பெறின் என்றார்.

எப்போதும் உயிரின் உயிர்ப்புச் சக்தியைப் பகல்போல வைத்து , இரவு நேரத்தில் மாறுபடுகிறபோதும், காத்துக் கொண்டு உயிரைக் காப்பதும் உடலை வளர்ப்பதும் உயர்ந்த ஞானம் (இது) என்கிறார். அந்த ஞானம் ஆராய்ந்து தெளிகிற, பகுத்தறியும் பண்பாளர் யாவர்க்கும் வரும் என்கிறார் வள்ளுவர்.

நாள் வந்து உயிரை அறுக்கும் வாளாக இருக்கிறது என்பது எதிர்மறைச் சிந்தனை(Negative thinking)

நாள் வந்து உயிருக்கு ஒளி தருகிறது.ஒவ்வொருவருக்கும் வளமாக வாழ்கிற ஞானத்தைத் தருகிறது என்பது உந்து முறைச் சிந்தனை (Positive thinking) ஆமாம் நடைமுறைச் சிந்தனை.

ஆகவே, நாள் வருகிறது. வந்து போகிறது. அந்த நாளை வீணாக்காமல், ஆற்றலை வளர்த்து, அரிய வாழ்வு வாழ வேண்டும். இந்த உலகில் நிலைக்காமல் போகிறதாக உடல் உயிர் இருந்தாலும், நிலைத்து வாழ்கிற பேறுடன் நாம் வாழ்ந்தாக வேண்டும் என்னும் சிந்தனையைத் தருகிற செந்தமிழ்க்குறள், நமது சிந்தையைமயக்கும் குறள் அல்லவா? அந்த ஞானம் பெறுவோம்; ஆனந்தவாழ்வு வாழ்வோம்.

# 4. கற்க நிற்க

கற்க கசடற கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக. (401)

தமிழர்கள் மட்டுமல்ல, தமிழ் தெரிந்த எல்லோருக்குமே தெரிந்த குறள் இது.

ஒருமுறை படித்தாலே போதும். உள்ளத்தில் பதிந்து விடும். படித்தவர்கள் மறந்தாலும், இந்தக் குறள் அவர்களை மறக்க விடாது.

பாட்டின் அர்த்தமும் எளிதுதான். இனிதுதான். படித்ததுமே பாட்டுக்குப் பொருள் தெரிந்து விடுகிறதே! என்று பாராட்டிப் பேசுபவர்களே அதிகம்.

இரண்டாயிரம் ஆண்டுகளாக. இந்தப் பாட்டுக்குச் சொல்லப்படுகின்ற அர்த்தமும் சுவையானதுதான். சுகமானதுதான்.

கற்பவை கசடு அறக் கற்க;
கற்றபின் நிற்க அதற்குத் தக.

என்று பாடலைப் பிரிப்பார்கள். அதற்குரிய அர்த்தமும் இப்படித்தான் இருக்கும்.

கற்றுக் கொள்ளும் நூல்களைக், குற்றம் இல்லாமல் கற்றுக் கொள்ள வேண்டும். படித்தபின் அக் கல்விக்குத் தகுந்தபடி நிற்க வேண்டும் என்பது மேலோட்டமான பொருளாகும்.

அப்படியென்றால், ஆழமான பொருள் ஏதாவது இதில் உண்டோ? எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது? என்று ஒரு வினா வீசப்படுமானால், அதுவும் சரியான கேள்விதான்.

குற்றமறக் கற்க வேண்டும். கற்றபடி நடக்க வேண்டும் என்றால், எதைக் கற்க வேண்டும்? எப்படி நடக்க வேண்டும்?

இதுதான் கேட்கப்படும் கேள்வி.

நல்ல நூல்களைக் கற்க வேண்டும் என்பது நியாயம் தானே. ஆனால் நல்ல நூரல்கள் என்றால் எவை?

நல்ல நூல்களில் என்ன செய்திகள் இருக்கும்?

நீதி, நியாயம், ஒழுக்கம் சார்ந்தவை எல்லாம் நல்ல பொருள்கள். அவற்றைக் கூறுகிற நூல்களே நல்ல நூல்கள். இதுவும் நல்ல விளக்கமே.

தான் செய்கிற செயல்கள், எல்லாமே தர்மத்திற்குத் தான், என்று திருடன் பேசுகிறான். முரடன் பேசுகிறான். அநியாயக் காரன் பேசுகிறான்.

ஒருவர் விரும்பும் உணவு, மற்றவருக்கு விஷம் என்பது போல, ஒருவர் செய்யும் செயல் மற்றவருக்குத் தவறாகத் தெரியும். தர்மமில்லாததாகத் தெரியும். இப்படித்தான் விவாதம் விரிகிறது.

ஆகவே, எப்படிப்பட்ட நூல்கள் என்று கூறாமல், கற்பவைகளை கசடறக் கற்க வேண்டும் என்றுதான், வள்ளுவர் கூறியிருக்கிறார். நூல்களைக் கூறாமல் கசடறக் கற்க வேண்டும் என்றால், எதைக்கற்க வேண்டும்? என்று புதிய குறிப்பு ஒன்று புறப்படுகிறதே!

உண்மைதான்! நாம் இப்படி குழம்பிப் போய்விடக் கூடாது. குதர்க்கமாக வாதிட்டு கொள்ளகூடாது என்பதற்தகாகத்தான், திருவள்ளுவரும், தமது தெய்வப் புலமையால், தீர்க்க தரிசனமாக, ஒரு குறிப்பை கோடிட்டுக் காட்டி இருக்கின்றார்.

**கற்பவை (க) கசடற கல்.**

**கற்றபின் (க) அதற்குத் தக நில்.**

கல் என்றால் தோண்டு, அகழ்ந்து பார், கற்றுக் கொள் என்று பல பொருள்கள் உண்டு.

க என்ற ஓரெழுத்துச் சொல்லுக்குச், சூரியன், காற்று, தீ, தண்ணீர், உடல், வியாதி, எமன், காமன் போன்ற பல பொருள்கள்.

எதைக் கற்க வேண்டும் என்றால், நம்மைச் சுற்றியுள்ள இயற்கையை, நம்மைக் காத்து இரட்சிக்கின்ற பஞ்சபூதங்களை, நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள். எப்படி அவற்றைப் பயன்படுத்தி வாழ வேண்டும் என்று புரிந்து கொள்ளுங்கள். அவற்றின் தன்மையை, உண்மையை, மேன்மையை உதவுகின்ற மென்மையை அறிந்துகொள்ளுங்கள் என்கிறார். அதைத்தான் கல் படிக்க வேண்டிய பாடம் என்றார்.

கசடற என்றால் குற்றமில்லாத என்பது பொருள்.

நூல்களைப் படிக்கும் போது, அங்கே குற்றமென்று எப்படிக் கூற முடியும்.

இயற்கைப் பொருட்களில்தான் கசடுகள் இருக்கும் என்பது எல்லோரும் தினமும், பேசுகின்ற வழக்காகத்தானே இருக்கின்றது.

அப்படி என்ன கசடுகள் இயற்கையில் இருக்கின்றன என்று பார்ப்போம்.

நீருக்கு நுரை உண்டு. காற்றுக்குத் தூசு உண்டு. நிலவுக்குக் குறை உண்டு. நெருப்புக்கு கறை உண்டு. உடலுக்குள் வியாதி உண்டு. காமத்திற்குக் குருட்டுத் தன்மை உண்டு.

இப்படிப்பட்ட கசடுகளை அறிந்து, அவற்றை நீக்கிவிட்டு, நிதர்சனமான தன்மையைக் கற்றுக் கொள்ளுங்கள் என்கிறார் வள்ளுவர்.

சுவாசத்திற்கு உதவும் காற்றை, வசீகரமாய் நிறைத்துக் கொள்வது; தாகத்தைத் தணிக்கும் தண்ணீரைத் தகுந்தாற்போல் பயன்படுத்திக் கொள்வது; அகலாமலும்

அணுகாமலும் நெருப்பைப் பயன்படுத்திக் கொள்வது; சூரியனின் கதிர்களை, உடலுக்குள் எப்படி ஏற்றுக் கொள்வது? வியாதி வராமல் உடல் நோகாமல், விவேகமாக எப்படி வாழ்வது காமத்தை உப்பு போன்று பயன்படுத்துவது போன்ற நெறிமுறைகளை யெல்லாம், கசடறக் கற்றுக் கொள்ள வேண்டும் .

எமன் எப்போதும் எட்டிய தூரத்தில்தான் இருக்கிறான் என்பதை எண்ணிக் கொண்டாலே, ஒழுக்கமானவற்றை உறுதியாக கற்றுக் கொண்டுவிடலாம்.

**கல்** என்பது **வி** சேருகின்ற போது, கல்வி ஆகிறது. **வி** என்றால் அறிவு என்று அர்த்தம்.

அறிவு வளர, நிறைய பெருகக் கற்றுக் கொள் என்பதும், அதற்காகத் தொடர்முயற்சி வேண்டும் என்பதுதான் மரபு.

**உ** என்பதற்கு, உள்ளும் புறமும் சுட்டுகின்ற சொல் என்று சொல்வார்கள். அகமும் புறமும் என்றும் கூறலாம்.

உடலுக்கு உள்ளே இருப்பது அகம். உடலை விட்டு வெளியே இருப்பதெல்லாம் புறம். அதாவது இயற்கையில் இனிய பிரதேசங்களும், பொருள்களெல்லாமும் சுகமும் புறமும் தாம்.

அகத்தையும், புறத்தையும் அறிந்து கொள்கிற அறிவுதான் உண்மையான அறிவு. அதுவே மெய்யறிவாகும்.

இப்படி மெய்யறிவு உண்டாவது போல, கசடறக் கற்க வேண்டும். அப்படிக் கற்றபின், அதற்குத் தகந்தாற் போல் நிற்க வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

நில்+க என்பதுதான் நிற்க என்பதாயிற்று. எப்படி நிற்க வேண்டும் என்றால், 'க' வைப் போல, இயற்கை போல கடமையாற்ற வேண்டும். எல்லோருக்கும் உதவ வேண்டும்

அதுதான் இயற்கையைக் கற்ற முறையின் முடிவாகும்.

இயற்கையை எந்த அளவுக்குக் கற்றிருக்கிறோமோ, அந்த அளவுக்குத்தான் நடந்து கொள்ள முடியும்.

அரைகுறை அறிவுடன் இயற்கை வழி செல்லுதல் தவறுக்குள்ளாக்கிவிடும். எச்சரிக்கை வேண்டுமல்லவா!

அதனால்தான், வள்ளுவர் மிகச் சூட்சமமாக எச்சரிக்கிறார். அதற்குத்தக என்று அறிவிக்கிறார்.

இயற்கையைப் பற்றி, கற்றிருக்கும் அளவுக்கு நீங்கள் நடந்து கொள்கிற போது நேர்கிற பயன்களும், நிலவுகிற சூழ்நிலைகளும் நெஞ்சுக்கு இன்பமாக இருக்கும். இதமாக இருக்கும்.

தெரிந்ததற்கு மேலே, தெரியாததையும் சேர்த்துக் கொண்டு தெளிவற்ற முறையில் செய்கிற காரியம் உடலுக்குத் துன்பம். வாழ்வுக்கும் துன்பம்; காலமெல்லாம் துன்பம்.

ஆகவேதான், கற்கும் போதே நாம் தெளிவாக கற்றுக் கொள்ள வேண்டும் மண்ணின் அளவே மரம் வளரும். நீரின் அளவே மலர் உயரும். பண்பின் அளவே பழக்க வழக்கம் சிறக்கும்.

அதுபோலவே, கற்றதின் அளவே கடமைகள் சிறக்கும் வாழ்வும் செழிக்கும்.

இயற்கையைப் படியுங்கள். இயற்கையுடன் வாழுங்கள். இயற்கையாய் இருங்கள். பிறரிடம் உதவி எதையும் எதிர்பாராத கைம்மாறு கருதாத இயற்கைபோல் வாழுங்கள்.

நாமும் கற்போம்; கற்றபடி நடப்போம்.

# 5. கேளிர் கேளிர்

பகச் சொல்லி கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர். (187)

புறங்கூறாமை என்னும் அதிகாரத்தில், ஏழாவது பாடல் இது. இந்த உலகத்து மக்களின் உண்மை வாழ்க்கை நிலையை, வெளிப்படையாக விமர்சித்து விளக்கம் கூறும் வித்தியாசமான குறள் இது.

கேளிர் என்ற வார்த்தையைக் கேட்டவுடன், **யாதும் ஊரே யாவரும் கேளிர்**, என்னும் பாடல் வரிதான் உடனே நினைவுக்கு வரும். அந்த அளவுக்குத் தமிழரின் பெருமையை உயர்த்திப் பேசும் வரி இது.

கேளிர் என்றால், நண்பர் ,சுற்றத்தார், உறவினர், என்று பல பொருட்கள் உண்டு.

கேள் என்றால், அன்பு, உறவு, சிநேகிதம், சுற்றம், மதிப்பு, இனம் என்பதுடன், சகி, பொறு, கொடுக்கச் சொல் என்று பல அர்த்தங்கள் உண்டு.

அர்த்தங்களை முதலில் புரிந்து கொண்டால்.அடுத்தது கூறும் போது, தொடுத்து நினைவு படுத்திக் கொள்ள உதவியாக இருக்கும்.

புறங் கூறக்கூடாது என்பதை வற்புறுத்த வந்த வள்ளுவர், யார் புறங் கூறக்கூடாது என்பதை விளக்குவதற்குத்தான் இந்தப் பாடலைப் பாடினார்.

ஆனால், அவரையும் அறியாமல், உற்றதும் உள்ளதும் உணர்ந்து, உண்மையுமான கருத்து ஒன்றைக், கச்சிதமாகப் பாடிவிட்டார்.

இதுவரை, இந்தப் பாடலுக்குப் பெரியவர்கள் எழுதிச் சென்ற உரையை முதலில் பார்ப்போம்,

கூடி மகிழுமாறு இனிய சொற்களைச் சொல்லி, அவரோடு 'நட்பாடலை அறியாதார்' தம்மைவிட்டு நீங்குமாற்றால், புறங்கூறி தம் கேளிரையும் பிரியப் பண்ணுவர். இது பரிமேலழகரின் பழம் பெரும் உரை.

அதாவது, புறங்கூறுவார்க்கு யாவரும் பகைவராவர் என்பது கருத்து என்று, பரிமேலழகர் ஒரு முத்தாய்ப்பு வைத்துப் பொருள் உரைக்கிறார்.

நண்பர்களோடு கொள்ளும் நட்புறவினால் ஏற்படும் நன்மையை அறியாதவர்கள் தாம், நண்பர்களைப் பற்றிப்புறங் கூறிப் பின்னர் அவர்களை விட்டுப் பிரிந்து போய் விடுவார்கள் என்று டாக்டர் நாவலர் உரையில் பார்க்கலாம்.

பிறரோடு இன்புற உரையாடி நட்பு கொள்ளும் திறம் அறியாதவரே, பிளவு உண்டாகுமாறு புறம் கூறி, இனிய உறவினரையும் பிரித்து விடுவர் என்று மதுரை இளங்குமரனார் பொருள் கூறுகிறார்.

இங்கே, எல்லோரது உரையிலும் பொருள் மாறிப்போவது, கேளிர்ப் பிரிப்பர் என்ற இடத்தில்தான்.

கேளிரைப் பிரிப்பர் என்று பரிமேலழகர் ஒரு எழுத்தைச் சேர்த்து பொருள் கூறுகிறார். கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களது உரையும் இப்படியே இருக்கிறது.

இங்கே, நான் எந்த எழுத்தையும், சொல்லையும் கூட்டியோ குறைத்தோ வைக்காமல், இருக்கின்ற சொற்களை, அப்படியே வைத்துக் கொண்டு பொருள் கண்டிருக்கிறேன்.

பகச் சொல்லி என்றால் நீங்கும்படியான அளவுக்குப் புறங்கூறி என்று மற்றவர் சொல்லுகிற பொருள் எப்படி வருகிறது என்று பார்ப்போம்.

**பக** என்றால் படுதல், பிரித்தல், பிளத்தல். இந்தக் காரியத்தைச் சிறப்பாகச் செய்கிற போது பக+ஐ = பகை ஆகி விடுகிறது. பகை என்றால் விரோதம், வெறுப்பு, உட்பகை என்று நாம் பொருள் காணலாம்.

இப்போது, பகச் சொல்லி என்றால், உள் மனத்திலே ஏற்பட்டிருக்கும் விரோதம், வெறுப்பு காரணமாக, வெளிப்படையாக வெளியே காட்டாமல், உள்பகையாகக் கொண்டிருக்கிற தன்மை என்று நாம் ஒரு அர்த்தத்தைப் பெறுகிறோம்.

இப்படி உட்பகையை உள்ளுக்குள்ளே வளர்த்து வைத்திருக்கிற கேளிர் அதாவது உறவினர், அல்லது சுற்றத்தார், பிரிப்பர். அதாவது பிரித்துவிடுவர்.

யாரை உறவினர்கள் பிரித்து விடுவார்கள்?

அதற்குப் பதில்தான், நகச் சொல்லி நட்பாடல் தேற்றாதவர் என்ற நான்கு சொற்களில் கூறப்பட்டிருக்கிறது.

நக=மகிழுமாறு; சொல்லி = பேசி;நட்பாடல் = நல்ல உறவாக, சுற்றமாக சிநேகம் கொள்வதற்கு; தேற்றாதவர் = தம்மை தேற்றிக் கொள்ளாதவர் என்று இப்படிப் பொருள் வருகிறது.

தன் உறவாக, சிநேகிதராக, சுற்றமாக, இனத்தவராக இருக்கும் ஒருவர், பிறர் போற்றும்படியாகப் புகழிலும் பொருளிலும் உயர்ந்துவிடுகிற போது, அந்த உயர்ச்சியை எழுச்சியை மனத்திலே தாங்கிக் கொள்ள முடியாமல் ஏற்றுக் கொண்டு வாழ்த்தவும் முடியாமல், வணங்கவும் முடியாமல், மனத்தில் தேற்றாதவராக, அதாவது பகைவராக மாறி, புறங்கூறுகிற, புன்மதியராகப் போய் அவனைப் பிரித்து விடுகிறார்கள்.

எனக்கு ஏற்பட்ட குறளின் கருத்து இதுதான். கேளிர்

பிரிப்பர் என்றது, **சுற்றத்தார் பிரித்து விடுகிறார்கள்.**

ஒருவருக்குப் பகை என்றால், அந்தப் பகையானது வேறு எங்கிருந்தோ வந்து விடுவதில்லை.

நேற்றைய நண்பர் - இன்றைய பகைவர். இன்றைய நண்பர் நாளைய பகைவர் என்பது அனுபவ மொழி. நேற்றைய உறவு - இன்றைய பகை. இன்றைய உறவு- நாளைய பகை.

நம்மைப் பற்றி நன்கு தெரிந்த ஒருவரே; நம்முடன் பழகி நமது அகம்புறம் இவற்றை நன்கு அறிந்தவரே, நம்முடன் கலக்காமல், போராடக் கிளம்பிவிடுகிறார்.

'ஐந்து வயதிலே அண்ணன் தம்பி; பத்து வயதிலே; பங்காளி' என்பது பழமொழி.

நம்மைச் சுற்றி, பற்றிப்படர்ந்து வந்து கொண்டிருக்கும் மக்களைத்தாம், சுற்றம் என்றனர். சுற்றிச் சுற்றி வந்து, ஒருவரது வாழ்க்கையைத் தூற்றி, வாழ்ந்தாலும் தூற்றி, தாழ்ந்தாலும் தூற்றி, தம் மன எரிச்சலைத் தணித்துக் கொள்வதோடல்லாமல் குற்றம் பலவற்றைச் செய்து குதூகலிப்பதும் நமக்குத் தெரியும். அதனால்தான் **குற்றம் பார்க்கில் சுற்றமில்லை** என்றனர்.

உயர்வான இந்த உறவைத்தான், **உடன் பிறந்தே கொல்லும் வியாதி** என்று வருணித்தனர்.

பொறாமையும், புழுங்கிப் புறங்கூறும் பொல்லாத குணமும் எப்போது ஏற்படும்? ஒருவரது முன்னேற்றத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாத அளவுக்கு மனப் புழுக்கம் ஏற்படுகிறபோதுதான் ஏற்படும்.

பெற முடியவில்லை. பொறுத்துக் கொள்ள முடிய வில்லை என்பதால்தான் அதைப் பொறாமை என்றனர்.

உள்புறம் ஏற்பட்ட உறுத்தல்தான் பகையாக மாறி, உற்றவரும் அறியா வண்ணம் புறம் கூறத் தூண்டிவிடுகிறது. அதனால் அதைப் பகச் சொல்லி என்றார் வள்ளுவர்.

தங்களை பின்னால் தள்ளி விட்டு, முன்னேறுகிற ஒருவரை, ஓரம் கட்டுவதுதான், சுற்றத்துக்குள்ள அரிய குணாதிசயமாகும்.

எல்லாச் சுற்றமும் அப்படியிருக்குமா என்றால்நூற்றில் ஒன்றுதான் நன்றாயிருக்கும். மற்றதெல்லாம், சுற்றிவந்து உயிரறுக்கும் கூட்டம்தான். இது வாழ்வில் வசதிபெற்று உயர்ந்திருக்கிற எல்லா மனிதருக்குமே ஏற்பட்டிருக்கும் அனுபவம் ஆகும்.

பொறாமை கொண்ட கேளிர் தம் சுய அறிவையும் சுகமான சிந்தனையையும் சிதைத்துவிட்டு, உயர்ந்தவரைப் பற்றி அவதூறு கிளப்பியும் மனம் புண்படுவது போல் வதந்திகள் பலவற்றைக் கிளப்பிவிட்டு வம்பு செய்து துரத்தியும் பிரித்தும் அற்ப சந்தோஷம் காணுகிற அக்ரமத்தையே வள்ளுவர், பகச் சொல்லி கேளிர்ப் பிரிப்பர் என்றார்.

தன் உறவினர் ஒருவர், உயர்கிறார் என்பதை அறிந்து, மனத்தில் சந்தோஷப்பட்டு அவரிடம் உள்ள உறவை மேலும் மேலும் வளப்படுத்திக் கொள்ள முடியாத சுற்றமே, அவரைப் பிரித்துவிடுகிறது. உயர்ந்தவர் அதாவது நல்ல குணம் உள்ளவர்கள் தங்கள் சுற்றத்தைப் பிரித்து விடுவதில்லை. நூற்றில் ஒருவர் இப்படி இருப்பார்கள். ஆனால், பொறாமை கொண்ட சுற்றமே, பிரித்துவிடுகிறது அல்லவா!

சுற்றத்தாரிடம் எல்லோருமே இந்தச் சுகலாபங்களை அனுபவித்தே வருகின்றார்கள். இருந்தாலும், இதையும் மீறி உயர்வதுதான் நமக்குப் பெருமை. இந்தப் பெருமையும் ஓர் அரிய திறமைதானே!

# 6. பிறப்பும் சிறப்பும்

மிகவும் சிந்தனைக்கும் சிக்கலுக்கும் உரிய ஒரு குறளை, தேர்ந்தெடுத்திருக்கிறேன்.

பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். (482)

பெருமை எனும் அதிகாரத்தில் வருகிற 2வது பாடல் இது.

'எல்லா மக்களுக்கும் பொதுவாகிய பிறப்பியல்பு ஒக்குமே யெனினும், பெருமை சிறுமையெனப்பட்ட சிறப்பியல்புகளை, அவை செய்யுந் தொழில்களது வேறு பாட்டான் அமையும்' என்று பரிமேலழகர் உரை எழுதியிருக்கிறார்.

எல்லா மக்களுக்கும் பிறப்பு என்பது ஒரு தன்மையானதாகத்தான் இருக்கும். ஆனாலும் கூட, அவரவர் செய்கின்ற தொழில்களின் உயர்வு தாழ்வு என்ற வேறுபாடுகளின் சிறப்புத் தன்மைகள் பற்றி எழுதுகிறார்.

எல்லா மக்கள் உயிர்க்கும் பொதுவாகிய பிறப்பின் தன்மை ஒத்ததே யென்றாலும், பெருமை சிறுமை எனப்பட்ட சிறப்பியல்புகள் ஒவ்வா. ஏனெனில், அவை அவரவர் செய்யும் தொழில்களது வேறுபாட்டால் என்பதாம் என்று திருக்குறள் முனிசாமி எழுதுகிறார்.

'எல்லா உயிர்களுக்கும் பிறப்பு ஒத்த தன்மையதே. அதுபோல், தொழில்களும் ஒத்தவையே. எனினும் அவற்றைச் செய்யும் செயல்நிலை வேறுபாட்டால் சிறப்பு ஒத்தவையாகா' என்று மதுரை இளங்குமரனார் பொருள் கூறுகிறார்.

பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பு ஒவ்வா செய்தொழில் வேற்றுமையான் என்று எல்லோரும் குறளைப் பிரித்தார்கள்.

**சிறப்பு ஒவ்வா பிறப்பும் எல்லா உயிர்க்கும் ஒக்கும். செய்தொழில் வேற்றுமையான்** என்று நான் குறளைப் பிரித்துப் பார்க்கிறேன்.

பிறப்பு என்பது ஒரு ஆணும் பெண்ணும் கூடுகிறபோது உண்டாகிற கரு, உரு வாகி, குழந்தையாகப் பிறக்கிறது என்பது பொதுத் தன்மை. இந்தப் பிறப்பு எல்லா உயிர்க்கும் ஒக்கும் என்பது, எல்லோரும் அறிந்தது. உணர்ந்ததுதான்.

இந்தப் பொதுக் கருத்தையா வள்ளுவர் பெரிதுபடுத்திப் பாடியிருக்கிறார் என்றால் இல்லை. அவர் சொல்ல வந்த கருத்து, இந்தச் சமுதாயத்தின் சங்கடமான பல சூழ்நிலை களைச் சுட்டிக் காட்டி விளக்கத்தான்.

பிறப்பு என்றால் புரிகிறது, **சிறப்பு ஒவ்வாப் பிறப்பு** என்று சொல்கிற போது குழப்பம் விரிந்துக் கொள்கிறது அல்லவா!

தமிழ்நாட்டுச் சமுதாயச் சூழ்நிலையை வள்ளுவர் குறித்துக் காட்டுகிற விளக்க்மே.

தமிழ்ச் சமுதாயம் வீரத்திற்கு முக்கியத்துவம் அளித்தது போலவே, கற்புக்கும் முதலிடம் கொடுத்துப் போற்றியது.

வாழ்வின் எல்லா நிலைக்கும் ஒழுக்கம் வேண்டும். அது உயிர் போன்றது என்று வற்புறுத்திய தமிழினம், ஆண் பெண்ணின் ஒழுக்கம் பார்த்தது; கற்பைப் பார்த்தது.

இந்த இரண்டில் சிறந்தவர்களை **உயர்ந்த குலம்** என்று போற்றியது. ஒழுக்கத்திலிருந்து, கற்பிலிருந்து வழுக்கியவர் களை **இழிந்தகுலம்** என்று ஒதுக்கியது.

அறநிலையில் மணம் புரிந்தவர்க்குப் பிறக்கும் பிள்ளைகள். மற நிலையில் மணம் புரிந்தவர்க்குப் பிறக்கும் பிள்ளைகள். தவறான வழியில் உருவாகிப் பிறக்கும் பிள்ளைகள் என்று நாம் பலவகைப் பிரிவுகளை இன்றும் காணலாம். இத்தகைய குறிப்புகளைத்தான் பிங்கல நிகண்டு அன்றே பெரிதும் விரித்துரைக்கின்றது.

ஒத்த குலமும், ஒத்த ஒழுக்கமும் ஒத்த குணமும் ஒத்த ஆயுளும் கொண்ட ஆணும் பெண்ணும் சுற்றம் மகிழ்ந்து போற்றி வாழ்த்திட திருமணம்புரிந்து கொள்ளப் பிறக்கும் குழந்தைகள் (765).

காளை மாட்டை அடக்கி, வில்லால் இலக்கம் எய்தி, பொருள் கொடுத்து, வலிந்து, ஒரு பெண்ணை மணந்து கொள்ளுதல் - மற நிலை மணத்தில் பிறக்கும் குழந்தைகள்.

**ஏறு தழுவல், இலக்கம் எய்தல், உறுபொருள் கொடுத்தல், வலிதிற் போடல் மாறுடை நிலையின் மறநிலை இன்பம்**

கற்பு நிலை மறந்து, தன் காமத்தையே நினைந்து அதிலே முனைந்து, சண்டாளத்தனம் என்று சமுதாயம் சுட்டிக் காட்டும் நிலையில் பிறந்த பிள்ளைகள்.

1. கொண்டோர் பிழைத்துப் பெறுகிற மகன். அதாவது, கணவர் இருக்கும் பொழுதே, கள்ளக் காதலால் பிறக்கும் குழந்தைக்குக் **குண்டகன்** என்று பெயர்.

2. விதவைபெற்ற மதலைக்குக் **கோளகன்** என்று பெயர்.

3. கல்யாணம் செய்யாத கன்னிக்குப் பிறந்த மகனுக்கு **கானீனன்** என்று பெயர்.

4. உயர்ந்த ஆணும், இழிந்த குலப்பெண்ணும் கூடிப்பிறந்த மகனுக்கு **அநுலோமர்** என்று பெயர்.

5. உயர்ந்த குலத்துப் பிறந்த பெண்ணும், இழிந்த குல ஆணும் கூடிப் பிறந்த பிள்ளைக்கு **பிரதிலோமர்** என்று பெயர்.

6. அநுலோமத்து ஆணும், பிரதிலோமப் பெண்ணும் கூடிப் பிறந்த பிள்ளைக்கு **அந்தராளர்** என்று பெயர்.

7. அநுலோமப் பெண்ணும், பிரதிலோம ஆணும் கூடிப்பிறந்த பிள்ளைகளுக்கு **விராத்தியர்** என்று பெயர்.

இவ்வாறு தவறு என்றும், கவறு என்றும், பாபம் என்றும் சமுதாயத்தாரால் பேசப்படுகிற நிலையில், பிறக்கும் குழந்தைகள் உண்டானது மற்ற குழந்தைகள் போலத்தான் உருவாகி, பத்துத் திங்கள் இருந்து வளர்ந்து புறம் வருகிறது.

இதை இன்றைய விஞ்ஞானம் வெகுஅழகாக விளக்கம் அளிக்கிறது.

உடலுறவின் போது தந்தை அனுப்புகிற விந்தில் உள்ள பல இலட்சம் விந்தணுக்கள், தாயின் கர்ப்பத்தை நோக்கிப், பல மணி நேரம் ஓடுகின்றன. ஓட்டத்தில் களைத்துப் போன விந்தணுக்கள் எல்லாம், களைத்து மரித்துப் போக, 100 முதல் 1000 ஜீவ அணுக்கள்தான் கர்ப்பப்பை அருகே சென்றடைகின்றன.

அவற்றில் எந்த ஜீவ அணு கர்ப்பத்தில் முட்டையுடன் கலக்கிறதோ, அதுவே ஜீவனாகிக் கொள்கிறது என்பது விஞ்ஞானம்.

அவற்றில் குழந்தைப்பிறப்பு என்பது, சிறப்பான ஆண் பெண் உறவில் அல்லது தவறான ஆண் பெண் உறவில் பிறக்கிறது என்றாலும், பிறப்பு எல்லா உயிர்க்கும் ஒத்ததுதான்.

அதிலும் வள்ளுவர் இங்கே சிறப்புத் தன்மை இல்லாமல் பிறக்கும் எல்லா உயிர்க்கும் ஒக்கும் என்கிறார்.

ஆனால், அந்தக் காலத்திலிருந்து இந்தக் கால மக்கள் வரைசெய்கிற தொழிலை வைத்துச் சாதி பேதம் பார்த்து, நீதி முறை அழித்து மிருகம் என வாழ்கின்றனரே என்று வருந்தித்தான், செய்கிற தொழிலில் வேற்றுமை ஏன் என்கிறார் வள்ளுவர்.

உடல் இருக்கிறது. உடலில் பல உறுப்புக்கள் இருக்கின்றன. அதில் ஓரிரண்டு உறுப்புக்களைத், திட்டுவதற்காக மக்கள் பயன்படுத்தி, மிகக் கேவலமாக, கொடூரமாகப் பேசுகிறார்கள், ஏசுகிறார்கள், என்றாலும், அந்த உறுப்புக்களுக்காகத்தானே அடித்துக் கொண்டு சாகின்றார்கள்.

உலகத்தில் நடக்கும் ஆயிரம் கொலைகளுக்கும் கோடிக் கணக்கான வழக்குகளுக்கும், அந்தச் **சில உறுப்புக்கள்** தானே அடிப்படைக் காரணமாக இருக்கின்றன.

என்றாலும், உடலில் ஓர் உறுப்புக் குறைந்தாலும்,

நலிந்தாலும், இழந்தாலும், உடலின் நலத்தன்மை அழிந்து விடுகிறது. வாழ்வதற்காக ஒவ்வொரு மனிதனும் ஒருவிதமான செயலை, தமக்குத் தெரிந்த முடிந்த தொழிலைச் செய்து மக்களுக்கு உதவுகின்றார்கள். மக்களைக் காக்கின்றார்கள். நாட்டை உயர்த்துகின்றார்கள்.

தொழிலில் பேதம் பார்க்கும் நாடு, பகைவர்கள் அழிக்காமலே அழிந்து போய்விடும் என்று சமூக இயல் பேசுகிறது.

ஆகவே, செய்கிற தொழிலின் சிறப்பு பார்த்து, புகழுங்கள். பெருமைபடுத்துங்கள். செய்கிற தொழிலையே இழித்தும் பழித்தும் பேசாதீர்கள். தொழிலை வைத்து மக்களைப் பிரிக்காதீர்கள். அழிக்காதீர்கள் என்று பிரஞ்சுப் புரட்சி செய்த சீரமைப்பு போல, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, சமதர்ம சமுதாயம் காணவிழைந்தார் வள்ளுவப் பெருமகனார்.

சிறப்பு, ஒவ்வாத பிறப்பே. எல்லா உயிர்க்கும் ஒத்ததாக இருக்கிறதே! சிறப்பு உள்ள எல்லா வகையான தொழிலிலும் பேதம் பார்ப்பதைப் பகுத்தறிவுக்கு ஒவ்வாதது என்றே பாடுகிறார். இப்பொழுது மீண்டும் இந்தக் குறளைப் படியுங்கள். புதிய பொருளின் பிரகாசம் தெரிகிறதல்லவா?

ஆகவே பிறப்பால் சிறப்பு பார்க்காதீர்கள். ஒவ்வொரு மனிதருக்கும் உடலுக்குள்ளே, திறமையும், தேர்ச்சியும் நிறைந்திருக்கிறது. அவர்கள் செய்யும் தொழிலின் சிறப்பைப் பாருங்கள்.

இந்தக் காலத்துக்கும் இது எவ்வளவு பொருந்துகிறது பார்த்தீர்களா!

நாம் மனிதரைப் பார்ப்போம். அவர் செய்கிற புனிதத்தைப் போற்றுவோம். அவர்க்குரிய பெருமையைச் சேர்ப்போம். அதுதான் மனிதப் பண்பின் மாட்சிமையும் மகிமையும் ஆகும்.

# 7. துறவும் உறவும்

நீத்தார் பெருமை என்னும் மூன்றாம் அதிகாரம். அதிலே வருகிற குறள் துறவின் நுண்மையைத் திரையில் தெரிகின்ற பேசும் படம் போல, தெளியத் காட்டுகிது.

**ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து**
**வேண்டும் பனுவல் துணிவு. (21)**

பரிமேலழகர் இக்குறளுக்குத் தருகிற பொருள் வருமாறு: தமக்குரிய ஒழுக்கத்தின் கண்ணே நின்று துறந்தாரது பெருமையை, விழுமிய பொருள்கள் பலவற்றுள்ளும், இதுவே விழுமியதென விரும்பும் நூல்களது துணிவு!

சீரிய ஒழுக்கத்தில் நின்று துறந்தவர்களது பெருமையினை, மேலான பொருள்கள் எல்லாவற்றுள்ளும் மேலானதென்று விரும்புவது நூல்களினுடைய துணிவாகும் என்று திருக்குறளார் முனிசாமி உரை எழுதியிருக்கிறார்.

சான்றோர்களின் சிறந்த நூல்கள் எல்லாம், துறந்தாரின் பெருமையையே, பெருமைகள் எல்லாவற்றுள்ளும் சிறந்த ஒன்றாகக் கூறும் என்று நாவலர் கூறுகிறார்.

ஒழுக்கத்தில் நிலைபெற்றுத் துறந்தவர் பெருமையே பெருமைக்குரியன பலவற்றுள்ளும் சிறந்தது என்பது உயர்ந்த நூல்களின் முடிவாகும் என்று மதுரை இளங்குமரனார் உரை எழுதுகின்றார்.

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து வேண்டும் பனுவல் துணிவு என்றே குறளைப் பதம் பிரித்து, அப்படியே பொருள் தந்திருக்கின்றார்கள் பலரும்.

நீத்தார் என்றால் பற்றற்ற துறவோர், முனிவர், சித்தர் என்றும், துறந்தார் என்றும் முற்றுந் துறந்தார் என்றும் பொருள் கூறுவார்கள்.

பெருமை என்றால் சிறப்பு என்று பொருள்.

முற்றுந் துறந்தவரின் பெருமையை, மேலானவற்றிலும்

மேலானது என்பது நூலோர்களின் முடிவு என்று பொருள் கூறுவது, எல்லோருக்கும் தெரிந்த ஒரு பொருள்தான். ஆனால், நீத்தாரின் பெருமையைக் கூறவந்த வள்ளுவரும், இவ்வளவு எளிமையாகவோ, முற்றும் துறந்தவரின் பெருமையை விளக்கி சொல்கிறார்!

நூல்களின் முடிந்த கொள்கை துறவிகளின் செயல்களைப் போற்றும் என்பது மிக மிக எளிய சாதாரண பொருளாகும்.

அதுவுமின்றி, ஒழுக்கத்து நீத்தார் என்னும் சொற்களைப்படிக்கும் போது ஒழுக்கத்திலிருந்து நீத்தவர்கள் என்றே, எவரும் உடனே தவறாகப் பொருள் கொண்டு விடுவதும், இயல்பாகவே நடந்து வருகிறது.

பாடல் அழகுக்காக, ஒழுக்கத்து என்று தொடங்கி, நீத்தார் பெருமை என்று தொடர்ந்து செல்கிறது. விழுப்பத்து, வேண்டும் என்று மேலும் தொடர்ந்து ஆனால், வள்ளுவர் எண்ணிப் பாடிய பொருள், அப்படி அமையவில்லையோ என்றும் எண்ண வேண்டியிருக்கிறது.

அவர் சொல்லவந்த கருத்தின் சூட்சுமம் இப்படித்தான் அமைந்திருக்க வேண்டும்!

நீத்தார் பெருமை என்பது பனுவல் துணிவுவிழுப்பத்து வேண்டும் ஒழுக்கத்து இருக்கிறது.

இப்பொழுது குறளின் கொள்கை முழக்கமானது நன்கு ஒலிப்பது போலத் தெளிவாகிறதல்லவா!

அதற்காகக், குறளின் ஒவ்வொரு சொல்லுக்கும் உரிய உன்னத பொருள்களையும் பார்ப்போம்.

**பனுவல்** என்பதற்கு, நூல், புலமை, ஆராய்ச்சி, கல்வி என்று பலபொருள்கள் உண்டு.

**துணிவு** என்றால், தெளிவு, நோக்கம், முடிவு, கொள்கை, குறிக்கோள் என்று பல பொருட்கள் உண்டு.

**விழுப்பம்:** ஆசை, சிறப்பு, நன்மை, மேன்மை என்றெல்லாம் அர்த்தங்கள் பல உண்டு.

**ஒழுக்கம்** : விதித்தன செய்தலும் விலக்கின ஒழித்தலும்

என்று கூறுவர். விதித்த கடமைகளினின்று வழுவாது ஒழுகுதல்; உலகத்தோடு ஒட்ட ஒழுகுதல்.

இப்பொழுது நாம், மேற்காணும் பொருள்களை யெல்லாம், தொகுத்து வகுத்துப் பார்க்கிறபோது, வள்ளுவரின் உள்ளம் புரியும். நுண்மான் நுழைபுலமும் புரியும்.

கல்வி ஆராய்ச்சியும், நூல் புலமையும் மிக்கதாக விளங்குவதையே பனுவல் என்றார். அதனால் எழுந்த தெளிவான, தீர்ந்த நோக்கமும், குறையிலா குறிக்கோளும் நிறைந்த ஒரு கொள்கையைப் பெற்றுத் தருகிறது.

அந்தத் துணிவுதான் அதாவது அந்தக் குறிக்கோள்தான், நன்மையும் மேன்மையும், சிறப்பும் சீரும் மிக்க ஒழுக்கமாகும்.

அந்த ஒழுக்கத்தில் நிதமும் வாழ்ந்து, நிலை புரளாமல் நினைவு அலையாமல், நெறி காத்து வாழ்பவரே துறந்தவராவார்.அதுவே அவருக்குப் பெருமையாகும்.

துறவின் பெருமை என்று கூறாமல், நீத்தார் பெருமை என்று ஏன் தலைப்பிடவேண்டும்?

நீத்தல் என்றால் பிரிதல், துறத்தல், தள்ளுதல், இழித்தல், வெறுத்தல், நீங்குதல், ஒழித்தல் என்று பொருள்.

இப்படி உலக ஆசைகளை விட்டு விலகுதல், நீங்குதல் என்றால் அது முடிகின்ற காரியமா?

இன்று தறவிகள் என்று பலர் வேஷமிட்டுக் கொண்டு, காஷாயம் உடுத்திக் கொண்டு, செய்கின்ற காரியங்கள் எல்லாம் சீயென்று, காரித்துப்பும் அளவுக்கு வந்திருக்கிறதே!

ஆகவே துறவு என்பது சித்தர்களாவதற்குரிய முதல்படி என்றுதான் அர்த்தம். துறவுகொள்வது என்பது முடிந்து போன விஷயமல்ல. ஒரு சிறு ஆரம்பம்தான்.

நீத்தாராக ஆவதற்கு நான்கு நிலைகள் உண்டு. பிரம்மச்சரியாக இருந்த பிறகு இல்லறம் நடத்திய பிறகு பெறுகிற அடுத்த நிலைதான் துறவு என்னும் ஆரம்பநிலை.

உலகில் உள்ள பொல்லாத மூன்று ஆசைகள்: மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்பார்கள்.

மண் விழைவார்க்கு மானமில்லை. பொன் விழைவார்க்கு நாணமில்லை.

பெண் விழைவார்க்கு ஈனமும் இல்லை , எதுவுமே இல்லை என்று பாட்டாகப் பாடி வைத்திருக்கின்றார்கள்.

1. மண், பொன் ஆசைகள் உலக அளவில், உடல் அளவில் துறந்து கொண்டு மனைவியுடன் கானகம் சென்று வாழ்தல். இது மனப் பக்குவம் அடைகிறவரையில்.

2 .பிறகு மனைவியையும் துறந்து, தனித்து நின்று தவ வாழ்வைத் தொடங்குதல். அப்படித் துறந்தாலும் சுகத்திலே அவை நின்று நிழலாடுவதால், முழுதுமாக இல்லை என்பது அடுத்த நிலை.

3. அடுத்து அறநிலை. அறுதல் என்றால் உறவே அல்லது தொடர்பே இல்லாமல். அற்றுப் போய்விடுதல். உடலாலும் மனத்தாலும் உலக ஆசைகளை அறுத்து விடுதல்.

4. நான்காவது இறு நிலை, இறுதல் என்றால் இற்றுப் போதல், எந்த நிலையிலும் உலக வாழ்வினுள் ஊடாடி விடாமல் அதற்கும் மேலே நின்று ஆட்சி செய்தல்.

எண்ணங்களினால் உலக பந்தங்கள் எல்லாம் இற்றுப் போகிற நிலையே இறுநிலை. அதுவே இறைநிலை ஆயிற்று. அதனால்தன் அத்தகையோர் இறைவன் என்று புகழப்பட்டனர்.

அப்படிப்பட்ட துறந்தவருக்குப் பெருமை எப்போது பெருகும் என்றால்; விழுப்பத்து வேண்டும் பனுவல் துணிவு ஒழுக்கத்தில் நிலைத்து நிற்கும்போதுதான்.

பனுவல் துணிவு என்பது தூய நூல்களின் சிறந்த வழிகாட்டல்கள் ஆகும். அப்படிப்பட்ட நூல்களின் மேன்மை மிக்க வழிகள் ஒழுக்கம் காத்து வருவதே நீத்தார்க்குப் பெருமையாகும்.

இல்லறம் நீங்கி நிற்றல் மட்டும் துறவறம் அல்ல, துறவறம், அறவறம், இறவறம் என்று தம்மை உயர்த்திக் கொண்டு விடுகிறவரே, பெருமைக்குரியவர் ஆவார்.

செத்துத் திரியும் சித்தர்கள் என்று புகழ்வார்கள். அதாவது ஆங்காரம் மிக்க ஐம்பொறிகளை அடக்கி, அமைதியாக ஆனந்தமாகத் திரிகின்ற ஆண்மையை உலகினுக்குக் காட்டி உய்விக்கின்ற உத்தமர்கள் ஆவார்கள்.

அதனால்தான் வள்ளுவரும், அடுத்த குறளிலேயே, 'துறந்தார் பெருமை துணைக் கூறின், இறந்தாரை எண்ணிக் கொண்டற்று' என்று பாடுகிறார்.

துறந்தவரின் பெருமைஅளவினைக் கூற முற்படுகிற போது, இந்த வையத்தில் இறந்தார் போல் இருந்து, இயங்கி, எதையும் துரும்பாக எண்ணி, இறை வாழ்வு வாழ்பவரை எண்ணிக் கொள்ள வேண்டும் என்று உவமை காட்டுகிறார்.

செத்துத் திரியும் சித்தர்போல் இறந்தாற்போல் மனத்தால், அடங்கி, அடக்கி வாழ்பவரின் அளவாக எண்ண வேண்டும். அப்படியானால், துறப்பவர்க்குரிய துன்பம் எவ்வளவு? மனப்பக்குவம் எவ்வளவு!

அப்படி வாழ்ந்து காட்டிய நீத்தார்களின் பெருமையை, இன்றைய சாத்தான்கள் பலர் சந்தி சிரிக்க வைப்பதைப் பார்த்துச் சஞ்சலப்படுவதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால் நாம் உயர்ந்ததையே நினைத்து, உயர்ந்த வாழ்வு வாழ வேண்டும்.

# 8. தோற்றமும் புகழும்

ஒரு பள்ளியின் தலைமை ஆசிரியை ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தபோது,

> **தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்**
> **தோன்றலின் தோன்றாமை நன்று** (236)

என்று பாடல் பற்றிக் குறிப்பிட்டார்கள்.

அது என்ன குறள்? அர்த்தம் புரியாத பொருளாக இருக்கிறது. ஒருவர் பிறக்கும் போதே புகழுடன் தோன்ற வேண்டும் . இல்லையேல்,பிறக்காமல் இருப்பது நல்லது என்று பாடியிருக்கிறாரே வள்ளுவர்?

அது எப்படி பிறக்காமல் இருக்க முடியும்? புகழொடு தோன்ற முடியும் என்றெல்லாம் பேசினார்கள்.

வீட்டுக்கு வந்ததும், குறளுக்குரிய பல உரை நூல்களை எடுத்துப் படித்துப் பார்த்தேன். இதோ அந்த உரை விளக்கங்கள்.

''மக்களாகப் பிறக்கின், புகழுக்கேதுவாகிய குணத்தோடு பிறக்க. அக்குணமில்லாதார், மக்களாய்ப் பிறத்தலின், விலங்காய் பிறத்தலின் நன்று'' என்று பரிமேலழகரின் உரை இருந்தது.

மக்களாகப் பிறந்தால், புகழ் உடம்பை அதற்கேற்ற குணங்களுடன் பிறத்தல் வேண்டும் அத்தன்மை இல்லாதவர்கள் மனிதராய்ப் பிறத்தலை விட, பிறவாதிருத்தலே நன்றாகும். விலங்காய் பிறத்தல் நன்று என்று திருக்குறளார் முனுசாமி உரையில் இருந்தது.

''ஒருவர் புக விரும்புகின்ற துறையில் புகழோடு விளங்க முடியும் என்றால், அந்தத் துறையில் தோன்ற வேண்டும். அதற்கான அறிவுத் திறனும், ஆற்றல் திறனும் வாய்ப்பும் இல்லாதவர்கள், அந்தத்துறையில் புகுவதைவிட, புகாமல் இருப்பது நல்லது'' என்று நாவலர் உரை தந்திருந்தார்.

'' ஒரு செயலில் ஒருவர் ஈடுபட்டால் , அம்முயற்சிக்கும் தமக்கும் புகழுண்டாக ஈடுபடுபவராக, அத்திறம் இல்லாதார், அதில் ஈடுபடாதிருத்தலே நல்லது'' என்று மதுரை இளங்குமரனார் உரை எழுதியிருந்தார்.

நானும் குறளைப் பலமுறை படித்துப் பார்த்தேன். வள்ளுவரின் குறளில் ஏதோ உள்ளுரை இருப்பது போல எனக்குத் தோன்றியது.

உரை எழுதிய எல்லோரும், தோன்றின் என்ற சொல்லுக்குப் பொருள் தருகிறபோது தான் பிறழ்ந்து போயிருக்கின்றனர்.

தோன்றுதல் என்றால் பிறத்தல் என்று ஒரு பொருள் உண்டு. அது போலவே, அந்தச் சொல்லுக்கு உதித்தல், வெளிப்படல், நிலைகொள்ளுதல், விளங்குதல் என்றெல்லாம் பொருள்கள் உண்டு.

புகழொடு என்றால், அருஞ் செயலோடு, நல்ல வெற்றியோடு, ஏற்றத்தோடு, மேம்பாட்டோடு என்றும் பொருள்கள் உண்டு.

ஒருவர், மனிதராக மட்டும் வாழ்ந்தால் போதாது. அவர் மகாமனிதராக, மாண்பு மிகுந்தவராக, அருஞ்செயல் ஆற்றியவராக, செயற்கரியவை செய்தவராக, பார்த்தவர்கள் நல்லெண்ணத்துடன் பாராட்டுகின்ற பண்பாளராக விளங்க வேண்டும் என்பதுதான் வள்ளுவரின் அவாவாகும். ஆகவே தான், ஒவ்வொரு மனிதரையும் பார்த்து அவர் குறிப்பிட்டுக் கூறுவதுபோல அர்த்தமுள்ள சொற்களால், இக்குறளைப் படைத்திருக்கிறார்.

மக்கள் கூடியிருக்கின்ற மன்றமாக இருந்தாலும், அறிவு சான்ற அறிஞர்கள் அணிகொண்டிருக்கின்ற பெரும் அவையாக இருந்தாலும் நீ செல்லுகிறபோது, அதாவது உன் தோற்றம் அங்கே ஏற்படுகிற போது, மற்றவர்கள் புகழ்ந்து போற்றி வரவேற்பது போல நீ அங்கே தோன்ற வேண்டும். அதாவது

மன்றத்திலே நுழைய வேண்டும். உன்னை ஆர்வத்தோடு, அன்பின் பெருக்கத்தோடு, மனதார ஏற்று, அகத்தாலும் புறத்தாலும் வரவேற்று, பெருமைகள் பெறுவது போல, நீ தோன்ற வேண்டும் என்றார் வள்ளுவர்.

மனிதர்களுக்குத் தன்னம்பிக்கை என்பது இருந்தாலும் . தன்னைப் பற்றிய பெருநினைவு(Ego) என்பது மிக அதிகமாக உண்டு.

அந்தப் பெருநினைவைத் தற்பெருமை என்பார்கள். தற்போதம் என்பார்கள். அளவுக்கு அதிக மாகிவிட்டால், அதை அகம் பாவம், அகங்காரம் என்பார்கள். மிகவும் எளிமையாக அதை மண்டைக் கனம் என்றும் அடித்துச் சொல்வார்கள்.

மனிதர்களுக்குள்ளே மகா மாயையாக விளங்கும் இந்தத் தான் என்ற நினைவானது, தன்னைப் பெரிதாக உயர்த்தி எண்ணிக் கொண்டிருக்கும் போதே அடுத்தவர்களையும் அடி மட்டமாக எண்ணத் தூண்டும். அதிபயங்கரமாகப் பேசிப் பார்க்கும். கேவலமாகவும் ஏசியும் தீர்க்கும்.

பிறரை மட்டந்தட்ட வேண்டும் என்ற மனோபாவம் மிகுந்திருப்பவர்கள்தான் மக்கள். மற்றவரை மதிக்கிறார்கள் என்றால் , அவர்களையும் மீறி, அவர்கள் செயல்களில் சிந்தையைச் சிறிது இழந்தவர்கள்தாம், புகழ்வார்கள் என்பதும், கண்கூடாக நாம் காணுகிற காட்சிதான். பொருள் கிடைக்கிறது. பதவி வருகிறது. அதிகாரம் சேர்கிறது. ஒருவரால் நன்மைகளும் வசதிகளும் கிடைக்கின்றன என்றால், அவரைக் கண்மூடித்தனமாகப் புகழ்வதற்குக் கற்றுக் கொண்டுள்ள கற்கால மக்கள் வாழ்கின்ற காலமல்லவா இது!

ஆகவே, ஒருவரது சிறப்பை ஏற்கவோ போற்றவோ இதயம் இல்லாத மக்கள் வள்ளுவர் காலத்தும் வாழ்ந்தனர். இன்றும் வாழ்கின்றனர்.

ஆகவே, இத்தனை எதிர்ப்புகளையும் சிதறடித்துவிடுகிற நிலைமை எப்படி உண்டாகும்? எப்பொழுது உண்டாகும்.?

புகழோடு ஒருவர் விளங்கும்போது தான்!

புகழ் எப்படி வரும்? பணத்தாலா? பதவியாலா? அதிகாரத்தாலா? அல்ல. இவற்றால் வரும் புகழ் எச்சிலையானது, அடிக்கின்ற காற்றால் கோபுர உச்சியில் மாட்டித் தொங்கிக் கொண்டிருப்பது போலப் பிறகு, வீசுகிற காற்றிலே வீழ்ந்து அழிந்து போவது போல எதையாவது கொடுத்துப் பெறுகிற புகழ் ஈனத்தனமாகிவிடும்.

புகழ் என்றால், செயற்கரியனவற்றைச் செய்து முடித்த பெருமையால் - அறிவுப் பெருக்கத்தால், நிகழ்த்திய புதுமையால் - வீரச் செயல்களால் விளைத்த திறமையால் - ஞானத்தால் புதுப்பித்த அருமையால், நாடு காத்து, மொழி காத்து, மக்கள் குலம் காத்து என்பன போன்ற அருஞ்செயல்களால் ஏற்படுவனவாகும்.

அப்படி வீரராக விவேகியாக, மெய்ஞ்ஞானியாக, மேன்மை மிகுபெரியராகச் சிறப்புள்ளவராக மிளிர வேண்டும். அப்படி உன்னைத் தகுதியுள்ளவராக, மாற்றிக் கொள்கிறபோதுதான், நீ செல்லும் இடமெல்லாம் உனக்குச் சிறப்பும் செழிப்பான வரவேற்பும் கிடைக்கும்.

அப்படி ஒரு தகுதியோ, தன்மை மிகு நிலைமையோ இல்லாத போது, நீ போனால் புண்ணியமில்லை; பெருமையுமில்லை என்பதால்தான், அஃதில்லார் தோன்றலின் தோன்றாமை நன்று என்று பாடினார்.

புகழ் இல்லாத வாழ்க்கை என்ன வாழ்க்கை?

தமிழர்களின் குண நலம் பற்றிப் புறநானூற்றுப் பாடல் ஒன்று பாடுகிறது இப்படி.

> புகழ் எனின் உயிரையும் தருவர்
> பழி எனின் உலகுடன் தரினும் கொள்ளலர்.

புகழுடன் வாழும் பெருமையையே, பிறப்பில் பெற்ற பேறு என்ற தமிழர்தம் தனியான கொள்கையையே, வள்ளுவர் மிக எளிய சொற்களால், அதே சமயத்தில் உள்ளர்த்தம் நிறைந்த சொற்களால்பாடி வைத்திருக்கிறார்.

இப்பொழுது நாம் மீண்டும் குறளை ஒருமுறை படிப்போம்.

**தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று.**

மனிதன் பிறக்கிறான்; இறக்கிறான் சூரியன் தினம் தினமஉதிக்கிறான். தினம் தினம் தோன்றி - மறைகிறான் அதுபோல சாதாரண மக்கள் வருவதையும் போவதையும் வந்தார்கள், வாழ்ந்து போனார்கள் என்று குறிப்பது இயற்கை.

திறமையால் பெருமை பெற்றவர்கள் வருவதைத்தான் தோன்றினார்என்று கௌரவித்துக் கொண்டாடுவார்கள் மனிதர்கள்.

'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு' என்பது தமிழ்ப் பாடல்.

ஒவ்வொரு மனிதரும் பிறக்கும் போது, ஒவ்வொரு வகையான திறமையுடன்தான் பிறக்கின்றார்கள். தனது தகுதியைத் தெரிந்து கொண்டு,வளர்த்துக் கொள்பவர்கள், உயர்ந்தவராகின்றார்கள். தங்களைப் புரிந்து கொள்ளாமல், தான் தோன்றித் தனமாக வாழ்ந்து, உள்ளிருக்கும் திறமைகளை வளர்க்காமல் விட்டு விடுபவர்கள், வீணாக அழிந்து போகிறார்கள்.

வந்தவர் கோடி, வாழ்ந்தவர் கோடி, எத்தனைபேர் வாழ்கிற மக்கள் மனதில் வாழ்கிறார்கள்? இந்தக் கேள்விக்குப் பதிலாக ஒவ்வொருவரும் முயல வேண்டும். தகுதியுடன் திகழ வேண்டும். மற்றவர்கள் புகழ்ந்திட வேண்டும். அப்படி ஒரு மணியான வாழ்க்கையை மக்களே நீங்கள் வாழ முயல வேண்டும் என்ற வேட்கையில்தான் வள்ளுவர் இந்தக் குறளைப் பாடியிருக்கிறார்.

நாமும் இனி புகழுடன் தோன்றலாம் அல்லவா!

நம்புங்கள் - முயலுங்கள். நிதமும் உழையுங்கள். நிச்சயம் நடக்கும். நினைத்ததைக் கொடுக்கும்.

# 9. கல்லாரும் கற்றவரும்

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவி லார். (140)

ஒழுக்கம் உடைமை என்று அதிகாரத்தில் வரும் பத்தாவது பாடல் இது.

உலகத்தோடு பொருந்த ஒழுகுதலைக் கல்லாதார், பல நூல்களையும் கற்றாராயினும், அறிவிலாதார் ஆவர் என்று பரிமேலழகரின் உரை விரிகிறது.

உலக மக்களோடு ஒன்றுபட்டு, நடந்து கொள்ள வேண்டியதைக் கற்றுக் கொள்ளாதவர்கள், பல நூல்களைக் கற்று அறிந்திருந்தாலும், அறிவு இல்லாதவர்களே ஆவார்கள் என்று திருக்குறள் முனுசாமி விளக்கம் தருகிறார்.

பல நூல்களைக் கற்றிருந்த போதிலும், உலகத்தில் உயர்ந்த பெருமக்களோடு சார்ந்து ஒழுகும் முறையைக் கற்றுக் கொள்ளாதவர்கள், அறிவில்லாதவராகவே கருதப்படுவார்கள் என்று நாவலர் நெடுஞ்செழியன் கூறுகிறார்.

உயர்ந்தாரோடு பொருந்தி உறவாடும் வாழ்க்கைக் கல்வியைக் கல்லாதவர், மற்றைப் பலப் பல கல்விகளைக் கற்றவரே எனினும், அறிவில்லாதவரே ஆவர் என்று மதுரை இளங்குமரனார் பொருள் கூறுகிறார்.

எல்லா உரையாசிரியர்களும், ஒத்தக் கருத்துடன்தான் உரை தந்தாலும், உலகம் என்பதைத் தான், சற்று அழுத்தமாக நினைக்காமல், சமத்காரமாகச் சொல்லி இருக்கின்றார்கள்.

உலகம் என்பதற்கு உலக மக்கள், உயர்ந்தோர், உலகவழக்கு என்பதாகப் பொருள் கண்டிருப்பது உண்மைதான்.

உலக வாழ்க்கைக்கு முன் உதாரணமாகக் கொள்ள வேண்டியவர்கள் உயர்ந்தோர்கள் தாம் என்பதுதான் முக்கியப் பொருளாக இருக்கிறது.

உயர்ந்தோர் என்பதற்குரிய பொருளைப் பார்க்கிற பொழுது, மற்றவர்களைவிட மேம்பட்டவர் என்றுநாம் கொள்ளலாம்.

அன்பால் உயர்ந்தோர், பண்பால் உயர்ந்தோர், அறிவால் உயர்ந்தோர், என்று பலவாறான நிலைகளிலும் நாம் பார்க்கலாம்.

இவர்கள் எல்லோரையும்விட, பணத்தால்உயர்ந்தோராக இருக்கிறார்களே, அவர்களைத்தான் உலகம் போற்றுகிறது, புகழ்கிறது, பின் செல்கிறது, காலடி மண்ணை எடுத்தும் கண்ணில் ஒற்றிக் கொள்கிறது.

'கல்லானே ஆனாலும் கைப்பொருள் ஒன்று உண்டாயின் எல்லோரும் சென்றங்கு எதிர்கொள்வர்' என்று பணக்காரன் பெறுகிற பெருமையைப், பழம் பாடல் ஒன்று பாடுகிறது.

பணம் இல்லாதவன், அறிவாளியாக, ஆற்றல் மிக்கவனாக இருந்தாலும், அவனிருக்கும் சமுதாய நிலை என்ன? அதற்கும் பதில் தருகின்ற பாடல் இதோ!

'கையில்' காசில்லாதவன் கடவுள் ஆனாலும் கதவைச் சாத்தடி'

இது விலைமாதருக்குரிய பாட்டாக இருக்கலாம். ஆனால், அது, காசுக்கு விலைபோகிற மக்களின் ஒட்டு மொத்தக் கருத்தாகவேதான் தொனிக்கிறது.

இன்றைய சமுதாயத்தில், சாராயம் விற்பவன் தான், சகல வசதிகளுடன் வாழ்கிறான். சமுதாய அந்தஸ்து, அரசியல் தலைமை; அறிவுலகில் அனைத்துப்பட்டங்கள். ஆய்வறிஞர் என்ற பட்டயம். அகில உலக மரியாதை எல்லாம் அமோகமாய்க் கிடைக்கிறது.

இழிவான வழிகளில், வாழ்க்கைத் தரத்தில் மேலுக்கு வந்தவர்களை, நாம் உயர்ந்தோர் என்று ஏற்றுக் கொள்ளலாமா? அவரது வாழும் வாழ்க்கை முறையைச் சார்ந்து கொள்ளலாமா! அதையே! உலகத்தோடு ஒட்டி வாழ்வது என்ற உண்மை வாழ்வாகக் கொள்ளலாமா!

அது முடியாதென்றால்? உலகம் என்பது உயர்ந்தோர் என்னும் சொல்லில் சுழன்று கொண்டிருக்க முடியாது என்றே, எண்ணத் தோன்றுகிறதல்லவா? அதுதான் இன்றைய சமுதாய நிலை.

அப்படியென்றால், உலகத்தோடு ஒட்ட ஒழுக வேண்டும் என்பதை, உயர்ந்தோர்,சான்றோர் என்றுதான் அர்த்தமாகிக் கொண்டிருக்கிறார்கள் அனைத்து ஆசிரியப் பெருமக்களும்.

அதற்கும் மேலே உள்ள அர்த்தத்தை ஏனோ அவர்கள் நினைவுக்குக் கொண்டு வரவில்லை.

உலகம் என்தற்கு ஆகாயம், பூமி, நிலம், திசை, சிருஷ்டிப் பொருள்கள் என்றெல்லாம் அர்த்தங்கள் இருக்கின்றன.

பஞ்ச பூதங்களை உள்ளடக்கியதுதான் பூமியும் ஆகாயமும். ஆகாய வானத்திலிருந்து ஒளி, காற்று, நீர், எல்லாம் கிடைக்கிறது. பூமியிலிருந்து வாழ்வுக்கு வேண்டிய பொருட்கள் எல்லாமும் பெருமளவில் கிடைக்கின்றனவே!

ஆகாயமும் பூமியும்தான் உண்மையான உலகம். நீடித்து நிலைத்து நிற்கும் உலகம்.

இங்கு வந்து பிறக்கின்ற ஜீவராசிகள் எல்லாம் இருந்து ஒழிவனவே தவிர, எப்போதும் இருந்து வாழ்ந்திருக்கப் போவதில்லை. ஆகவே, நிலைமாறி, தடுமாறி, நிறம் மாறி, தரம் மாறிப் போகின்ற ஜீவன்களைப் பார்த்து கற்றுக் கொள்ளலாம். ஆனால், அவற்றையே பின்பற்றி வாழ இயலுமோ?

பிறகு எதனுடன் ஒட்டி வாழ வேண்டும்? யாருடன் ஒட்டி வாழ வேண்டும்.

மனிதரை வாழவைத்துக் கொண்டிருக்கிற, மகா சக்திகளான காற்று, கனல், புனல், ஒளி, நிலம் இவற்றுடன் தான் ஒட்டி வாழவேண்டும்!

அதெப்படி முடியும் என்று தைரியத்துடன் கேட்பவர்களும் இருக்கின்றார்கள்!

சார்ந்து வாழ்கிற முறையை, மூன்று வகையாக நாம் பிரித்தும் விரித்தும் பார்க்கலாம்.

**1. ஒத்துப்போவது**

**2. ஒட்டிப்போவது**

**3. ஒன்றிப் போவது.**

மனதுக்குப்பிடிக்காவிட்டாலும், நினைவு அளவில் நெகிழ்ந்து கொடுத்து, அனுசரித்துக் கொள்வது. இது ஒரு Mental Adjustment. பிறகு, உடல் அளவில் ஒத்துப்போவது என்பதுதான் ஒட்டிப் போவது, அதாவது ஒட்டி உறவாடுவதாகும்.

மூன்றாவது நிலைதான் ஒன்றிப்போவது. அதாவது மனத்தாலும் உடலாலும், செயலாலும் ஒன்றிப்போவது. ஒன்றுதல் என்பது இரண்டறக் கலத்தலாகும். ஆமாம். ஒன்று+இ என்று நாம் அந்தச் சொல்லைப் பிரித்தால், இ என்றால் ஆச்சரியம் என்று பொருள். ஆச்சரியப்படும்படியாக ஒன்று கலந்து விடுதல்.

இங்கே நாம் கூற வந்தது, இயற்கையோடு ஒன்றிக் கலந்து விடுகிற வாழ்க்கையைத்தான்.

நீரை எப்படிப் பயன்படுத்துவது?. நிலத்தில் எப்படிப் பயன் பெறுவது?. தீயை எப்படித் திறமையாகக் கையாள்வது என்பது போலத்தான் கற்க வேண்டிய கல்வி அமைய வேண்டும்.

கல்வி:கல்+வி என்பது கல்வி - வி என்றால் அறிவு என்று அர்த்தம். அறிவோடு கற்பதுதான் கல்வி.

இங்கே அறிவு என்பதும் கல்விஎன்பதும். உலகம் என்கிற இயற்கையோடு ஒட்டி வாழ்வதுதான்.

இயற்கையிலும் தூசி இருக்கிறது, அழுக்கு இருக்கிறது, மாசு இருக்கிறது. பிசுக்கு இருக்கிறது. கசடு இருக்கிறது.

இவற்றைக் களைந்து, திறமையால் மிகுந்து, தேர்ச்சி

பெற்று மகிழ்ந்து வாழ்கிற வாழ்க்கை வாழ்பவர்களைத்தான் அறிவுள்ளோர் என்றும், இத்தகைய செயற்பாடற்றவர்களை அறிவில்லாதவர்கள் என்றும் வள்ளுவர் பாடுகின்றார்.

உலகமாக விளங்கும் பஞ்சபூதங்களொடு நெஞ்சால் கலந்தும், நினைவால் இணைந்தும் உடலால் வாழ்கிற வாழ்க்கைத்தான் கல்வியாகும்.

ஏனென்றால், பஞ்த பூதங்கள் என்றும் மாறாத தன்மையுடன், ஒரேவித ஒழுக்கத்துடனே இயங்குகின்றன. சூரியன் கிழக்கில் தான் உதிப்பான். மேற்கில் மறைவான் என்று, அவனது இயக்கத்தை அகிலமே அறியும், காற்றின் திசையும் , விசையும் மக்களுக்குத் தெரியும். நீரின் போக்கும் நீக்கும் எல்லோருக்கும் தெரியும்.

அதுதான் இயற்கையின் ஒழுக்கம். அதையும் எதிர்பாராமல், எல்லோருக்கும் தந்து மகிழ்விக்கும் கடமை மிகுந்த இயக்கம் ஆகும்.

கைம்மாறு கருதாது, காலத்தோடு நேரத்தோடு உதவி, காத்து வருகின்ற இயற்கையோடு ஒட்டி உறவாடத் தெரியாதவர்கள், அவர்கள் எவ்வளவு தான் பலப் பல நூல்களைக் கற்றிருந்தாலும் அவர்கள் அறிவில்லாத வர்களாகத்தாம் வாழ்வார்கள்.

இயல்+கை தான் இயற்கை ஆகிறது. கைஎன்றால் ஒழுக்கம், பொருந்து, முறைஎன்று பொருள்கள் உண்டு.

ஆக இயற்கையானது ஒழுக்கத்தின் ஒழுக்கமான முறையோடு செயல்பட்டு, மக்களுக்கு எவ்வாறு வாழ வேண்டும் என்று முன்மாதிரியாக இயங்கிக்காட்டுகிறது. இயக்கிக் காட்டுகிறது.

அதனோடு ஒட்ட வாழ்வோம். ஒத்து வாழ்வோம், ஒன்றி வாழ்வோம். உயர்ந்தோராய் வாழ்வோம். சகல நலங்களிலும்

இணைந்தோராக வாழ்வோம் என்று ஒழுக்கமுடைமை என்ற பகுதியில், பாடிவைத்த வள்ளுவரைப் பாடிப்பரவுவதுடன் நின்றுவிடாது, இயற்கை வாழ்வு வாழ்வோம் என்று இன்றே, ஓர் உறுதியை மேற்கொள்வோமாக!

# 10.அவ்வுலகமும் இவ்வுலகமும்

சிந்தனைக்கு உகந்த, அதே நேரத்தில் சிக்கல் மிகுந்த குழப்பம் நிறைந்த குறள் ஒன்றுக்குப் பொருள் காண முனைந் திருக்கிறோம்.

**அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு**
**இவ்வுலகம் இல்லாகி யாங்கு. (247)**

★ உயிர்கள் மேல் அருள் இல்லாதார்க்கு வீட்டுலகத்து இன்பமில்லை, பொருளில்லார்க்கு இவ்வுலகத்து இன் பமும் இல்லையாயினாற் போல என்று பரிமேலழகர் உரைகூறுகிறார்.

★பொருள் இல்லதவர்களுக்கு இவ்வுலகத்து இன்பம் இல்லை யாகலைப்போல, உயிர்கள் மீது அருள் இல்லாதவர்களுக்குள் அந்த உலகப் பேரின்பம் இல்லையாகும் என்று திருக்குறளார் முனுசாமி, இதற்கான உரையைத் தொடர்கிறார்.

★பொருள் இல்லாதவர்களுக்கு இவ்வுலகவாழ்வு இல்லாதவாறு போல, அருள் இல்லாதவர்களுக்கு புகழ் உலகில் இடமும் பெருமையும் இல்லை என்று நாவலர் நெடுஞ்செழியன் உரை எழுதுகிறார்.

★பொருளில்லாதவர் இவ்வுலகில் வாழ்ந்தாலும், அவருக்கு உலகியல் பேறு இல்லை. அதுபோல, அருள் இல்லாதவர் புகழுலகில் புகுந்தாலும், அவர்களுக்குப் புகழ்ப் பேறு இல்லை என்று மதுரை இளங்குமரனார் உரை சொல்லுகிறார்.

இந்தப் பாடல் எளிதாகப் புரிகிறது என்பதால், விளக்கமும் வழக்கமாக, மன உணர்வுடன், பொருள் நினைவுடன் கூடிய வாழ்வியலைக் குறித்துக்காட்டுவதாகவே உரைகள் பிறந்திருக் கின்றன.

பொருள் இல்லையேல் இவ்வுலகத்து இன்பம் இல்லை இல்வுலகம் வாழ்வுப் பேறு இல்லை; இவ்வுலக வாழ்வில்லை என்று இயல்பான பொது அர்த்தமாகவே மொழியப் பட்டிருக்கிறது.

அருள் இல்லாதவர்களுக்கு இந்த உலகம் அதாவது காட்சிக்கும் கற்பனைக்கும் அப்பாற்பட்ட உலகம். அந்த உலகத்து இன்பங்கள் இல்லை.

அதற்கு அருள் காரணமாகிறது என்கிறார்கள்.

இந்தக் குறளில் உள்ள பொருள், அருள் . அவ்வுலகம் என்ற மூன்று சொற்கள்தாம், சிந்தனைக்குரியவை; சிக்கல் மிகுந்தவை. சிலிர்த் தெழச் செய்பவையாக உள்ளன.

பொருள் என்றால் பணம், செல்வம் என்றுதான் எல்லோரும் பொருள் கண்டிருக்கின்றனர்; கொண்டிருக் கின்றனர்.

பொருள் என்றால் உடல் என்று ஒரு அர்த்தம் உள்ளது என்பதை, எல்லோரும் பொருட்படுத்தாது விட்டுவிட்டார்கள்.

பொருள் என்றால் பொன். பொன் என்றால் உடம்பு. உடல் என்றால் பொருள். பொன் இப்படி அர்த்தங்கள் உண்டு.

பொருள் இருந்தால்தான் இவ்வுலக வாழ்க்கை, இன்பவாழ்க்கை உண்டு, என்று நாம் ஒரு வாதத்திற்காக ஒத்துக் கொண்டாலும், பொருள் இருக்கின்றவர்கள் எல்லோரும், இன்பத்திலேயா திளைக்கின்றார்கள்?

பொருளுடையவர்கள் எல்லாம் இன்பத்தில் திளைப்பவர்கள்போல நடிக்கின்றார்கள். எல்லாருக்கும் முன்னே நடக்கின்றார்கள். அவர்கள் படும் பாடு நாய்படுமா?

பொருள்இல்லாத ஏழைமக்கள் வாழ்க்கையில். எத்தனை எத்தனை மகிழ்ச்சிகள் இயல்பாக இருக்கின்றன.

பசி நேரத்தில் அவர்கள் படும்பாடு கொடியதுதான் என்றாலும், பசி தீர்ந்தபிறகு, அவர்களின் பேச்சும் மூச்சும் பேரின்ப நிலையில் அல்லவா நிலைநிறுத்தி வைக்கிறது.

ஆகவே, வள்ளுவர் சொல்லவந்த பொருள் இங்கே பணமல்ல. உடல் பற்றித்தான்.

உடல் அதாவது வலிமையான உடல், வாழ்க்கைச் சூழ்நிலைகளைச் சந்திக்கின்றன. வல்லமையுள்ள உடல் எந்த நேரத்திலும் இயற்கையான இடர்ப்பாடுகளை எதிர்கொண்டு, ஏற்றம் பெற வைக்கின்றது. இத்தகைய உடல் இல்லாதவர்கசு உலக வாழ்க்கை இல்லை என்று சொல்லாமல், இவ்வுலகமே இல்லை என்றல்லவா வள்ளுவப் பெருங்கவிஞர் பாடுகின்றார்.

எனக்குத் தெரிந்த, ஏன், எல்லோருக்கும் தெரிந்த ஒருவர் பெருங்கோடீசுவரர். அவருக்கு ஆள், அம்பு, அரண்மனை வாசம், ஆசைப்பட்டது அத்தனையும் பெறக்கூடிய சகவாசம் இருந்தது. ஆனால்,சிந்தனையிலே ஒரு நொடிகூட மகிழ்ச்சி இல்லை.

காரணம் அவர்நோயால், பெருநோயால் அவதிப்பட்டார். அவருக்கு உடமையாக இருந்த சொத்தும் செல்வமும் என்ன இன்பத்தைத் தந்தது! பொருள் வாழ்க்கைக்குத் தேவை. ஆனால் பொருளே வாழ்க்கையாகி விடாது.

அதற்கு மாறாக இப்படி எண்ணிப் பாருங்கள். உடலே வாழ்க்கை. உடலின்றி வாழ்க்கை இல்லை. உலகமே இல்லை. இருந்தும் இறந்தவராகிவிடுவார்கள் அல்லவா!

அதனால்தான் பொருள் என்கிற உடல் இல்லாதவர்களுக்கு இவ்வுலகமே இல்லை.

உடல் என்பது உயிரின் உடை. ஆவியின் உடை. ஆத்மாவின் உடை. இந்த உலக வாழ்க்கையை உற்சாகமாக உணர வைக்கின்ற உயிராகிய ஆத்மாவிற்கு உதவுகின்ற காப்பு. ஆமாம். பாதுகாப்பு.

**பொற்காப்பு**

அடுத்த வரியானது அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை. அருள் என்றால் அனைத்துயிர்களிடத்திலும் இரக்கம் என்றும், அவ்வுலகம் என்றால் வீட்டுலகம்,

விண்ணுலகம், இறந்த பிறகு பெறுகிற புகழ், உலகம் என்றும் பொருள் கூறி நம்மை மயக்கி விட்டார்கள்.

ஆகவே நாம் அருள் என்றால் என்ன? அவ்வுலகம் என்றால் என்ன? என்பதற்குரிய நுண்ணிய அர்த்தங் களைப் பார்ப்போம்.

அருள் என்கிற சொல்லுக்குப் பிங்கல நிகண்டு தருகிற பலபொருள்களை முதலில் பார்ப்போம்.

தகவும் கருணையும் இரக்கமும் தயவும்
கிருபையும் அபயமும் கிளர் அருளாகும். (1772)

கருணை, இரக்கம், தயவு, கிருபை, அபயம் என்னும் சொற்கள், அனைத்துக்கும் நமக்குப் பொருள் புரியும்.

'தக்கார் தகவு இலார் என்பது அவரவர்தம் எச்சத்தால் காணப்படும்' என்று மக்களைப் பிரித்துக் காட்ட வள்ளுவர் பாடினாரே, அந்தத் தகவு என்ற சொல்லுக்குரிய பொருளைப் பார்ப்போம்.

இத்தகைய அரியகுணங்கள் கொண்டவர்களைத்தான் அருளாளர் என்கிறோம்.

அப்படி என்றால் அவ்வுலகம் என்பது எது?

மேலுலகமா? வீடு என்று பேசப்படும் மோட்சலோகமா? கண்ணுக்குத் தெரியாத, கற்பனைக்கும் எட்டாத, செத்த பிறகு சேரப்போகிற இடம் என்று சொல்லப்படுகிற அவ்வுலகம் என்றால், அதில் பெறப் போகிற பெருமையும் புகழும் யாருக்குத் தெரியும்?

இவ்வுலக வாழ்க்கைக்குப் பொருளாகிய உடல் வேண்டும். உடலும், உடலில் உருவாகும் ஒப்பற்ற குணங்களும் பெருமை பெற, அவ்வுலகில் இடம் வேண்டும். அவ்வுவகம் என்றால் என்ன?

அவ் என்ற சொல்லுக்கு அவை என்று அர்த்தம்.

அவை என்றால், கலைஅரங்கு, நாடக அரங்கு, கூட்டம், சபை, புலவர் என்று அர்த்தம்.

புலவர் என்றால் அறிஞர், கலைஞர், கவிஞர், கூத்தர், புலமையோர்.

ஞானிகள், முதுவர், மூத்தோர், மேலோர், விற்பன்னர், சிற்பியர் என்றெல்லாம் அர்த்தம்.

ஆகவே, அவ்வுலகம் என்பது, மக்கள் கூடுகிற கலை அரங்கம், ஆடல் பாடல் நிகழ்கிற நாடக அரங்கம், பொதுமக்கள் கூடுகிற கூட்டம். புலவர்கள் என்று புகழப்படுகிற பேரறிவாளர்கள், பெரியோர்கள் தோன்றுகின்ற பெரும் சபை.

இந்த உலகத்தில் இடம் பெற வேண்டும் என்றால், புகழும் பெருமையும் மதிப்பும் மரியாதையும் பெற வேண்டும் என்றால், யாராயிருந்தாலும் அருளாளராக இருக்க வேண்டும்.

அத்தகைய அருள் இருந்தால்தான் அவ்வுலகில் இடம் உண்டு. இருள் இருந்தால் அந்த எல்லைக்குள்ளே கூடச் செல்ல முடியாதல்லவா?

இப்போது நமக்குக் கிடைத்திருக்கும் புதிய பொருளைத் தொகுத்துப் பார்ப்போம்.

பொருள் என்று போற்றப்படுகின்ற நல்ல உடல் இல்லாதவர்களுக்கு இந்த உலகமே இல்லை என்கிறபோது! வாழ்க்கை எங்கே கிடைத்துவிடப் போகிறது?

கற்றறிந்த சபையிலே இடமும் வரவேற்பும் கிடைக்க வேண்டும் என்றால், ஆன்றவிந்த அருளும் அறிவும் திருவும் அல்லவா இருக்க வேண்டும்.

நல்ல உடலிலே நல்ல மனம் என்பார்கள்.

துறவியர்க்கு நல்ல உடலும் அதனால் நல்ல மனமும் கிடைக்கும் என்று கூறுகிற அறிவுரை இல்லறத்தாருக்கும் பொருந்துமல்லவா!

சபையிலே புகழும், வாழ்க்கையிலே மகிழ்வும் பெற பொருளும் வேண்டும். அருளும் வேண்டும் என்றால் இப்படி அமைந்தால் தானே முடியும். அதைத்தான் வள்ளுவர் அழகாகப் பாடினார்.

அவ்வுலகத்திற்குத் தகுதியானவர்களாக ஆவதுதானே அறிவுடையார்க்கு அழகு. அந்த ஆனந்த உலகிற்குள் இன்பம் துய்க்க நம்மை நாம் உயர்த்திக் கொள்வோமாக!

# 11. இரந்து வாழும் ஈனம்

குறளுக்குப் புதிய பொருள் என்று கூறிய உடனேயே குதர்க்கமாகப் பேசுபவர்களை, குரூரமாகப் பார்ப்பவர்களை, எதற்கிந்த வேண்டாத வேலை என்று எதார்த்தமாகப் பேசி எரிச்சலைத் தணித்துக் கொள்பவர்களையெல்லாம் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு நிறையவே கிடைத்தது.

குறளுக்குத்தான் எல்லோரும் பொருத்தமான பொருளைப் பிழிந்தெடுத்துத் தந்து விட்டார்களே! பிறகென்ன புதிய பொருள் என்று பிரலாபிக்கிற தொனி எனக்குப் புரிகிறது.

மணலில் தோண்டுகிறோம்; நீர் சுரக்கிறது. இன்னும் கொஞ்சம் முயற்சித்தால், மேலும் கிடைக்கும் என்று முயற்சிப்பது தவறில்லையே!

முன்னே தோண்டியவர்களை, இந்த முயற்சி எப்படி ஊனப்படுத்தும்? பேரைக் கெடுக்கும் என்பது எனக்குப் புரியவில்லை. அதை உங்களிடம் விட்டுவிட்டு என் முயற்சியைத் தொடர்கிறேன்.

முன்னோர்கள் பொருள் சொல்லியவை பொன் போல என்றால், என் பொருளானது, அதற்கு மெருகு ஏற்றுவது போல; மேன்மைப் படுத்துவது போல என்பதை வாசகர்கள் பலர் என்னைச் சந்திக்கும் போது பேசி, வரவேற்றது என்னை மேலும் சிந்திக்கத் தூண்டியது. சிந்தையும் அதனுள் ஒன்றிப் போய் விட்ட காரணத்தால், மேலும் என் ஆய்வு தொடர்கிறது.

**இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின், பரந்து**
**கெடுக உலகு இயற்றி யான்** (1062)

★ இவ்வுலகத்தைப் படைத்தவன், இதன்கண் வாழ்வார்க்கு முயன்று உயர் வாழ்தலையன்றி இரந்தும் உயிர் வாழ்தலை வேண்டி விதித்தானாயின், அக்கொடியோன்

தானும், அவரைப் போன்று, எங்கும் அலைந்து கெடுவானாக' என்றுபரிமேலழகரின் உரை படைத்தவன் மீது பாய்ந்து ஒலிக்கின்றது.

உலகத்தினை உண்டாக்கியவன், வாழ்வார்க்கு - முயற்சி செய்து வாழ்வதல்லாமல் யாசித்தும் உயிர் வாழ்தலை விரும்பி விதித்தானாயின், அக் கொடியோன்தானும் அவனைப் போன்று எங்கும் திரிந்து கெடக்கடுவன் என்று, தீர்க்கமாகக் கூறிப்பொருளுரைக்கிறார் திருக்குறள் முனுசாமி.

உலகில் ஒருவன் இரந்து தான்உயிர் வாழ வேண்டும் என்றால், குடி மக்களுக்கான பொருளைத் திரட்டிக் தரும் பொருளை ஏற்றுக் கொண்டிருக்கும் நாடாள்பவன் அப்படிக் கடமையைச் செய்யாமையின் காரணமாக, இரப்பவரைப் போலவே அலைந்து திரிந்து கெடுவானாக என்கிறார் நாவலர் நெடுஞ்செழியன்.

இரந்து பெற்றுத்தான் ஒருவன் வாழ வேண்டுமென்னும் நிலைமை உண்டாயின், அவ்வாறு வாழச் சட்டங்களை இயற்றிய ஆட்சியாளன் அலைந்து கெடுவானாக என்று மதுரை இளங்குமரனார் சற்று மாறுபட்டுப் பொருள் கூறுகின்றார்.

இங்கே, இனி நாம் எப்படி இதற்குப் பொருள் காணப் போகிறோம் என்பதைத் தொடர்வோம்.

உலகியற்றியான் என்பதுதான் குறளின் வரி.

உலகு என்பதற்கு உயர்ந்தோர், ஒழுக்கம், உலகம் என்பது பொருள் .

சான்றோர் என்பதற்கும் உலகம் என்று பொருள்.

**இயற்றுதல்** என்றால் ஏவுதல், செய்தல், நடத்தல் என்று பொருள்.

**இயற்றி** என்றால், முயற்சி என்றும், சக்திஎன்றும் பொருள்.

அரசன்தான் அனைத்துக்குக் காரணம் என்பதாக மனத்தில் கொண்டு, அவனேஅலைந்துகெடுக என்று கூறினால், நாம் பாதிக் கிணறு தாண்டியது போல ஆகிவிடும். அரசனது தொழில் என்று ஆறு நிலையைக் கூறுவர்.

ஓதல், பொருதல், உலகுபுரத்தல், ஈதல் , வேட்டல், படைபயிறுதல்
(பிங்கல நிகண்டு 767)

அரசனது நிலை, பகைவர்களைப் பொருது, மக்களைக் காத்து, ஈந்து, உதவுவது என்பன போன்ற தொழில்கள்.

இங்கே வள்ளுவர் கூறுவது உலகு இயற்றியான் என்பதால், உலகமாகிய சான்றோர்கள், என்கிறஉயர்ந்தோர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளே விதிகளாக அமைகின்றன.

அரசனுக்கு உதவுவதற்காகப் பதினெட்டு வகை தொழில் செய்பவர்கள் உண்டு.

***1.*** **ஐம்பெருங்குழு 2. எண்வகைத் துணைவர் 3. ஐவகை உறுதிச் சுற்றம் *(மொத்தம் 18)***

***1.*** **ஐம்பெருங்குழு:**

**மந்திரியார், புரோகிதர், சேனாபதியர், தந்திரத்தூதர், சரணர் என்றிவர அந்தமில் அரசர்க்கு ஐம்பெருங்குழுவே *(பிங். 769)***

***2.*** **எண்வகைத்தலைவர்:கரணத்து இயல்வோரும் கருமதிக்காரரும், அகன்ற சுற்றமும், கடைகாப் பாளரும், நகர மாக்களும்; நளிபடைத் தலைவரும் இவுளி மறவரும் யானை வீரரும் அரசர்க்கு எண்பெரும் துணைவ ராகும். *(பிங் 770)***

பொருள் ; கரணத்து இயல்வோர்: திருமண காரியங்கள் செய்வோர் கரும அதிகாரம் :ஈமக்காரியம் செய்வோர்.

இவுளி மறவர்:குதிரை வீரர்

***3.*** **ஐவகை உறுதிச் சுற்றம்:**

**அடுத்தநட்பாளர், அந்தணாளர்,**
**மடைத்தொழிலாளர், மருத்துவக் கலைஞர்**
**நிமித்திகப் புலவர், நீணிய வேந்தர்க்கு**
**உரைத்த ஐம் பேர் உறுதிச் சுற்றும் *(பிங்.771)***

இத்தகைய பதினெட்டு வகைத் தொழில் செய்பவர்கள்,

அறிவும் ஆற்றலும், நீதியும், நேர்மையும், நியாயமும், இரக்கமும், ஈகைத் தன்மையும் உடையவர்களாக இருந்து அரசர்க்கு உதவி செய்தால் நாடு நாடாக உயரும். மக்களும் மக்களாக வாழ்வர். வாழ்வும் வாழ்வாகச் செழிக்கும்.

இப்படி மக்களுக்கு வாழ்வதற்குரிய வழிவகைகளைச் சொல்லாத, வாழ்க்கை முறைகளை வகுத்துத் தராத, வழிகாட்டுகிற விதிமுறைகளைத் தொகுத்துத் தராத உலகுடன் அரசன் ஆளுகிற போது அங்கே என்ன நடக்கும்?

இரந்து உயிர் வாழ்தல் என்பது ஈனத்தனமானது என்றாலும், அது நடந்துதான் தீரும். ஏனென்றால், உடல் ஊனமுற்றவர்கள், குறைபாடுள்ளவர்கள், நோகும் நோயாளிகள், வலுவற்றவர்கள், இயல்பாகச் செயல்பட முடியாதவர்கள் எல்லாம் பிறரிடம் கேட்டோ, கெஞ்சியோ, குழைந்தோ, கூத்தாடியோதான் வாழ முடியும்; வயிற்றைக் கழுவ முடியும். இத்தகைய வாழ்க்கையே இரந்து உயிர்வாழும் நிலை.

இப்படிப்பட்டவர்கள் இரந்து, பிச்சை எடுத்துத் தங்கள் உடலிலிருந்து உயிர் பிரிந்து போகாமல் இருக்க வாழ்பவர்கள். இவர்களைக் காக்கத்தான் அறம் செய்யுங்கள் என்றனர் . ஐயமிட்டு உண் என்றனர் காக்கைக்கு உணவு படைப்பதுபோல, கையறு நிலையினருக்கும் உதவுங்கள் என்றனர்.

ஆனால் , வள்ளுவர் பாடிய வரியைப் பாருங்கள்.

**இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின்** என்றார்.

இங்கே உம் என்று ஒன்றைச் சேர்த்திருக்கிறார். நல்ல உடல் நலமுள்ளவர்கள் பலமும் வளமும் உள்ளவர்கள், அறிவுக் கூர்மையும் ஆற்றலும் நிறைந்தவர்கள், வாழ்வதற்காக அழைக்கின்ற வல்லமை வாய்ந்தவர்கள் ஆகிய குடி மக்களுக்கு அரசும் அரசின் பேராயமும் வழிகாட்டாவிட்டால் அவர்கள் வாழ்விழந்து போவார்களே!

தொழில் செய்ய வாய்ப்பும் வசதியும் செய்து தராமல் சுயநலமாய் ஆட்சியினர் அதிகாரிகள் வாழ்ந்து கொண்டால்

நாடு சுடுகாடாய்ப் போகுமே!

மக்கள் உடலால் வெறுமையாவர். பொருளால் வறுமை அடைவர். உணர்வால் வற்றிப் போவர். வாழ்வால் செத்துப் போவர்.

இப்படிப்பட்ட கொடிய நிலைக்கு நாட்டை ஆள்கிறவர் யாராயிருந்தாலும், அரசரை ஆற்றுப்படுத்தாத பதினெட்டு வகை அதிகாரிகளும் பாழ்பட்டுப் போவர் என்று வள்ளுவர் எச்சரிக்கிறார்.

நிலம் சூழ்ந்து நிலவிக் கிடக்கும் கடலுக்குப் பரவை என்று பெயர். பரந்துபட்ட கடலில் சதா அலைகள் தாமே புரண்டு புரண்டு, சீறி மடங்கி அழிந்தொழியும்.

அதுபோலவே, நன்கு திட்டமிடாத அதிகாரிகள், தேர்ச்சி பெறாத காவலர்கள், தீர்க்கமாகத் தங்கள் கடமையுணராத அறிஞர்கள், சான்றோர்கள், அத்தனைபேரும் பரந்து கெடுக என்றும், அதாவது உரவழிந்து, நிலைகுலைந்து நாசமாகுக என்பது போலவே வள்ளுவர் பாடுகிறார்.

வள்ளுவர் சொல்ல வந்த சுவையான செய்தி:

உயிர் வாழ்வதற்கு, உடல் வளர்ப்பதற்கு தொழில் வழிமுறைகளைத் தராமல் மக்களை மரியாதையோடு வாழ்விக்க வகை செய்யாமல் உலகு இயற்றுகிறவர்கள் உருப்படாமல் ஒழிந்து போவார்கள்.

அதனால்தான் பரந்து, அலைந்து கெடுக, பாழ்பட்டுப் போகு என்றார். தவறுக்கு அரசன் மட்டுமே காரணமல்ல. அவன் தன்னைச் சுற்றி வைத்துக் கொண்டிருக்கிற அதிதாரிகளும் வீரர்களும், காப்பாளர்களும் அறிஞர்களும் சான்றோர்களும் தான் காரணம் என்று நடைமுறை சாத்தியமான நல்ல என்ற கருத்தைக் கூறுகிறார்.

பக்கத்தில் வஞ்சக நெஞ்சினரைத் துணையாக்கிக் கொண்டிருந்த தலைவர்கள் எல்லாம் தொலைந்து போன கதையைத்தான் இந்தக் குறள் எடுத்துரைக்கிறது; துல்லியமாக விளக்குகிறது.

# 12. பொருள் பொதிந்த பொருள்

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு (423)

அருமையான குறள் ஒன்றைப் பற்றி இங்கே பொருள் காண வந்திருக்கிறோம்.

எல்லோருக்கும் தெரிந்த குறள்; புரிந்த குறள்; எதற்கெடுத்தாலும் உதாரணமாகக் கூறப்படுகின்ற ஒரு குறள். காலங்காலமாகக் கவனத்தை ஈர்த்து கருத்தைக் கொடுத்து, கடமையைக் கற்றுக் தருகின்ற குறள்.

இதற்குள்ளே என்ன புதிய பொருள் என்று கேட்பதில் கூட சிலருக்குப் பொறுமை இல்லை.

நேரிலே நான் பலரிடம் இதைப் பற்றிப் பேசியபோது நெருப்பைத் தொட்டதுபோல, நெருஞ்சில் முற்களின் மீது காலை வைத்தது போல, வெடுக்கேனத் துடித்தது கண்டு, நானே வெகுண்டு போனேன்; விலகி வந்தேன்.

என்னதான் புதிய பொருள் என்று புரிந்து கொள்ளக் கூடிய பக்குவம், அவர்களுக்கு உள்ளே எழுந்த பதட்டத்தால் பட்டாசு போல வெடித்துச் சிதறியது.

புகழ்பெற்ற உரையாசிரியர்கள் கூறிய பொருளைக் காணலாம்.

யாதொரு பொருளை யாவர் யாவர் சொல்லக் கேட்டாலும் அப்பொருளை மெய்யாய்ப் பயனைக் காணவல்லது அறிவாகும். - (பரிமேலழகர்)

எந்த ஒரு பொருளைப் பற்றியும் யார் சொல்லக் கேட்டாலும் அப் பொருளினுடைய வல்லமையுள்ளது அறிவாகும். (வீ. முனுசாமி)

யாரொருவர் எந்தப் பொருளைப் பற்றிப் பேசினாலும் அதன் உண்மையான பொருளைக் கண்டறிவதே அறிவுடைமை யாகும். (நாவலர் நெடுஞ்செழியன்)

ஆக, எல்லோரும் ஒரே மாதிரியான பொருளைத்தான் உரைத்திருக்கின்றனர். இதில் மாறுபாடும் இல்லை. வேறுபாடும் இல்லை.

40 வது அதிகாரம்:கற்பதற்குரிய நூல்களைக் கற்றல் என்பதான தலைப்பு - கல்வி.

41 வது அதிகாரம்: கல்லாதிருத்தலின் கழிபெரும் தன்மைகளைக் கட்டவிழ்த்துக் காட்டும் தலைப்பு-கல்லாமை.

42 வது அதிதாரம்: தக்கவற்றைக் கேட்டறிதல் என்றுவிளக்குகின்ற தலைப்பு-கேள்வி .

43 வது அதிகாரம்: அறிவுடையாராதல் என்று வழிகாட்டுகிற அறிவுடைமை என்னும் தலைப்பு.

அறிவுடைமை என்னும் தலைப்பில் வருகிற 3வது குறள் அதாவது கல்வி கேள்விகளினாய அறிவொடு உண்மை உறிவு உடையனாதல் என்பதாகத்தான் பரிமேலழகர் அதிகாரம் பற்றிய அருமையான விளக்கம் ஒன்றையும் தந்திருக்கிறார்.

இந்தக் குறளில் மூன்றுமுறை பொருள் என்று சொல் பொழியப்பட்டிருக்கிறது.

**1.எப்பொருள் - எந்தப் பொருள்**

**2.அப்பொருள் - அந்தப் பொருள்**

**3.மெய்ப்பொருள்- உண்மைப் பொருள்**

பொருள் என்னும் சொல்லுக்குப் பொருள் என்றே அர்த்தம் கூறியிருக்கின்றனர்.

**1. எண்பொருள்**

**2. நுண் பொருள் என்றும் உண்டு.**

பொருள் என்றதும் நமது மக்களுக்கு உடனே நினைவுக்கு வருவது பணம்தான்.

இப்படியெல்லாம் நினைப்பார்கள் என்று தெரிந்துதான் பொருள் என்றால் கல்விப் பொருள் என்றும் செல்வப் பொருள் என்றும் பிரித்துக் கூறிச்சென்றனர் முன்னோர். செல்வப்பொருள்

என்பது வீடு, மனை, தோட்டம், துறவு, பணம், பயன்படும் உடைமைப் பொருட்கள் முதலியன.

கல்விப்பொருள் என்பது உண்மை குணம், தலைமை என்பனவாகும்.

பொருள் என்பதற்குப் பொன் என்றும் பொருள். பொன் என்றால் உடல் என்றும் பொருள் உண்டு.

இப்போது நாம் பொருள் என்ற சொல்லுக்குரிய பொருளைக் காண்போம்.

**பொருள் என்றால் கருத்து.**

**பொருள் என்றால் உண்மை.**

**பொருள் என்றால் உடம்பு.**

இக் குறளுக்குப் பொருள் கூறியவர்கள் எல்லோரும் உண்மையான பொருளைக் காண்பது அறிவு என்றே சொல்லிச் சென்றனர்.

இந்த உலகில் உண்மையான பொருள் அதாவது மெய்ப்பொருள் என்ன என்று யாரும் கூறவில்லை. பிறர் வாயிலாகக் கேட்பனவற்றில் எது உண்மையான பொருள் என்று ஆராய்ந்து தெளிவதுதான் அறிவு என்றனர்.

ஆக, மெய்ப்பொருள் என்கிற உண்மையான பொருள் இந்த உலகில் எது?

கல்விப் பொருள், செல்வப் பொருள் என்பது போல, மெய்ப்பொருள் ஒன்று இருக்கிறதல்லவா?

அந்த மெய்ப்பொருள்தான் நமது உடல் ஆகும்.

நமது உடலை பொய் என்பார்கள். மாயை என்பார்கள். அழிந்து போவது என்பார்கள்.

என்றாலும் பொய்யில்லாத உண்மை. மாயையில்லாத நிஜம், அழிந்தாலும் உலகில் என்றும் புகழாய் நிலைத்திருப்பது மனித உடலினால் ஏற்படும் மகிமைதானே!

இப்போது நாம் முடிவான பொருளுக்கு வருவோம். யார்யார் எந்த எந்தப் பொருளில் நமது மனித உடம்பின் மகிமையைப் பற்றிக் கூறினாலும் கருத்தை நுட்பமாகப் புரிந்து கொள்ளுங்கள்.

உடலைப் பற்றி ஏன் அறிந்து கொள்ள வேண்டும்?

தானம் செய்வதாக இருந்தாலும், தவம் செய்வதாக இருந்தாலும், மானப் பிரச்சினையாக இருந்தாலும் வாழ்க்கையின் குடும்பப் பிரச்சினையாக இருந்தாலும் உடனிருந்து உதவுவது உடல்தான்.

அதனான்தான் அதை வள்ளுவர் மெய்ப் பொருள் என்றார்.

கண்ணுக்குத் தெரிந்த பொருள். கருத்துக்கு உகந்த பொருள். வாழ்க்கையை வாழ்ந்து செல்ல உதவும் பொருள். நிலையான புகழை நல்குகின்ற மெய்ப்பொருள் நமது மனித உடல்தான் என்றால் மறுப்பார் யார்?

அந்த மெய்ப்பொருளைக் காண்பதைத்தான் அறிவு என்றார்.

காண்பது என்பது பொறிகளால் அறிவது. அறிவுடன் ஆராய்வது. அனுபவத்தால் தெரிந்து கொள்வது என்று அர்த்தம். அறி+உ= என்பது ஓர் அகச்சுட்டு என்பர்.

அதாவது எந்தப் பொருளையும் உள்ளும் புறமும் ஆராய்ந்து காண்பதுதான் அறிவு.

மெய்ப்பொருளாகிய உடல் பற்றிய மேன்மையை முழுமையை முதலில் அறிந்து கொள்வதுதான் அறிவுடைமையாகும். ஏன் உடம்பைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டும்?

**உடம்பால் அழியின் உயிரால் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டா.**

திருமூலர் இப்படி தேகத்தைப் பற்றித் தெளிவா பாடினார். யார் எந்தப் பொருளைச் சொன்னாலும், ஏற்புடைத்தாயினும் ஏற்றுக் கொள்ளலாம்.

அந்த யார் யார் என்பதற்கு, இழிந்தோர் உயர்ந்தோர் பகைவர் என்று வகைப்படுத்திக் கூறுவார்கள் அறிஞர்கள்.

இழிந்தோர் கூறும் இழிகுணங்கள், உயர்ந்தோர் கூறும் அறிவுரைகள், பகைவர் பேசும் வஞ்சகக் கருத்துக்கள் எதுவாக இருந்தாலும், ஒருவரை நிச்சயம் மனத்தால் தாக்கும் ; உடலால் அழிக்கும்.

கேட்பது, சிந்திப்பது, தெளிவது, ஒழுகுவது எல்லாம் வாழ்க்கைக்காக என்றாலும், வாழ்க்கை என்பது உடலை வைத்துத்தானே அமைகிறது! சமைகிறது!

மெய்ப்பொருளாகிய உடலுக்கு நன்மை பயக்கின்ற நுண்பொருளைக் காண்பதுதான் அறிவு.

உடலைப் புறம் தள்ளிவிட்டு வாழ்ந்தவர் எல்லாம் அற்பாயுளில் அழிந்தொழிந்தனர். மெய்பொருளின் மேன்மை கண்டவர்களோ நெடுங்காலம் வாழ்ந்தனர். புகழால் உயர்ந்தனர்.

உடலைப்பற்றிய அறிவே உன்மையான அறிவு. உடலைப் பற்றிய ஞானமே மெய்ஞ்ஞானம்.

எவர் எது சொன்னாலும், கேட்பது உங்கள் கடமை. அக் கருத்துக்கள் உங்கள் உடலைக் கெடுக்காத வண்ணம் தற்தாத்துக் கொள்வது சிறப்பான தன்மை. அதுதான் அறிவுடைமை.

ஆக, நாம் காணுகின்ற புதிய பொருள் இதுதான். இழிந்தோர், உயர்ந்தோர், பகைவர் ஆகிய மனித இனத்தினர் கூறுகின்ற கருத்துக்களில் உங்களைக் காத்துக் கொள்ள, மெய்ப்பொருளாக விளங்குகின்ற உடலினைப் பாதிக்காத வண்ணம் வளர்த்துக் கொள்ள அறிந்துகொண்டு பின்பற்றுகிற தன்மையே அறிவுடைமையாகும்.

இங்கே மெய்ப் பொருள் என்பது உண்மையான உடல் ஆகும். அதன் உள்ளும் புறமும் அறிந்து தெளிந்து அறிவுடையோராக நீங்கள் வாழ்க! வாழ்ந்து வளர்க என்பது வள்ளுவரின் வழிகாட்டும் வாக்காக வந்திருக்கிறது.

மெய்ப் பொருளை ஏற்று, போற்றி வாழ்வோமாக.

# 13. ஒத்ததும் செத்ததும்

**ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான் மற்றையான்**
**செத்தாருள் வைக்கப் படும். (241)**

குறளுக்குப் புதிய பொருள் என்றால் கேட்டதும் மிரளுகின்றார்களே தவிர, சொல்வதில் நல்லதிருந்தால் கேட்டுக் கொள்ளலாமே என்பதற்குக் கூட நேரமின்றி, நிலைமாறிப் போகின்றார்கள்.

குறளுக்குள்ளே புதிதாக ஒரு பொருளா என்றால் நான் முயற்சிக்கிறேன். அறிவு முனைப்பபோடுதான். 'நான்' என்ற நினைப்போடு அல்ல.. மதமதப்போடு அல்ல.

குறள் பாக்களைப் படித்துவிட்டு; வாழ்வியல் நூல் என்றனர். அது பொது கருத்து, எல்லோரும் ஏற்றுக் கொண்ட கருத்து.

அந்த வாழ்வியல் நூலை மத இயல் மூலமாக விளக்கினர் சிலர்.

அந்த வாழ்வியல் நூலைப் பொருள் இயல் மூலமாக புரட்டிப் பார்த்தனர். அந்த வாழ்வியல் நூலை அரசியல் மூலமாக அலசிப் பார்த்தனர்.

காண்பவர் கருத்துக் கேற்ப காட்சிகள் புலப்படும் என்பது போல, மதவாதிகள். பொருள்வாதிகள், அரசியல்வாதிகள் எழுதினார்கள்.

உடல்தான் உலக வாழக்கைக்கு அடிப்படை ஆதாரம். உலக வாழ்வே உடலால் தான் சிறக்கிறது. செழிக்கிறது என்ற கொள்கையுடம் நான் குறட்பாக்களைப் பார்க்கிறேன்.

உண்மை நிலை இதுதான். உறுத்தக்கூடிய விஷயமல்ல இது. ஒப்புரவறிதல் என்ற அதிகாரத்தில் நான்காவது பாடல்.

அதற்கான உரைகள்.

உயிரோடு கூடி வாழ்வானாவான், உலகநடையினை

அறிந்து செய்வான். அஃதறிந்து செய்யாதவன் உயிருடையனேயாயினும், செத்தாருள் ஒருவனாகக் கருதப்படும். **பரிமேலழகர்.**

பரிமேலழகரைப் பின்பற்றி அப்படியே எழுதுகிறார், திருக்குறள் வீ. முனுசாமி.

உயிரோடு கூடி வாழ்பவன் என்பவன் உலக நடையினை அறிந்து வாழ்பவனாவான். அவ்வாறு அறிந்து வாழாதவன், செத்தவர்களுள் ஒருவனாகக் கருதப்படுவான்.

ஒப்புரவு உடையவன் உயிர் வாழ்பவனாகவும் அஃதில்லாதவன் உயிருடன் இருந்தும் இறந்தவன் ஒருவனாகவும் எப்போதும் கருதப்படுவான். நாவலர் நெடுஞ்செழியன்.

பொது நலன் கருதி வாழ்பவனே உயிர் வாழ்பவன். அவனல்லாத பிறன் இறந்தவருள் ஒருவானாகக் கருதப்படுவன்.

**மதுரை இளங்குமரனார்.**

உரைகள் பலற்றைப் படித்தீர்கள். இதற்குமேல் உரை எழுத என்ன இருக்கிறது? என்று நீங்கள் கேட்கிறீர்கள். உண்மைதான்.

ஒப்புரவு என்றால் உலக நடை, வேதநடைபோல அறநூல்கள்கூறியவற்றிற்கும் மேலாக, தாமே அறிந்து செய்யும் தன்மை என்று பரிமேலழகர் விளக்கம் கூறுகிறார்.

உலக நடை என்பது, உலக மக்களது பழக்க வழக்கங்கள். வேதநடை என்பது மதக் கோட்பாடு சார்ந்த வாழ்க்கை முறை. அறநூல்கள் என்பது நல்ல நெறி காட்டும் பண்பு முறை. அதற்கும் மேலே தாமாக அறிந்து செய்யும் தன்மை, தகைமை தான் ஒப்புரவு என்கிறார் பரிமேலழகர்.

அப்படி என்றால் ஒப்புரவு என்றால் என்ன பொருள்?

ஒப்பு என்றால், அழகு, இசைவு, உடன்பாடு, சம்மதம் பொருந்துதல் என்று பல அர்த்தங்கள்.

உரவு என்றால், அறிவு, வலிமை, மனோபலம், மிகுதி என்று பல பொருள்கள்.

ஆக, ஒப்புரவு என்றால், அழகும் அறிவும் வலிமையும் மனோபலமும் மிகுதியும் பெறத் தனக்குள் சம்மதித்து உடன்பாடு கொண்டு வாழ்வது என்று பொருள் கொள்ளலாம் அல்லவா?

இப்படி ஒரு உறுதி நிலைக்கு வரவேண்டுமென்றால் எதுகுறித்து எதைப் பற்றி என்று முடிவு செய்ய வேண்டாமா?

அதைத்தான் இந்தக் குறளில் வள்ளுவர் துல்லியமாகக் குறித்துக் காட்டுகிறார்.

ஒத்தது அறிவான் என்கிறார் வள்ளுவர்.

ஒத்தது என்பதற்கு, கல்வி கேள்வியில் தெளிந்தவற்றில் மனம் ஊன்றி நிற்பது என்று அர்த்தம்.

ஒத்ததை அறிவான் உயிர் வாழ்வான் என்கிறார் வள்ளுவர். அப்படி என்றால் ஒத்தது எது?

உயிர் வாழ்வான் என்றால் சுவாசம் இழுத்து வெளியே விட்டுக் கொண்டு வாழ்பவன் என்று அர்த்தமல்ல. உலகிலே நடமாடுபவன் என்றும் அர்த்தமல்ல.

உயிர் என்றால் உயிர்ப்பு எனலாம். ஒவ்வொரு முறை உயிப்ப்பினை (Inspiration)க் கொள்கிறபோது, சோர்வு நீங்கிப் புதுப் பலம் அடைவதற்குப் பெயர்தான் உயிர்ப்பு.

உயிர்ப்புடன் வாழ்வது என்பது உவப்புடன் வாழ்வது. உற்சாகத்துடன் வாழ்வது .உயிர்ச் சக்தியின் மிகுதியால் மேன்மை பெற்று விளங்குவது.

இப்படி உயிர்ப்பு அதிகம் பெற்று வாழ்வதற்கு உதவுவது உடல்தானே!

இந்த உடலுக்கு, உடல் பலத்திற்கு, உடல் நலத்திற்கு, உடல்வளத்திற்கு ஒத்தது எது என்று கேள்விகளைக் கேட்டுக் கொண்டு, அவற்றிற்குப் பதிலை அறிந்து கொண்டு உடலைக் காத்து வாழ்கிறவன்தான் உயிர்ப்புடன் வாழ்கிறான்.

அப்படி ஒரு உன்னதமான வாழ்க்கை நடத்துகிறவனே உலகத்தை இரசிப்பான்.. உலக மக்களை மதிப்பான். ஒழுக்கத்தைப் புகழ்வான், பிறருக்கும் உதவுவான். பெருமையான காரியங்களைப் புரிவான்.

உடலுக்கு ஒத்தது எது என்றால், இயற்கைதான். இயற்கை வாழ்க்கைதான்.

நம் உடலில் மூன்று முக்கிய மூலப் பொருள்கள் உண்டு. நீர், தீ, காற்று என்பவை. அவைகள் மிகுதியாகப் போனாலும் குறைவாகப் போனாலும் வியாதிகள் வந்து வீழ்த்தத்தொடங்கி விடும்.

இதைத்தான் பித்தம், வாதம், சிலேத்துமம் என்றார்கள்.

சூரியன், காற்று, தண்ணீர், நிலம், வானம் இவையெல்லாம் தனது உடலுக்கு எப்படி உதவும், எப்படி எப்படி உயிர்ப்பு தரும்? துளைத்து விடும் என்று அறிந்து கொண்டு அதற்கு ஒத்தது போல் வாழ்கிறவன்தான் உயிர் வாழ்கிறான். உன்னதமாக உலா வருகிறான்.

இப்படி இயற்கைக்கு மாறாக, உடலைச் சிதைக்கின்ற காரியங்களைச் செய்பவர்கள், நோயால் நொறுக்கப்படுகிறார்கள்.

இயற்கைக்குப் புறம்பாக ஒத்துப் போகாது. வாழ்கிறபோது, வெப்பம் மிகுதியாகிறது. காய்ச்சல், வெப்பம் குறைகிறபோது ஜன்னி. காற்று குறைகிறபோது தளர்ச்சி. காற்று தடை படுகிறபோது ஆஸ்த்மா. அதிகக் காற்று வாதம்.

இப்படி ஒத்துக் கொள்ளப்படாத ஒழுக்க வழக்கங்கள் யாவும் உடல் சத்தியினைக் குறைத்து விடுகின்றன. உடல் சத்துக் குறைகிறபோது தான் செத்துப் போகிற உடல் நிலை மனோநிலை உண்டாகின்றது.

நோய்ப்பட்டு படுக்கையில் படுத்துவிட்டால், அவர்கள் செத்தவர்கள் போல்தானே கிடத்தப்படுகிறார்கள்.

அதனால்தான் அவர்களைச் செத்தாருள் வைக்கப்படும் என்றார். செத்தவர்கள் உயிர்ப்புச் சக்தி பெற முனைகின்றார்கள்.

ஆகவேதான் நோயில்லாமல் வாழ்வதுதான் சிறப்புடைமை என்று சொல்லாமல் சொல்லலாம்.

நல்ல தேகம் உள்ளவன்தான் நான்கு பேர்களுடன் சமரசமாக, சமாதானமாக இருக்க முடியும். ஒத்துப் போய் உறவாட முடியும். அன்புகாட்டி ஆறுதலாக வாழ்விக்க முடியும்.

நோயாளி ஒருவன் தானும் புலம்புவான். அடுத்தவரையும் ஆட்டுவிப்பான். அலைக்கழிப்பான். துயரப்படுத்துவான். தூற்றித் தொலைப்பான். கஷ்டங்களைக் கொடுப்பான்.

தன் துன்பத்தை மற்றவர்கள் மேல் சுமத்த முயல்வான். பிறர் சந்தோஷத்தை அவர்களால் ஒத்துக் கொள்ள முடியாததே காரணம்.

ஆகவேதான், சத்துக் குறைந்து போய், செத்தவர்களாகத் திரிவார்கள். இயற்கையைப் புரிந்து கொள்ளுங்கள். தேகத்திற்கு ஒத்ததை எல்லாம் தெரிந்து கொண்டு தீர்மானமான திட நெஞ்சத்துடன் தினம் நடவுங்கள். ஒத்தது அறிந்தால் உயிர்ப்புநிறையும். உயிர்ப்பு உரமான உடலைத் தரும். உடல் வாழ்வாங்கு வாழவைக்கும்.

அதனால்தான் சித்தம் போல் அலைந்து செத்துத் திரியாதே என்று பெரியவர்கள் போதிக்கின்றார்கள்.

நமக்கு ஒத்தது எது? உணவுப் பழக்கம், உடை பழக்கம், உழைப்புப் பழக்கம். உடலுறவுப் பழக்கம், உறங்கும் பழக்கம் இவையெல்லாம் உடலுக்கு எந்த அளவுக்கு ஒத்தது என்று அறிந்து கொண்டால், வாழ்கிற காலம்வரை வளம்தானே சேரும்.

அப்படிப்பட்ட வாழ்வுக்கு அன்பாக அழைத்து, அறிவுறுத்தும் அருமையான குறள் அல்லவா இது!

ஒத்ததுடன் உயர் வாழ்வு வாழுங்கள்.

# 10. அடக்கமும் அடங்காமையும்

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும். (121)

இங்கே இடம் பெற்றிருக்கிற குறள் **அடக்கம் உடைமை** என்னும் 13 வது அதிகாரத்தில் வந்திருக்கும் வரம்பெற்ற குறள்.

இந்தக் குறளுக்கு ஆன்றோர் பலரில் ஒருசிலர் எழுதிய உரையினை முதலில் பார்ப்போம்.

ஒருவனை அடக்கமாகிய அறம், பின் தேவருலகத்து உய்க்கும். அடங்காமையாகிய பாவம் தங்குதற்கரிய இருளின்கண் செலுத்தும். (பரிமேலழகர்)

அடக்கமாகிய அறம் ஒருவனை அமரர்கள் உலகில் செலுத்துவதாகும். அடக்கமில்லாத தீய குணம் பெறுதற்கரிய இருளான துன்ப உலகில் கொண்டு தள்ளி விடும். (திருக்குறள் வி. முனுசாமி)

அடக்கமானது ஒருவன் விரும்புகின்ற அருளை அவனுக்குக் கொடுக்க வல்லது. அடக்கமின்மையாவது நிறைந்த துன்பத்தைக் கொடுத்துவிடும். (நாவலர் நெடுஞ்செழியன்)

அடக்கம் என்னும் உயர்தன்மை ஒருவரை அழியாப் புகழ் நிலையுள் சேர்க்கும். அடங்காமை என்னும் இழிதன்மை நீங்காப் பழி என்னும் இருளிடத்தில் தள்ளிவிடும்.

(மதுரை இளங்குமரனார்)

இந்தக் குறளுக்குரிய பொருளை அவரவர் மனநிலைக்கேற்ப விளக்கியுள்ளார்கள். உங்கள் மனத்தில் என்ன நினைவோட்டம் எழுகிறது என்று ஓடவிடுங்கள்.

அதன் பிறகு மீண்டும் தொடருங்கள்.

இந்தக் குறளில் உள்ள ஏழு சொற்கள் எவ்வளவு ஆழமான அர்த்தங்களை அடக்கிக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்கின்றன

என்று விரிவாக அறிகிற போது, வள்ளுவரின் வார்த்தைச் சித்து வேலைகளைப் புரிந்து கொண்டு வானளாவிய இன்பத்தை அல்லவா பருகி மகிழ முடிகிறது!

1. அடக்கம் 2. அமரருள் 3. உய்க்கும் 4. அடங்காமை 5. ஆரிருள் 6. உய்த்து 7. விடும்.

இனி ஒவ்வொன்றுக்குமான பொருளைக் கூறி விடுகிறேன். பிறகு பொருத்திப் பார்க்கலாம்.

**1. அடக்கம்:** அடங்கிய காரியம்; கீழ்ப்படிதல்; மன அமைதி; பணி ஒழுக்கம்; இச்சையடக்கம்.

**2. அமரருள்:** என்னும் சொல்லை, நான் இரண்டு சொற்களாகப் பிரித்துப் பார்க்கிறேன்.

ஒன்று அமரர்+உள்=அமரருள்

இன்னொன்று அமர்+அருள்=அமரருள்

அமரருள் என்றதுமே, தேவருலகம், மேலுலகம், தெய்வங்கள் வாழுகின்ற திருத்தலம் என்றெல்லாம் உரை எழுதினார்கள், அதையே உலகநீதி. உலக வழக்கு என்று சமாதானமாகச் சொன்னார்கள்.

அமரர் என்றதும், தேவர் என்றும், பகைவர் என்றும், பொருள் உண்டு. மக்கள் மனத்திலே நீக்கமற நிறைந்து அமர்ந்திருப்பவர் பிடித்து அமர்ந்திருக்கின்ற புகழ் பெற்ற மனிதர்களையே அமரர் என்று பெருமையாகப் பேசுவார்கள்.

அப்படிப்பட்ட அமரர்கள் நடுவிலே அடக்கமானவர் அமர்ந்து கொள்ளும் அரிய பேற்றினைப் பெறுவார் என்பது ஒரு அர்த்தம்.

அமரர் என்றால் தேவர் என்பார்கள்.

தேவர் என்பதற்குத் தெய்வம் என்று தான் அர்த்தம் என்பதாக அதையே வலியுறுத்தி விளக்குவோர் அதிகம்.

தேவர் என்றால் சான்றோர், அரசர், துறவியர், புலவர் என்று அர்த்தம்.

இன்னும் வாயு, சூரியன், வருணன், யமன், அக்கினி

போன்ற ஐம்பூதங்களுக்கு அதிபதிகளாகிய தேவர்களையும் இந்தச் சொல் மேலும் விளக்கிச் செல்கிறது.

அமரர்களாக வாழ்கின்ற சான்றோர்கள், மக்களை ஆண்டு அரவணைத்துக் காக்கின்ற அரசர்கள், அறம் காக்கும் துறவியர்கள், புலமைத்திறம் வாய்ந்த புலவர்கள் மத்தியிலே வீற்றிருக்கின்ற பெருமையை அளிக்கும்.

அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும் என்பது புறநானூற்றுப் பாடல் வரிகள்.

அறிவு என்பது, உள்ளும் புறமும் தெளிவாகத் தெரிந்து கொள்ளும் தன்மை. அந்தத் தன்மை அடக்கத்தின் மூலமாக வளரும். அருவியாக விழும். ஆற்றல் மிகு சக்தியாக எழும்.

இங்கே தேவர் என்றதும் , வாயு வருகிறது. தீ எரிகிறது. மழை பொழிகிறது. ஆமாம், அர்த்தம் கொடுத்துத்தான்.

ஒருவர் உடலின் உள்ளிருந்து கொண்டு ஆட்சி செய்வது காற்று, வெப்பம், நீர்

இந்த மூன்றும் கட்டுக்குள் அடங்கியிருந்தால் உடல் கட்டாக இருக்கும்.

கற்கண்டாக இனிக்கும். காட்சியில் தெளிவும் பொலிவும் கொண்டு விளங்கும்.

இந்த மூன்றும் அடக்கப்படாவிட்டால் உடலுக்குக் காய்ச்சல், குளிர்ந்தால் ஜன்னி, வாயு மிகுந்தால் வாய்வு, குறைந்தால் வாட்டம், தொடரும் வியாதிகள். தொந்தரவுகள் படையாகத் துரத்தும்.

இதனால்தான் அடக்கம் என்றார்.

இயற்கைக்குக் கீழ்ப்படிந்து, அடங்கிய காரியங்களை ஆற்றுதல். அப்படிப்பட்ட பணிகளில் பண்பான ஒழுக்கம் பசியெடுத்துத்திரிகின்ற புலன்களின் இச்சையடக்கம்.

இப்படி வாழ்கின்ற அடக்கம்தான் பெரியவர்கள் மத்தியிலே மேடையிட்டு அமரச்செய்யும் மேன்மையை அளிக்கிறது.

இன்னொரு அர்த்தமும் இதில் அடங்கியிருக்கிறதே!

அமர்+அருள்=அமரருள்

அமர் என்றால் பகைவர் என்று அர்த்தம்.

பகைவரின் கருணைகூட அடக்கமுள்ளவர்க்குக் கிடைக்கும். அடக்கம் உள்ளவர்களுக்குப் பகைவர்களே கிடையாது. அப்படி இருந்தாலும் அவர்கள் வெறுப்புக் கொள்ளமாட்டார்கள். மாறாக அருள் பாலிப்பார்கள். அன்பு காட்டுவார்கள்.

அப்படிப்பட்ட பகைமை இல்லாத வாழ்வும் பெரியோர்கள் போற்றுகின்ற சூழலும் ஒருவர்க்கு இந்த உலகமே இன்ப வீடாக அல்லவா அமைந்து விடுகிறது.

கண்ணுக்குத் தெரிகின்ற காட்சியாக விளங்குகின்ற இந்தப் பூமி தானே இன்ப உலகம். தெய்வ உலகம். தேமதுரம் வழங்குகின்ற தெய்வீக உலகம்.

**அடங்காமை** என்ற சொல்லுக்குக் கீழ்ப்படியாமை என்பது பொருள் . மனம் வாக்குக் காயங்களில் அடங்காத தன்மை; தீய நெறிகளில் திரிகின்ற தன்மை என்றும் அர்த்தம்.

அடுத்த சொல் ஆரிருள்:

**ஆரிருள்** என்றால் நரகம் என்பது திறன் முடிந்த முடிபாக இருக்கிறது. கற்பனையான துன்ப நிலத்தைக் கருத்துக்களில் நம்மவர்கள் அழமாக பதித்துக் கொண்டார்கள். அந்தக் கருத்தை அழிப்பது என்பது அவ்வளவு சுலபமல்ல.

வள்ளுவர் குறிப்பிடும் ஆரிருள் என்பது-

ஆர்+இருள் பிரிகிறது.

ஆர் என்றால் பூமி என்றும் நிரப்பு என்றும் மேன்மேலும் பல பொருட்கள் உண்டு.

இருள் என்றால் இருட்டு, மயக்கம், உன்மத்தம், துன்பம், அஞ்ஞானம், அறியாமை, ஒளிமங்கி, கருமை என்றெல்லாம் அர்த்தங்கள் உண்டு.

இயற்கையாக வாழும் முறைகளுக்குக் கட்டுப்படாமல் நீதிநெறி வழிகளுக்கு அடங்காமல் மனம் போன போக்கில் வாழ்கின்ற அடங்காமையானது பூமியில் வாழ்கின்ற காலத்தே அறியாமையை நிரப்பி அஞ்ஞானத்தை விளைத்து, மன மயக்கத்தை ஏற்படுத்தி ஒளியற்ற இருட்டு வழியில் செலுத்திவிடும்.

**விடும்** என்றால் சொல் விடுதல் என்ற பொருளில் வருகிறது. விடும் என்பது விட்டுவிடும். அதாவது மீண்டும் திரும்பி வரக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தி ஓட்டிவிடும். ஒதுக்கி விடும். விரட்டி விடும். வீழ்த்தி விடும்.

அப்படிப்பட்ட சூழ்நிலை இருள் வாழ்வு எப்படி ஏற்படும்?

உண்மைதானே. உடல் நலம் பெற, வளம் பெற பலம் பெற ஒழுக்கமான கட்டுப்பாடான வாழ்க்கை முறை கட்டாயம் தேவை. ஒழுக்கம் தவறினால் உடலுக்கு அழுக்கு நிறைகிறது. அதனால் இழுக்கு ஏற்படுகிறது. இழுக்கு வழுக்கல் பாறையைப் போல சறுக்கி விடுகிறது. அதனால் நோய்கள் கூட்டம், நொடிப் பொழுதில் பிடித்து குதிரையேறிக் கொள்கிறது. கொல்கிறது.

வாழ்க்கையில் நோய் வரலாம். துன்பம் வரலாம். நிம்மதி குறையலாம்.

அது இயற்கை. மனித வாழ்வின் மாறாத இயற்கைதான்.

ஆனால், வாழ்க்கையே நோய்க்கு ஆளானால் துன்பத்தின் தோணியாகி விட்டால் கஷ்டங்களின் கேணியாகிவிட்டால் எப்படி ஒளி ஏற்படும்?

இருள் தானே மிஞ்சி நிற்கும்!

அப்படிப்பட்ட இருள் அவர்கள் பூமியில் வாழ்கிற நாள்வரை புற்றீசல் போல் புறப்பட்டு பறந்து கொண்டுதான் இருக்கும்.

ஒருமுறை நோயால் உடல் நொந்து போனால் நலிந்து

போனால் மீண்டும் பழைய புத்துணர்ச்சியைப் பெற முடியாது.

மருந்தும் வைத்தியமும் தற்கால நிவாரணம்தான். பாதுகாப்பற்ற பராமரிப்புதான். அப்படி அடங்காத்தனத்தால் ஆயிரம் நோயகள் கும்மாளமிடும் அடங்காத உடல் மாறக்கூடாது என்பதால்தான் அடக்கம் (அதாவது புலன டக்கம், இச்சையடக்கம்) அவசியம். அதன் பயன் அருமையும் பெருமையும் நிறைந்த வாழ்வுதர அடங்காத செயல்கள், உடலைக் கெடுத்து, மனத்தைக் கெடுத்து, வாழ்வை இருளாக்கி ஈனப்படுத்தி விடுகிறது.

அப்படி எண்ணுகிறபோது வள்ளுவரின் வாக்கு வான்மழை போல மனத்தை மகிழ்விக்கிறது. குளிர்விக்கிறது. குதூகலப்படுத்துகிறது.

அடக்கம் என்பது இயல்பான, இடறிவிடாத வாழ்க்கை தானே! எளிதானதுதானே! இனிதாக வாழ முடியுமல்லவா? முயல்வோம்.

# 15. மண்கலமும் நன்கலமும்

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு. (60)

வாழ்க்கைத் துணைநலம் என்னும் அதிகாரத்தில் வருகிற பத்தாவது குறள் இது.

இங்கே வருகிற பொருள் சிக்கல், மங்கலம் என்பதற்கும், நன்கலம் என்பதற்கும் ஒத்து வராமைதான் என்றார் அவர்.

இருந்தாலும், அறிவுடை பெரியோர்கள் ஆக்கி வைத்துவிட்டுப் போன, அரும் பொருளுரைகளை முதலில் காண்போம், என்று தேடிப் படித்தேன்.

மனையாளது நற்குண நற்செய்கைகளை ஒருவற்கு நன்மையென்று சொல்லுவர். நல்ல புதல்வரைப் பெறுதல், அவை தனக்கு நல்ல அணிகலம் என்று சொல்லுவர் அறிந்தோர் என்கிறார் பரிமேலழகர்.

மனைவியினுடைய நற்குண நற்செய்கைகளை இல்லறத்திற்கு மங்கலம் என்று கூறுவர். அந்த மங்கலத்திற்கு நன் மக்கள் பெறுதலை அணிகலம் என்று கூறுவர் என்று விளக்குகிறார் வீ.முனுசாமி.

இல்வாழ்க்கைக்கு மங்கலம் மனைவியின் நல்லொழுக்கமேயாகும் என்று பெரியோர் கூறுவர். அதற்கு நல்ல அணிகலன் நல்ல மக்களைப் பெறுதலேயாகும் என்று கூறுவர் என்கிறார் நாவலர் நெடுஞ்செழியன்.

மனையாளின் பெருமையே ஒருவன் வாழ்வில் எந்நாளும் திருமணவிழாப் போன்றதுஎன்பர். அவ் வாழ்வில் பெறும் நல்ல மக்கட்பேறு நல்ல அணிகலம் போன்றது என்பர் என்று மதுரை இளங்குமரனார் கூறுகின்றார்.

இந்தக் குறள் வாழ்க்கைத் துணைநலம் என்ற அதிகாரத்தில் வருகிறது என்று கூறினோம்.

வாழ்க்கைத்துணைநலம் என்று கூறியவுடன், மனைவி, இல்லாள், துணைவி, குடும்பத் தலைவி என்று உடனே பொருள் கூறி உண்மை நிலையை சற்றே மாற்றி மறைத்து விட்டனர்.

வாழ்க்கைத்துணை என்றால் மனைவிதான் துணையா? கணவன் துணையாக மாட்டாரா? கற்பு என்று சொன்னால் தலைவிக்கு மட்டும்தான் கற்பா? தலைவனுக்கு வேண்டாமா? துணைஎன்ற சொல்லுக்கு மனைவி என்பது, பல அர்த்தங்களில் ஒன்று. கணவன் என்றும் ஓர் அர்த்தம் உண்டு.

அதற்கும் மேலாக உதவி, ஆதரவு இணை, ஒப்பு இரட்டை என்று பல அர்த்தங்கள் உண்டு. வாழ்க்கைக்கு உதவியாக, ஆதரவாக, இணையாக, ஒப்பாக, மனைவி மட்டுமா இருக்க வேண்டும்? கணவனுக்குப் பொறுப்பே கிடையாதா?

இப்படி பொறுப்பே இல்லையென்று பேசி விடுவார்கள் என்று எண்ணித்தான், வள்ளுவரும் மிக எச்சரிக்கையாக மனைமாட்சி என்ற ஒரு சொல்லை பக்குவமாகப் பெய்துவிட்டார்.

மனை என்றால் மனைவி என்றும். மாட்சி என்றால் பெருமை என்றும் உரை கூறி விடுவார்கள் என்றும் அவருக்குத் தெரிந்திருக்கும் போலும். உரையும் அப்படித்தான் அமைந்து விட்டது.

உரிய பொருளை உண்மை நிலையை அப்புறமாகப் பார்ப்போம்.

**மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்**
**நன்கலம் நன்மக்கள் பேறு**

என்ற ஏழு சொற்களில் மங்கலம் என்ற சொல் இங்கே ஏன் வந்தது என்பதுதான் பலருக்குப் புரியாத புதிராக இருந்தது. இருக்கிறது. புதிருக்குப் பதிலாக இருந்தது. இருக்கிறது.

புதிருக்குப் பதிலாகப் பலர் மங்கலம் என்ற சொல்லுக்குரிய அர்த்தத்தை, திருமணம் என்றனர். பொலிவு என்றனர். தர்மம் என்றனர்.

மண்கலம் என்ற சொல்தான் மங்கலம் என்று மாற்றி எழுதப்பட்டிருக்கிறதோ என்றுகூட எண்ண இடமுண்டு.

என்றாலும், மங்கலம் என்ற சொல்லுக்கு நீர்க்குடம் என்ற ஓர் அர்த்தம் இருப்பதை இங்கே நாம் நினைவு கூர்வோம்.

அந்தக் காலத்தில் வீட்டில் சமையலுக்குப் புழங்கப்பட்ட பாத்திரங்கள் மண்கலங்கள்தாம் என்பது கால வரலாறு கூறும் கலப்படமற்ற உண்மையாகும்.

என்ப என்றால் என்பர், 'என்று சொல்வர்' என்று அர்த்தம். முதலில் மங்கலம் என்ற நீர்க்குடம் பற்றிப் பார்ப்போம்.

நீர்க்குடம் என்கிற பண்புகளின் நிறைகுடமாக இருப்பது குடும்ப வாழ்க்கை. மனை மாட்சி என்கிற நற்குண நற்செய்கைகள் நிறைந்ததாக விளங்குதிறது. அதாவது இல்வாழ்க்கையின் இலட்சணமாக இலங்குகிறது.

மனை என்றால் மனைவி என்பர். இங்கே கணவன் மனைவி இரண்டுபேரும் கலந்து, இணையாக வாழ்கிற வீடு என்று நாம் பொருள் கூறுகிறோம்.

கணவனும் மனைவியும் அதாவது தலைவியும் தலைவனும் சேர்ந்து வீட்டிற்கு சேர்க்கிற அழகு, பெருமை, அமைதி, செழுமை, நிறை மாண்பு எல்லாவற்றிற்கும் மொத்தமான ஒரு பெயர்தான் மாட்சி என்பதாகும்.

முகத்திற்கு இரு கண்கள் மாட்சிபோல வீட்டிற்கு கணவன் மனைவி இருவரும் மாட்சியாகின்றனர்.

இப்படிப்பட்ட மாட்சிமையான நிறைகுடமான நீர்க்குடத்தை மிகவும் எச்சரிக்கையாக கையாள வேண்டும். பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும். இல்லையேல் என்ன ஆகும்?

குடம் உடைந்து நீர் ஓடும். நல்ல குலப்பெயர், குடும்பப் பெயர் நாசமாகும். நீரால் தூய்மை. நீரால் பெறும் பல பயன்கள் எல்லாம் நிலைகுலைந்து போகும் என்பது பொதுவிதிதானே! குடும்ப கௌரவமும் குடத்திற்கு ஒப்பானதுதானே!

இப்போது மண்கலம் என்ற சொல்லை பார்ப்போம். மண்கலம் என்ற சொல்லை மாணவர்களும் மக்களும் எடுத்தாள்கிறபோது, எடுத்தெழுதுகிறபோது, மங்கலமாற்று என்று கூறுவாரும் உண்டு.

மண்கலம் என்பது, உணவு சமைக்க உணவு உண்ணும் பாத்திரமாக அமைந்திருப்பது இன்றும் இருந்து வருவதுதான்.

இதில் உள்ள எதார்த்தமான ஒரு உண்மை என்னவென்றால், மண்குடத்தை மிகவும் எச்சரிக்கையாகப் பயன்படுத்த வேண்டும்.

கொஞ்சம் கை தவறினாலும், மண்கலம் உடைந்துவிடும். உடைந்தது ஒட்டாது. வாழ்வுக்கும் கிட்டாது.

அதுபோலத்தான் மனையின் மாட்சி என்கிற மண்கலமும் போற்றிப் பாதுகாக்கும்வரை, சிறப்பாகப் பயன்படும். புகழ்தரும் மனைமாட்சி பயன்படுகிற மண்கலம் போல, கொஞ்சம் கை தவறிவிட்டாலும் சமுதாயத்தின் முன்னே கௌரவத்தில் சுக்கு நூறாகி விடும்.

உடைந்த மண்கலம் ஒன்று சேராது. அதுபோல இழிந்து போன மனைமாட்சியும் ஒன்றாகாது. நன்றாகாது. உருவாகாது.

மனைமாட்சி என்ற மண்கலத்தை உருவாக்குகின்றவர்கள் அந்த வீட்டு ஆணும் பெண்ணும்தான். கணவனும் மனைவியும் என்கிற தலைவனும் தலைவியும்தான்.

மண்கலம் போல குடும்பம் அமைகிறபோது அதன் நன்கலம் போல நன்மக்கள் பேறு அமைகிறது என்கிறார் வள்ளுவர்.

மண்பாண்டங்களைச் செய்கிற குயவன் ஒருவனைப் பார்த்து எப்படி நீங்கள் இப்படி விதவிதான பல்வேறு அமைப்புள்ள கலங்களை வனைகின்றீர்கள் என்று கேட்ட போது அவர் அளித்த பதில் வியப்புக்குரிய விந்தையாக அமைந்திருந்தது.

பாண்டங்களைச் செய்கின்ற நேரத்தில் அந்தச் சமயத்தில் உண்டாகும் மனநிலை எப்படி அமைகிறதோ அப்படித்தான் அமையும், மகிழச்சியாக இருந்தால் சிறப்பாகவும், துக்கமாக இருந்தால் ஒரு மாதிரியும் கோபத்தில் வெறுப்பில் எரிச்சலில் அமைகிற பாத்திரங்கள் கோணல்மாணல்களாகவும் கூட உருவாகும்.

இதுதான் பாத்திரம் வனைபவரின் பதில்.

அதே நிலைதான் குடும்பத்தில் ஈடுபட்டிருக்கிற கணவன் மனைவிக்கும் உள்ள சூழ்நிலை.

மாட்சியுடன் விளங்குகிற தாய்தந்தைக்குப் பிறக்கும் குழந்தைகள் நன்கலம் அமைவதுபோல, நன்மைகளாகப் பிறக்கும் பேறு பெறுகின்றனர்.

ஒழுக்கமற்ற தாய் தந்தையாக்குப் பிறக்கும் குழந்தைகள் ஊனமுற்றவர்களாகப் பிறப்பர்கள் என்கிற உணமையை இன்றைய உளநூல் அறிஞர்கள் உரைக்கிறார்கள்.

முந்தைய மகாபாரதமும் அப்படித்தான் போதிக்கிறது.

மாமியாரின் வேண்டுகோளுக்கிணங்கிக் குழந்தை வரம்தர வந்த முனிவரிடம் வெறுப்படைந்து கண்களை மூடிக்கொண்டு உறவு கொண்ட பெண் குருட்டுக் குழந்தையைப் பெற்றாள். அச்சப்பட்டு நாணி, மெலிந்த மனத்துடன் சோகைப்பட்டு உறவு கொண்டவள் பாண்டாக ஒரு குழந்தையைப் பெற்றாள். மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டவள் வீரனைப் பெற்றாள் என்பது கதை.

உடலுறவின் போது கால்களை இடக்கு மடக்காக வைத்திருக்கும் தம்பதியர்க்கு ஊனமுற்ற குழந்தைகள் உருவாகின்றன என்பதெல்லாம் ஒழுக்கத்தின் இழுக்கம் பற்றிய நிகழ்ச்சிகளாகும்.

நன்மக்கள் என்கிற நன்கலத்தை உருவாக்குகிறவர்களான தாய்தந்தையர் மனையில் மாட்சிகாக்க வேண்டும். அந்த மாட்சியை பொறுப்புணர்வுடன் புழங்கிக் கொள்ள வேண்டும்.

தவறிப்போனால் சமாளித்துக் கொள்ளலாம். மீண்டும் அதுபோல ஒரு பாத்திரத்தை உருவாக்கிக் கொள்ளலாம் என்று நினைக்கக் கூடாது. அப்படி நினைத்தாலும் முடியவே முடியாது என்பதை வலியுறுத்தத்தான் வள்ளுவர் மனையின் மாட்சியை ஒருமண் கலத்திற்கு ஒப்பிட்டார்.

நன்மக்களையும் நன்கலத்திற்கு ஏன் ஒப்பிட்டார் என்றால், குடும்ப கௌரவத்தைக் கொஞ்சமும் விட்டுக் கொடுக்காமல் காப்பாற்றுவது போலவே, குலக்கொழுந்துகளையும் கண்ணும் கருத்துமாய்ப் பொருத்தமாய்க் காத்து வர வேண்டும்.

மண்கலம் என்னதான் நன்கலமாய் இருந்தாலும் உடைந்தால் ஒட்டாது. என்னதான் கௌரவமான குடும்பத்தில் பிறந்த குழந்தைகளாக இருந்தாலும் கொஞ்சம் தவறிப் போனால் ஒழுக்கத்தில் தடுமாறிப் போனால் மீண்டும் சரியாக உருவாக சந்தர்ப்பமே வாய்க்காது.

அதனால்தான் பேறு என்று ஒரு சொல்லைப் போட்டார். பேறு என்றால் வாய்ப்பு என்பது பொருள். நன்கலம் ஒருமுறைதான் முழுமையுடன் இருக்கும். காக்கின்றவரைதான் உதவுகிற வாய்ப்புடன் இருக்கும்.

அதனால் ஆண்பெண் இருவரின் பொறுப்பை வலியுறுத்த வந்த வள்ளுவர் வாழ்க்கைத் துணைநலத்தை மண்கலத்திற்கும் வழிவழி வந்து வாழ்கிற குழந்தைச் செல்வங்களை நன்கலத்திற்கும் ஒப்பிட்டு உண்மையை விளக்கினார்.

வெற்றிகரமாக மட்டுமல்ல, ஒழுக்கமாகவும் வாழ்வதுதான் வாழ்க்கை என்பதை வள்ளுவர் எவ்வளவு அழகாக இந்தக் குறளில் பாடியிருக்கிறார் பார்த்தீர்களா?

# 16. எச்சமும் மிச்சமும்

நமது முன்னோர்கள் எதை எதையெல்லாம் கர்மம் என்று வெறுத்து ஒதுக்கினார்களோ, அதையெல்லாம் தர்மம் என்று ஆதரித்துப் பேசி ஆரவாரத்தோடு பின்பற்றுகிற இந்த அடாவடிக்காலத்தில், வள்ளுவர் கூறும் வார்த்தைகளை வாழ்க்கையாக்கிக் கொண்டால் என்ன ஆகும்.

இதற்குக் கற்பனையே தேவையில்லை. அந்த உண்மையைத் தான் இந்த ஊரும் உலகும் அறியுமே!

சாக்கடையில் பன்றி சுகிக்கிறது? சுடுமணலில் கழுதை புரள்கிறது. குட்டையில் எருமை கும்மாளமிடுகிறது. கண்டதையும் தின்கிறது காக்கை என்றால் சிங்கமும் அப்படிச் செய்யுமா!

செம்மாந்த சிந்தனையும் தூய்மையான வார்த்தைகளும், சுயநலமற்ற வாழ்க்கை முறைகளையும் பின்பற்றுபவர்கள், பின்பற்றி வாழப் பிரயத்தனப் படுபவர்கள் எல்லாம், கீழ்த்தனமானவர்களின் கீர்த்திமிக்க வாழ்க்கை முறையைக் கேவலமாகத்தானே நினைப்பார்கள்!

கிளுகிளுப்பூட்டும் அந்தச் செயல்களைச் செய்ய மனம் ஒப்பார்கள். நன்றாகச் சிந்தையை அடக்கும் மனிதர்களைத்தான் மக்கள் மதிப்பார்கள். அவர்கள் செயல்களால்தான். அவர்கள் தரம் பிரிக்கப்படுகின்றார்கள்.

இதைத்தான் வள்ளுவர் உள்ளத்தைத் தைப்பது போலப் பாடியிருக்கிறார்.

**தக்கார் தகவிலர் என்பது அவரவர்**
**எச்சத்தால் காணப் படும்** (114)

எல்லோருக்கும் எளிதில் அர்த்தம் புரியக்கூடிய குறள். ஆனால் அர்த்தமும் ஆழமும் நிறைந்ததாகத் தானே இருக்கிறது என்பதை அர்த்மாக்கியிருக்கிற குறள் இது.

உரையாசிரியர்களின் அர்த்தத்தை முதலில் படிப்போம்.

இவர் நடுவுநிலைமை உடையர், இவர் நடுவுநிலைமை இலர் எனும் விசேடம் அவரவருடைய நன்மக்களது உண்மையானும் இன்மையானும் காணப்படும் என்கிறார் பரிமேலழகர்

நடுவுநிலைமையுடன் இருப்பவர் நடுவுநிலைமை அற்றவர் என்னும் உண்மையினை அவரவர்களுக்கு உண்டாகும் அதாவது அவருக்குப் பின் எஞ்சி நிற்கும் நன்மை தீமைகளால் தெரிந்து கொள்ளப்படும் என்கிறார் வி.முனுசாமி.

ஒருவர் நடுவுநிலைமை உடையவர் என்பதும். நடுவுநிலைமை இல்லாதவர் என்பதும் முறையே அவருக்குப் பின் எஞ்சி நிற்கும் புகழாலும் பழியாலும் கண்டறியக் கூடும்,-நாவலர் நெடுஞ்செழியன்.

இவர் நடுவுநிலமையாளர், இவர் நடுவுநிலைமை அற்றவர் என்பது ஒவ்வொருவரும் இவ்வுவகில் வாழ்ந்தபோது வைத்துச் சென்ற (மக்கள், புகழ், பழிபொருள்) வற்றால் தெரியவரும். மதுரை இளங்குமரனார்.

மேலே கூறப்பட்ட உரைகளில் நடுவுநிலமையாளர் - அது அற்றவர் என்ற இரு சொற்களுக்கும் எந்தவித மாற்றமுமின்றி உரை வந்திருக்கிறது.

எச்சம் என்ற சொல் வரும்போதுதான் மாற்றங்கள் தலை தூக்கியிருக்கின்றன.

இந்தக் குறள் நடுவுநிலைமை என்னும் அதிகாரத்தில் வருகிறது.

பகை, நொதுமல், நண்பென்னும் மூன்று பகுதியிலும், அறத்தின் வழுவாது ஒப்பநிற்கும் நிலைமை என்று இதற்கு அர்த்தம் கூறியிருக்கிறார் பரிமேலழகர்.

பகைவரிடத்தும் , பற்றற்றவரிடத்தும், பாசமுள்ள வரிடத்தும், நீதிநெறி தவறாது நிற்பதே நடுவுநிலைமை ஆகிறது.

இங்கே நாம் கொள்வது - இந்த மூவகையினரிடத்தும், வழுவாது நடந்து கொள்ள வேண்டும் என்று கூறுவதை விட அவர்கள் மனத்திலே தங்களது உயர்ந்த செயல்களால் நட்டு விடுவது. அதாவது குடியேறிவிடுவது. நடுதல் என்றால் ஊன்றுதல் பயிரிடுதல் என்பது போல, தனது பண்பாற்றலால் நெஞ்சில் அமர்ந்து கொள்ளுதல் ஆகிறது என்றால், இன்னும் கொஞ்சம் ஆழமாகச் சிந்திக்கிறோம் என்று அமைகிறதல்லவா?

அப்படிப்பட்ட அன்பான எண்ணம் ஏற்படுகிறபோதே, ஒருவரின் வாழ்வு முறையில் ஒப்பற்ற அறமும் திறமும் ஒன்றித்து விடுகின்றன.

தக்கார் என்ற சொல்லுக்கு அறிஞர், மேன்மக்கள், பெருமையிற் சிறந்தார் என்று பல அர்த்தங்கள் உண்டு.

தகவு என்றால் அறிவு, ஒழுக்கம், தகுதி, நன்மை, நீதி, பெருமை வலிமை, நல்லொழுக்கம், கற்புநிலை, நடுவுநிலை என்னும் பல அர்த்தங்கள் உண்டு.

ஒருவர் அறிஞர்தான், மேன்மக்களில் ஒருவர்தான், பெருமையிற் சிறந்தவர்தான் என்று எப்போது அறிய முடியும்?

அதைத்தான் வள்ளுவர் கூறுகிறார்: அவரவர் எச்சத்தால் காணப்படும் என்று.

எச்சம் என்றால், எஞ்சி நிற்பது, அவரது மக்கள் என்றுதான் பொருள் கொண்டிருக்கின்றனர்.

எச்சம் என்பதற்கு உண்மை, குறை, காரியம், சந்ததி, ஈவு என்னும் பல அர்த்தங்கள் உண்டு.

ஒருவர் தக்கவர், தகவுள்ளவர், தகவிலார் என்று எப்போது கூறமுடியும்?

அவரவரது நன்மக்களது உண்மையானும் இன்மையானும் என்றால், குழந்தைகளைக் கொண்டு பெற்றோர்களைப் போற்ற முடியுமா?

உதாரணத்திற்கு ஒன்று மகாத்மா என்று போற்றப்பட்டவரின் மக்கள் அவ்வரைப் போல் வாழ வில்லையே!

மோசமான மனிதர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் எல்லாம் முதல்தரமானவர்களாக உயர்ந்திருக்கிறார்களே! வாழ்ந்திருக்கிறார்களே!

''ஆனதற்கு ஒரு ஆகாதது, ஆகாததற்கு ஒரு ஆனது'' என்று ஒரு பழமொழி உண்டு.

ஆனதற்கு என்றால் அறிவால், பொருளால், பண்பால், உயர்வானவர். அவருக்கு எதற்கும் ஆகாத ஒழுங்கற்ற பிள்ளைகளும், ஒழுங்கற்றவர்களுக்கு ஒழுக்கமும் உயர்ந்த பண்புகளும் உள்ளதான பிள்ளைகளும் பிறப்பர் என்பது நம்மவர்கள் நம்பிக்கை.

ஆகவே, ஒருவரை மதிப்பிட அவரது வாழ்வில் எச்சங்களாக இருக்கும், பிறக்கும் குழந்தைகளை வைத்து மதிப்பிடக்கூடாது.

ஒருவர் வாழ்ந்து போன பின் அவரது எஞ்சி நிற்கின்ற உண்மை, நன்மை, தீமை இவற்றால் பார்த்துத் தெளிவது என்பது செத்தபிறகு வெற்றிலை பாக்கு தருவது என்னும் பழமொழிக்கு ஒத்ததாக அல்லவா இருக்கிறது.

வள்ளுவர் வாழ்கிற மக்களுக்காக, வாழ்கிற காலத்தில் பெறுகிற பேறுகளுக்காகத்தான் குறளை எழுதினார். உரை எழுத வந்தவர்களோ முடிந்தவரை செத்தபிறகு பெறுகிற சொர்க்கம், நரகம், மதிப்பு மரியாதை என்றவாறு எழுதி விட்டிருக்கின்றார்கள்.

அவரவர் எச்சத்தால் காணப்படும் என்பதற்கு, எச்சம் என்கிற உண்மை, குறை, காரியம், ஈவு இவற்றால் காணப்படும் என்பதாக அர்த்தம் கொள்ளலாம்.

ஒருவர் செய்கிற காரியம, உரைக்கின்ற உண்மை-ஏற்படுத்தும் குறை இவற்றால்தான் உடனே ஒருவரை கணிக்க முடியும், கவனிக்க முடியும்.

அவர் இறந்து போன பிறகு, பார்த்து என்ன பயன்? பேசிப் புகழ்ந்து என்ன பயன்?

வாழ்கிறபோதே ஒருவரை வாழ்த்த வேண்டும்? வாழ்த்துவதற்குரிய தகுதியைப் பார்க்க வேண்டும். இது மக்களின் கடமை.

வாழ்கிறபோதே தகுதியால் வாழ்ந்து காட்ட வேண்டும். மக்கள் மனதிலே தனது புகழை நடவேண்டும். மக்களின் மனத்திலும் அவர்கள் காட்டுகின்ற புறச் செயல்களிலும் அவரைப் பற்றிய புகழ் விளங்க வேண்டும். இது தனிப்பட்ட மனிதனின் கடமை.

மக்களில் மூன்று பிரிவினர் உண்டு. புனிதன், மனிதன், கினிதன். தக்காராக வாழ்கிறவர் மனிதரிலிருந்து மேம்பட்டுப் புனிதராகிறார்.

தகவிலராக வாழ்கிறவர் மனிதரிலிருந்து கீழிறங்கி கினிதராகிறார்; பீடை பிடித்தவன் என்று அர்த்தம்.

ஒருவரைக் தக்கார் தகவிலார் என்று கணக்கிட, அவர் செய்கிற காரியங்களில் இருக்கும் உண்மை, இருக்கும் குறை இவற்றை வைத்துத்தான் அறிய முடியும்.

ஒருவர் பேசுகிற உண்மையும், செய்கிற நன்மையும் உயர்ந்தவராகவும், செய்கிற தீமையும் பேசுகிற பொய்மையும் தகவில்லாதவராகவும் ஆக்குகிற தன்மையைத் தான் வள்ளுவர் செப்பமுறச் சொல்லிச் செல்கிறார்.

சமுதாயத்தின் நீதி நியாய நெறிகளெல்லாம் ஆட்சியாளர்களால் நிந்தனைப்பட்டு, புது நிபந்தனைக்குள்ளாகிப் போய் விடும் என்பதை உணர்ந்த தீர்க்கதரிசி வள்ளுவர் அதனால்தான் சமுதாய நீதியைச் சொல்லாமல் தனிமனித நீதியைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

எச்சத்தின் நன்மை தீமையின் மிச்சம் பார்த்தே (மிகுதி) ஒருவரை உணர்ந்து கொள்ள முடியும்.

நடு என்ற சொல்லுக்கு நீதி, செம்மை, தொழில் என்று அர்த்தம். நடு என்ற சொல்லிலிருந்து தான் நடை என்ற சொல் வந்தது. நடை என்றால் நடத்தை என்றும், பயணம் என்றும்,

ஒழுக்கம் என்றும் பொருள்.

வாழ்க்கை நடைமுறையில் வாழ்கிற பயணத்தில் உண்மையாகவே, நீதிமானாகக் ஒழுகுகிற ஒழுக்கம் உடையவர், புத்தரைப் போல் ஏசுவைப் போல், மக்கள் மத்தியிலே புகழ்பெற்றார்கள்.

தகாத செயல்களைச் செய்தவர்கள், தாங்கள் வாழ்கிற காலத்திலேயே தகாதவர்களாக, தகவிலர்களாக ஆகி, புறம் தள்ளப்பட்டு போய் ஒழிந்தார்கள்.

ஆகவே, பெற்ற மக்களைப் பார்த்து மனிதர்களைப் பார்ப்பது சரியான நடுவுநிலைமை ஆகாது. ஒருவர் போய் சேர்ந்த பிறகு ஆராய்ந்து அவர் எப்படிப்பட்டவர் என்று கண்டு பிடிப்பது வாழ்க்கை நடைமுறைக்கு ஒத்துவராது.

இருக்கும்போதே ஒருவர் செய்துவந்த காரியங்களை வைத்தே சிறப்புச் செய்வதும், வாழ்த்துவதும்தான் நடுவுநிலைமையாளர்களின் சிறப்பான கடமையாக இருக்கிறது என்பதுதான் இக்குறளில் புதிய பொருள்.

# 17. புண்ணும் வடுவும்

தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு (129)

அடக்கம் உடமை என்ற அதிகாரத்தில் வருகிற ஒன்பதாவது குறள். மிக எளிமையாக, அர்த்தம் புரிந்து, ஆனந்தப்படச் செய்கின்ற ஓர் அருமையான குறள்.

ஒருவனை ஒருவன் தீயினால் சுட்டபுண், மெய்க்கண் கிடப்பினும், மனத்தின் கண் அப்பொழுதே ஆறும். அவ்வாறன்றி, வெவ்வுரையுடைய நாவினால் சுட்டுவடு, அதன் கண்ணும் எஞ்ஞான்றும் ஆறாது பரிமேலழகர்.

தீயினால் சுட்ட புண்ணினால் ஏற்பட்ட துன்பம், மனத்தை விட்டு நீங்கிவிடும். ஆனால் கடுஞ் சொல்லால் ஏற்பட்ட மனப்புண், ஒரு போதும் நீங்காது. நாவலர் நெடுஞ்செழியன்.

கொள்ளியால் ஒருவன் சுட்டபுண். வெளியே ஆறுவதுடன் உள்ளும் ஒருநாள் ஆறிப்போகும். ஆனால், நா என்னும் கொள்ளியால் சுட்ட புண்ணோ என்றும் மாறாத் தழும்பாக மாறிவிடும் - மதுரை இளங்குமரனார்.

அடக்கம் உடமை என்ற அதிகாரத்தில், மன அடக்கம், மெய் அடக்கம், மொழி அடக்கம் என்று மூன்றின் முக்கியத் துவம் பற்றி விளக்குகிறார் வள்ளுவர்.

மெய்யாகிய உடலின் வெளிப்பாடு, செயலாகி வருகிறது. மனத்தின் வெளிப்பாடு முகத்தின் பாவமாகி வெளியாகிறது. உடலின் துடிப்பும், மனத்தின் கொதிப்பும்தான், சொல் வடிவாக வெளிவருகிறது.

தீயினால் சுடப்படுகிறபோது புண் ஆகிறது. புண் என்பது. உடல் தோலில் உண்டாகும் ஊறு ஆகும். புண்ணாகி விடுகின்ற காயத்தை, உடலியலார் 4 வகையாகப் பிரித்துக் கூறுவார்கள். வெட்டுக்காயம், சிராய்ப்புக் காயம், ஊமைக்காயம், குத்துக்காயம். இவற்றிக்கும் மேலான கொடுமை கொண்டதுதான் தீக்காயம்.

தீக்காயம், திசுக்களை எரித்து, தீய்த்து விடுகிறபோது, ஏற்படும் கொடுமை, காணப்படுகிற தழும்பும் கொடுமை.

இப்படிப்பட்ட தீய கொடுமைகளைச் செய்யும் தீயை வைத்துத்தான், கெட்ட காரியங்களுக்குத் தீப் பழக்கம் என்று சொல்கிறார்கள்.

தீச் சுடுவது ஓரிடத்தில். அதன் வேதனை அங்கு அதிகம் இருக்கும். மற்ற உறுப்புக்கள், தங்கள் வாடிக்கையான கடமைகளை, வழக்கம் போல செய்து கொண்டுதான் இருக்கும். நடைமுறை தளரலாம். ஆனால், எதுவும் நின்று போவதில்லை. இது இயற்கைத் தீயின் கொடுமை.

ஆனால் நாத்தீ இருக்கிறதே - அதுதான் அகில உலகக் கொடுமையான ஆயுதம் என்று கூற வந்த வள்ளுவர், ஆறாதே நாவினால் சுட்ட வடு என்று குறளை முடிக்கிறார்.

குறளைப் படித்தவுடனேயே கருத்தில் பதிகிற அர்த்தம்-நா வென்னும் தீயினால் சுட்ட புண்ணோ, மாறாத் தழும்பாக என்றென்றும் தீராது, ஒருபோதும் நீங்காது என்பதாக வருகிறது.

இந்த இரண்டாம் அடியை, இயல்பாகச் சற்று பதம் பிரித்தல், வள்ளுவர் கூற வந்த கருத்தின் நயம், எத்தனை திருத்தமாகப் பொருத்தமாக அமைந்திருக்கிறது தெரியுமா?

ஆறாதே நாவினால் சுட்ட வடு என்ற வரியை, வடுநாவின் சுட்ட ஆல் ஆறாதே எனப் பிரிக்கிறோம்.

இப்போது ஒவ்வொரு சொல்லுக்கும் உரிய பொருளைப் பார்க்கலாமே!

வடு என்றால் குற்றம், வண்டு, வாள், இளங்காய், தழும்பு.

நா என்றால் நாக்கு, தீச்சுவாலை.

ஆல் நஞ்சு, அதிசயம்.

ஆறாதே சூடு குளிர்தல், தணிதல், அமைதியாக

அடங்குதல். மனச் சமாதானம்.

இனி பெறுகிற பதவுரையை விரித்துப் பார்ப்போம்.

வடுநா என்று கூறியவுடனே, வாள் போல பாய்கிற நாக்கு; வண்டுபோல் துளைக்கிற நாக்கு; குற்றம் சாட்டி குறை கண்டு குத்திக் காட்டுகிற நாக்கு; தடித்தனமாகப் பேசுவதைத் தர்மமாகக் கொண்டு தழும்பேறிய நாக்கு என்று நாம் கொள்ளலாம்.

வடு என்பது இளங்காய், இளங்காயானது வளருகின்ற தன்மை கொண்டது. முற்றி விழுந்து முடியும் வரை வளர்ச்சியைக் கொண்டது.

நா என்றால் தீச்சுவாலை குணம் கொண்டது.

இப்படிப்பட்ட வடுவும் நாவும் சேர்ந்து கொண்டு ஒருவரைச் சுடுகிறபோது, சுட்டுகிற போது, திட்டுகிறபோது ஏற்படுவது என்ன தெரியுமா? காயமல்ல; தழும்பும்; அல்ல நஞ்சுதான்.

ஆல் என்றால் நஞ்சு என்று அர்த்தம். கொடிய குற்றம் மிகுந்த தீச் சொற்கள் உடலிலே பாய்ந்து, ஒருவித நச்சுத்தன்மையை உண்டாக்கி விடுகிறது. தீப்புண்ணின் தன்மைபட்ட இடத்தில் வேதனை மட்டும்தான்.

நாவால் ஏற்பட்ட நச்சுத்தன்மை, உடனே உடலெங்கும் மின்னலாகப் பாய்கிறது. புகையாகப் பரவுகிறது. புயலாகச் சீறுகிறது. மனத்தைச் சாடுகிறது. நிதானத்தை விரட்டுகிறது. சுவாசத்தை அடைக்கிறது. பெருமூச்சைக் கிளப்புகிறது.

ஒரு நொடியில், நச்சுத் தன்மையின் வேகம், உடல், மனம், ஆத்மா மூன்றையும் ஆதிசேஷன் பாம்பாக ஆட்டுவிக்கிறது. பாற்கடலைக் கடைந்ததுபோல, உடற்கடலைக் கடைந்து குடைந்து, தன்னிலையை இழக்கச் செய்கிறது. தலைகுனிய வைத்து, தள்ளாட்டம் போட வைக்கிறது.

உடலிலே, மனத்திலே, இலட்சக்கணக்காக, பலமைல்கள் தூரம் பரவிக் கிடக்கும் நரம்புகளுக்குள்ளே, நச்சுத் தன்மை கலந்துவிட்டால் என்ன ஆகும்?

ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம் போதும் பாழாக்க!

உடல் மனம் ஆத்மாவின் அமைதியை ஒரு சொல் போதுமே பாழாக்க!

உடலில் பாய்ந்த நச்சுத் தன்மை எப்போது ஆறும்? அதை வெளியேற்றினால்தான்.

வெளியேற்றாவிட்டல், உள்ளுக்குள்ளே இருந்து செல்களைச் சிதைக்கும். திசுக்களைத் தீய்க்கும். உறுப்புக்களை முடக்கும். மண்டலங்களை மடக்கும் . உயிரினைக் குலைக்கும். ஆத்மாவுக்கே பெரிய ஆற்றாமையை விளைவிக்கும்.

இந்தக் சுட்ட நிலை எப்போது மாறும்? எப்போதும் ஆறும்? ஏ்பபோது தணியும்? எப்போது மனச் சமாதனம் ஏற்படும்?

இளங்காய் முற்றித் தொலைப்பது போல, உள்ளே புகுந்த நஞ்சு, நாசகாரியங்கள் அனைத்தையும் செய்துவிட்டுத் தானே மறையும்! ஆக நஞ்சு மாறாது; மறையாது; கொண்ட உடம்பையும் கூட்டிக்கொண்டுதான் மறையும். அதாவது அழியும் அழிக்கும்.

அதனால்தான் நாவின் கொடுமை, நஞ்சைவிடக் கொடியது என்றார்கள். நான்என்றாலே நஞ்சு என்றுதானே அர்த்தம்.

நாவுக்கு இருக்கும் சக்திக்கு இரண்டு பக்கமும் கூர்மை உண்டு என்பார்கள்.

நாவின் ஒரு பக்கம் சுவை. மறுபக்கம் சொல்.

நாவின் சுவையால்தான் ஒரு மனிதனின் வாழ்வே அழிகிறது. வதைபடுகிறது. நோய்க் கூட்டம் பேயாய் பிடித்துக் கொள்கிறது. கொல்கிறது. அதற்குக் காரணமும் உண்டு

ஒருவர் நாக்கில் 9000 சுவை நரம்புகள் உண்டு என்பது விஞ்ஞானிகளின் கணக்கு. அதனால்தான் உண்ணும் உணவைப் பார்த்தவுடனேயே லிட்டர் லிட்டராக எச்சில் ஊறித் தொலைக்கிறது.

சுவைக்குத் தீனிப்போடுகிற சுகம் கண்டவர்கள் எல்லாம், சுகமிழந்து, சோகம் அடைந்து, நாசமாகிப் போகிறது வாடிக்கைக் கதை.

அதுபோலவே மறுபக்கம் சொல். கனி போன்ற தீச்சொல்லைப் பயன்படுத்துவோரே அதிகம்.

வாதிடுதல், வம்பு செய்தல், வழக்காடுதல், வதந்தியைப் பரப்புதல், வீண் பேச்சு பேசுதல், விதண்டாவாதம் புரிதல் , இல்லாததைப் பேசுதல் எல்லாம் நாவுக்குக் கொண்டாட்டமான பழக்கங்கள்.

இவை இரண்டையும் அடக்குகிற அடக்கம்தான் அகிலத்தில் சிறந்தது என்கிறார் வள்ளுவர்.

தீப்புண் ஓரிடத்தில்தான், காலம் காயத்தை ஆற்றும் நாப்புண்ணோ உடலெங்கும். காலமும் ஆற்றாது; காயமும் மாறாது. கடைசிவரை முற்றிக் கொண்டேதான் வரும் சுட்டவருக்கும் துன்பம். சுடப்பட்டவருக்கும் துன்பம். இதைப் பட்டறிவு மூலம்தான் பெறவேண்டும் என்பதுதான் படிப்பறிவுடையோரின் பொன்மொழியாக இருக்கிறது.

பட்டறிவும் சுட்டறிவும் இனி நமக்கு வேண்டாம் என்று நாம் சொல்வதையும், அதையே கடைபிடிப்பதையும் ஒழுக்கமாகக் கொண்டுவிட்டால், வாழ்வில் இன்பமே அருவியாகும் அல்லவா!

# 18. எண்ணியரும் திண்ணியரும்

எண்ணிய எண்ணியாங்கு எய்துப
எண்ணியர் திண்ணி யராகப் பெறின் (666)

இதுவரை நாம் கற்றுக் கொண்டிருக்கும் உரைகளை இங்குக் காண்போம்.

தாம் எய்த எண்ணிய பொருள்கள் எல்லாவற்றையும் அவ்வெண்ணிணயவாறே எய்துவர். அப்படி எண்ணியவர் அவற்றிற்கு வாயிலாகிய வினைக்கண் திண்மையுடையராகப் பெறின் என்கிறார் பரிமேலழகர்.

ஒரு செயலைச் செய்ய எண்ணுபவர்கள் உறுதியுடையவர் களாக இருந்தால் அவர்கள் எண்ணியபடியே அந்தச் செயல் நிறைவேறும் என்கிறார் நாவலர் நெடுஞ்செழியன்.

ஒன்றை நினைத்தவர்கள் அவற்றிற்குக் காரணமான தொழிலின்கண் திண்மையுடையவராக இருந்தால் தாம் அடைவதற்கு நினைத்த எல்லாவற்றையும் நினைத்தபடியே அடைய முடியும் என்கிறார் திருக்குறள் முனுசாமி.

ஒரு செயலைச் செய்ய எண்ணியவர் மனத் திண்மை உடையவராகப் பெற்றால் அவர் எண்ணியவற்றை எண்ணியபடியே அடைவர் என்கிறார் மதுரை இளங்குமரனார்.

எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் என்னும் சொற்களுக்கு எல்லோரின் உரைகளும் ஏறத்தாழ ஒரே பொருள்தான் காட்டுகின்றன.

எண்ணியார் திண்ணியராகப் பெறின் என்னும் சொற்களுக்கு எல்லோரின் உரைகளும் ஏறத்தாழ ஒரே பொருள் தான் காட்டுகின்றன.

எண்ணியார் திண்ணியராகப் பெறின் என்னும் சொற்களுக்குப் பொருள் தரும்போது தான் சிறிது மாற்றம் வருகிறது.

திண்ணியர் என்பதற்கு தொழிற்கண் திண்மை உடைவர்

என்பது வி.முனுசாமியின் பொருள்.

திண்ணியர் என்பதற்கு வினைக்கண் திண்மை உடையவர் என்பது பரிமேலழகரின் பொருள்.

திண்ணியர் என்பதற்கு உறுதி உடையவர் என்பது நாவலரின் பொருள்.

திண்ணியர் என்பதற்கு மனத்திண்மை உடையவர் என்பது மதுரை இளங்குமரன் பொருள்.

ஏறத்தாழ எல்லா உரைகளுமே மனத்திட்பம் வினைத்திட்பம் என்றுதான் பொருள் பொழிந்து சென்றிருக்கின்றன.

இந்தக் குறள் இடம் பெற்றிருக்கும் அதிகாரம் வினைத் திட்பம் என்பதாகும்.

இதைச் செயல் திட்பம் என்று சொல்லாமல் வினைத்திட்பம் என்று வழங்கியதற்கு உள்ளுறை ஏதாவது இருக்க வேண்டுமல்லவா?

செயல் என்பது செய்தவுடன் நடந்தவுடன் இருந்து மறைந்து போவது. வினை என்பதோ நடைபெற்று முடிந்து போன பிறகும் கூடத் தொடர்ந்து அதற்குரிய பயனை அளித்துக் கொண்டே இருப்பதாகும்.

உண்ணுவது உறங்குவது கழிவுப் பொருட்களை வெளியேற்றுவது போன்றவை அன்றாடம் நடைபெறும் செயல்கள்.

ஆனால் ஓர் செயலின் பாதிப்பு தொடர்ந்து வரும் என்பதைத்தான் வினை என்றனர். இதை மனத்தை மிகவும் பாதிக்கும் வண்ணம் பாவம் புண்ணியம் என்றனர் நமது முன்னோர்கள்.

அதையே தெளிவாக நல்வினை தீவினை என்றனர் இந்த நல்வினையும் தீவினையும் தான் ஒருவருக்கு ஊழ்வினையாக மாறிஉருவாக்குகிறது.

கோவலன் தான் செய்த தீவினையால் காவிரிப் பூம்பட்டினத்தை விட்டுத் தன் மனைவியுடன் மதுரைக்குப் புறப்படுகிறான். அதைப் பாடிய இளங்கோவடிகள் ஊழ்வினை வந்து உறுத்த என்று அழகாகச் சுட்டிக் காட்டுகிறார்.

கோவலன் கொண்ட சிற்றின்பச் செயல் வலிமையாக வளர்ந்து தொடர்ந்து அவனது வாழ்வுக்கே எமனாகிவிடுகிறது.

அப்படிப்பட்ட வினையைத்தான் மிகவும் நுட்பமாகவும் திட்பமாகவும சிந்திக்க வேண்டும். மனத்தில் வந்திருக்க வேண்டும் செயலில் சந்திக்க வேண்டும் என்று வற்புறுத்துகின்றார் வள்ளுவர்.

வள்ளுவர் இந்த அதிதாரத்தில் மனத்திட்பம்பற்றிப் பாடினார். வினைத் திட்பத்தின் பெருமை அதன் அருமை சிறப்பு பயன் சிறுமை பற்றியெல்லாம் பிரித்துப் பிரித்து விரித்து விரித்துப் பாடினார்.

அதற்கெல்லாம் முத்தாய்ப்பாகத்தான் வள்ளுவர் ஒருவாகான சொல்லை இதனுள் விதைத்து வைத்தார்.

திண்ணியர் என்ற சொல்தான் அது.

திண்மை என்றால் உறுதி, வலிமை, கலங்கா நிலை மெய் என்றும் அர்த்தம். அதாவது வலிய மெய்ந்நிலை.

திண்மை என்றால் மன உறுதி என்றுதான் அர்த்தம்.

திண்ணியன் என்கிறபோது வலிமையுடையவன், பருத்தவன், சமர்த்தன், பொருநன், திறவோன், மன்னன், வல்லவன், வல்லுநன், வீரன் என்னும் சுவையான பொருள்கள் நமக்குக் கிடைக்கின்றன.

எல்லோருக்கும் மனம்இருக்கிறது. இதிலே எள்ளளவும் ஐயமேயில்லை.

மனமானது நல்ல மனமாக இருக்க வேண்டும். அதுதான் எல்லோரின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

நல்ல மனம் எங்கே கிடைக்கும்? எப்படி கிடைக்கும்?

நல்ல மனமானது நல்ல உடலில் கிடைக்கும்.

நல்ல மனம் என்கிறோம். நல்ல உடல் என்கிறோம்.

அப்படியென்றால் நல்ல என்ற சொல் எதைக் குறிக்கிறது.

மிக்க, நன்மையான கடுமையான என்னும் அர்த்தங்கள் காட்டுகின்ற சொல்லாக அது விளங்குகிறது.

கடுமை என்றாலும் வலிமை மிகுதி கண்டிப்பு என்றுதான் பொருள்தருகிறது.

ஆகவே, நல்ல மனமான வலிமை மிகுந்த கண்டிப்பு மிகுந்த மனம் எங்கே உண்டாகிறது வலிமையான உடலில்தான் என்பதுதான் உலகம் ஏற்றுக் கொண்ட உயர்ந்த உண்மை.

அதைத்தான் கீர்த்தி பெற்ற கிரேக்கர்கள் தங்களது வாழ்க்கை வேதமாகக் கொண்டு வெற்றிகரமாக வாழ்ந்தார்கள்.

sound mind in a sound body என்பது அவர்கள் உயிர் மூச்சான கொள்கையாக இருந்தது. அதைப் பின்பற்றித்தான் உலகம் எல்லாம் healthy mind in a healthy body என்று போற்றிப் பின்பற்றியது.

அந்த sound body என்ற சொல்தான் திண்ணியர் என்ற சொல்லுக்குரிய பொருளாகத் திகழ்கிறது.

எண்ணுவது எளிது. அதைப் பின்பற்றுவதுதான் கடினம்.

மருத்துவமனையிலே படுத்துக்கிடப்பவன் மனத்திலே ஆயிரம் ஆசைகள். ஆயிரம் திட்டங்கள். அரிய பெரிய தீர்மானங்கள் இருந்து என்ன பயன்?

அவன் நடமாடினால்தானே நான்கும் நடக்கும். மனத்திட்பம் என்பது மன வலிமையை மன உறுதியைக் குறிக்கிறது.

வினைத்திட்பம் என்பது மனவலிமையை மன உறுதியை உருவாக்கித் தருகிற உடல் வலிமையை உடல் உறுதியைக் குறிக்கிறது.

இதைத்தான் திருமூலர் மிகத் தெளிவாகப் பாடியிருக்கிறார்.

**உடம்பார் அழியில் உயிரால்; அழிவர்**
**திடம்படு மெய் ஞ்ஞானம் சேரவும் மாட்டார்.**

இங்கே திடம்பட மெய்யும் ஞானமும் சேரமாட்டார் என்பது திருமூலரின் தெய்வீக வாக்கு.

படு என்பது கூர்மையாகும். திடம் மிகுந்த, கூர்மையும் நுண்மையும் நிறைந்த மெய்க்குள்ளேதான் ஞானம் இருக்கும். ஞானம் என்பது அறிவில் விரிவில் விரிவின் தெளிவில், தெளிவின் மிகுதியில் கிடைக்கும்.

எண்ணியார் என்பதற்கு நோக்கம் உடையவர், அதாவது இலட்சியவாதி என்று கூறலாம்.

எய்துப என்பதற்கு அடைவது என்பதை விட அம்பெய்தல் போல காரியத்தைச் செய்தல் என்று கூறலாம். எய்த என்றால் நிரம்ப நன்றாக என்று பொருள் தருவதால் நாம் இவ்வாறு பொருள் கொள்ள முடிகிறது.

இலட்சியம் நோக்கம் மிகுதியாக உடைய ஒருவர் தமது உடலால் திண்ணியராக இருந்தால் தாம் எண்ணிய வினைகளை எண்ணிய படியே செய்துவிட முடியும்.

அம்பெய்வதற்கு உடல் வலிமை மன ஒருமை சிதையாத பார்வை குறிபார்க்கும் திறமை வேண்டும். அதுபோலவே எண்ணிய எண்ணங்களைத் திண்ணமாய்ப் பெற்றிட திண்மை மிகுந்த திண்ணிணயர் ஆக வேண்டும்.

திண்ணியர் ஆகப் பெறின் என்ற சொல்லைப் பாருங்கள். உடலில் வலிமை வேண்டும் என்பதை தீர்க்கமாய்க் குறித்திருப்பது தெரியும்.

ஆகுதல் என்பது நினைத்தவுடனே நடந்து விடுவதல்ல. தொடர்கிற முயற்சியால் துன்பத்திலும் மீண்டும் வெளிவருகிற பயிற்சியால்தான் முடியும். அதனால்தான் ஆகப் பெறின் என்றார்.

வலிமையான உடலாளர்கள் வளமான சிந்தையுடன் எண்ணி முயல்கிறபோதுதான் எண்ணியபடி நடக்கும். இப்போது குறளை மீண்டும் ஒருமுறை படிக்கலாம்.

**எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர்**
**திண்ணியர் ஆகப் பெறின்.**

குறிக்கோளைக் கொள்கையாகக் கொண்டு எண்ணியவர் ஒருவர் தான் எண்ணியபடியே அந்தக் காலத்திலேயே நிச்சயமாகப் பெற முடியும். அவர் திண்மையுடைய தேகம் கொண்டவராக விளங்கினால்.

நலிந்த தேகத்திற்கு முணகத் தெரியும். தன்னைத்தானே சபித்துக் கொள்ளத் தெரியும். திட்டமிடவும் தீர்மானமாக முடிவெடுக்கவும் அது சமயமல்லவே!

ஆகவே திண்மையாளராக முதலில் திகழுங்கள். பிறகு, எண்ணியாராக மாறுங்கள். பிறகு என்ன வேண்டும், என்ன நடக்கும், எப்படி முடியும் என்று எண்ணுங்கள். அந்த எண்ணமே உங்களுக்கு எல்லாம் தரும்.

அதனால்தான் மனம் போல் வாழ்வு என்றார்கள. வள்ளுவரோ ஒரு படி மேலே சென்று மனம் போல வாழ்வு பெற தினந்தோறும் தேகத்தில் திண்மை பெறுங்கள். தேடுகிற நன்மையைப் பெறுங்கள் என்றார்.

இந்த உண்மையை இன்று உணர்ந்து கொண்டிருக்கிறோம். வாழ்வதும் தாழ்வதும் நம் கையில்தான். ஏனென்றால், நாமே நமக்கு எதிரியும் நண்பனுமாய் இருக்கிறோம்.

# 19. மடியும் அடியும்

மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅயது எல்லாம் ஒருங்கு (610)

61ம் அதிகாரமாகிய மடியின்மையில் வருகிற 10வது குறள்.

இந்தக் குறளுக்கு இதமான உரையைத்தர எல்லா உரை ஆசிரியர்களுமே, ஒரு முகப்பட்டு முனைந்திருக்கின்றனர், என்றாலும், எது ஏற்றது என்பதில் தான் குழப்பமும் தோற்றுப் போவது போல் படிப்பவர்க்குத் தென்படுகிறது.

'தன்னடி அளவானே எல்லா உலகையும் அளந்த இறைவன் கடந்த பரப்பு முழுவதையும், மடியிலாத் அரசன் முறையானன்றி ஒருங்கு எய்தும்' என்கிறார் பரிமேலழகர்.

அதே கருத்தை அப்படியே எழுதியிருக்கிறார் திருக்குறளார்.

தனது அடியால் அளந்தவன் தாவிப் பற்றிய உலகப் பரப்பை எல்லாம், சோம்பல் இல்லாத ஆட்சியாளன் (இரந்து பெறுதல் இன்றி) தன் முயற்சியாலே அடைவான். (மதுரை இளங்குமரனார்)

சோம்பல் இல்லாத அரசன், சோம்பலின் காரணமாகப் பிற அரசர்கள் பலரையும் விட்டு முன்பு நீங்கிய செல்வத்தை எல்லாம், ஒரு சேரப் பெறுவான் என்பது உறுதி- இரா.நெடுஞ்செழியன்.

இனி எப்படி உரைகள் இடறுகின்றன என்பதை அறிவதற்கு முன்பாக, குறளின் ஏழு சொற்களுக்கும் மற்றவர் கூறிய பொருளைக் காண்போம்.

**மடியிலான்**, சோம்பல் இல்லாதவன், **மன்னவன்**, மன்னன் ,எய்தும், அடையும் ,**அடி அளந்தான்**, தன்னடியால் அளந்தவன். **தாஅயது** , பரந்தநிலப் பரப்பு , எல்லாம் ஒருங்கு எல்லாவற்றையும் இக்குறளில் எல்லா உரை ஆசிரியர்களும் முரண்பட்ட இடம் அடி அளந்தான் என்பதில்தான்.

எய்தும் மடியளந்தான் என்றுதான் வள்ளுவர் எழுதியிருப்பார். அந்த இரு சொற்களையும் எய்தும் அடி அளந்தான் என்று பிரித்து, திருமால் வாமனன் வடிவில் வந்த கதையை இங்கே வலிந்துப் பொருத்திவிட்டார் பரிமேலழகர் என்பார்கள் பலர்.

நாவலர் நெடுஞ்செழியன் போன்றோர், புராணக் கருத்துகளை வள்ளுவர் புகுத்தவில்லை. இது இப்படித்தான் இருக்கும் என்று எய்தும் மடி அளந்தான் என்று உரை கூறுவார்கள். ஆகவேதான் எய்தும் அடி அளந்தான் ஆ அயது என்று சொல் பிரித்துக் கூறுகிறார்கள்.

தா அயது என்றால் பரந்த என்று பொருள்.

ஆ அ என்றால் ஆச்சரியச் சொல் அயலாது என்றால் பொல்லா நிலம். பொல்லா நிலம் என்றால், நரகம், மயானம், சக்தி என்றெல்லாம் அர்த்தம் உண்டு. மடி என்றால் சோம்பல் என்றுமட்டும் பொருள் இல்லை. மடிதல், கேடு, நோய் என்றும் பல பொருள் உண்டு. மடியிலாள் மன்னவன் என்று குறள் கூறுவதால், மன்னவனுக்கு மட்டும்தான் இந்தக் குறள் பொருந்துமா என்றால் - மக்கள் நிலை என்னாவது?

மன்னனுக்கு மட்டும் கூறினால் போதும், மக்களுக்கும் அது பொருந்தும் என்று ஏற்றுக்கொள்ளாமலா? மடியின்மை என்ற அதிகாரத்தில் வருகிற ஒன்பது குறள்பாக்களிலும், மன்னவன் என்னும் சொல்லே இல்லை. மக்களுக்காகவேதான் கூறியிருக்கிறார் என்று நாம் கருதலாம் அல்லவா? இங்கு மன்னவன் என்ற சொல்லைப் பாருங்கள். மன் என்றால் சிந்திப்பவன். நவன் என்றால் புதுமையாக, பொறுமையாக தன்னைப் பற்றி, தன் நிலையைப் பற்றிச் சிந்தித்துச் செயல்படுகிற சீர்மையாளன் என்று நாம் கூறலாமே!

அடி அளந்தான் என்பது, ஞானத்தை அளந்தான் எனலாம். ஞானம் நிறைந்தவன் என்பதாகும். தா அயது என்று பரிமேலழகர் பிரித்தாலும், ஆ அயது என்று நாவலர் பிரித்தாலும் வரும் பொருள் எப்படி இருக்கும்?

தா அயது என்றால், பரந்த நிலப்பகுதி.

ஆ அயது என்றால் ஆச்சரியப்படும்படியான நிலப்பகுதி.

தா என்றால் அழிவு, கேடு, பகை, வலிமை, படை என்றும் அவற்றில் உழல்கிற நிலப் பரப்பு என்றும் கூறலாம். இனி இனம் காண்கிற புதிய கருத்தைக் காணலாம்.

மடியிலான் என்றால் நோய் அற்றவன்: அதனால் வரும் கேடற்றவன் : கேடுகள் நீங்கப் பெறுவதனாலேயே, கிடைக்கின்ற புத்துணர்ச்சி நிறைந்தவன் : புதுமையான சிந்தனைகளுக்குத் தலைவனாக, மன்னவனாக, மாபெரும் வழிகாட்டுகிறவனாக விளங்குபவன்.

எய்தும் என்றால், வருவதைப் பெறுவதும்: தருவதை அடைவதும் அல்ல. அம்பைக் குறிபார்த்து, அடைய வேண்டியதை எதிர்பார்த்து, வேகமாக விடுகிற செயல்படும் இலட்சிய நோக்கின் எழுச்சியால், ஏற்படுகிற முயற்சியால் பெறுவது. அதாவது தன் முயற்சியால், தன் எழுச்சியால், தானே முயன்று, வெற்றிபெறுகிறவன். தனித் தன்மை நிறைந்தவன்.

அடிஅளந்தான் என்றால், தன்னை அறிந்தவன். தன் திறமையை அளந்தவன்: வாழ்க்கையின் மூலத்தை உணர்ந்தவன்: வாழ்கின்ற உபாயங்களைத் தெரிந்தவன். அறிவாற்றலை, செயல் ஆற்றலை மிகுதியாகக் கொண்டவன்.

இப்படிப்பட்டவன், நல்ல நிலமாகிய சொர்க்க பூமியையும்,பொல்லா நிலமாகிய நரக பூமியையும், இந்த உலகிலே வாழும் போது படைக்கத் தெரிந்தவனாக வாழ்வதால், இவன் சிறந்த மனிதனாகத் திகழ்கிறான்.

இதற்கு அடுத்த அதிகாரம் ஆள்வினை உடைமை. இதற்கு முந்தைய அதிதாரம் ஊக்கமுடைமை.

ஊக்கத்திற்கும், முயற்சிகளுக்கும் இடையே உள்ள அதிகாரம் சோம்பலற்ற நிலைமை. தேம்பித்திரிய வைப்பது சோம்பல் என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதானே.

மடிவந்தால் குடிகெட்டுவிடும் : குடிகெடும் முன்னே

அவனும் கெட்டுவிடுவான். மடி வந்தால் குற்றம் பெருகும். அழிவை நோக்கி அவனே நடப்பான். பெருமக்கள் தொடர்பு போகும். இவன் பேசுகிற பேச்சு எடுபடாமல் போகும். இவனைப் பகைவர் எளிதாக வெற்றி கொண்டு அடிமை ஆக்குவர் என்றெல்லாம் பாடிக் கொண்டு வருகிற வள்ளுவர் ஒன்பதாவது குறளில் பாடுகிறார் இப்படி.

குடியினுள் ஏற்பட்ட குற்றங்களை மடியிலிருந்து வெளிப்பட்டு, செயல்பட, குற்றம் நீங்கும் என்கிறார். ஆக. சுறுசுறுப்புடன் செயல்படவேண்டும் என்கிறார்.

அந்த உடல் வளம், மன நலம், அறிவு பலம் எப்படி வரும் என்று வழிகாட்டத்தான், வள்ளுவர் தனது பத்தாவது பாடலில், மடியிலான் என்ற வார்த்தையைத் தெளிவாகக் குறித்திருக்கிறார்.

மடியிலான் என்பவன் நோயற்றவன். நோயற்ற வாழ்வில் தான் குறைவற்ற செல்வம் பெறுகிறான்.

நோய் ஒருவனுக்கு வந்து விட்டாலே, அவனுக்கு வாழ்க்கை மேலேயே வருத்தமும், வெறுப்பும், எரிச்சலும் கோபதாபங்களும் வந்து குவிந்து விடுகின்றன.

புலம்பித் தவிப்பதும், படுத்துக் கிடப்பதும் : நாட்களை நகர்த்தித் தொலைப்பதும்தான் அவனது செயல்களாகிப் போகின்றன. அவன் மடிந்து போய் விடுவதால்தான், அவனது அறிவு, வரவு, செயல்கள் எல்லாம் முடங்கிப் போய் அழிந்துபோகின்றன.

ஆகவேதான், மடியிலான் என்றார். நோய்படாத உடல், நூறுகோடிக்குச் சமம். உடல் நலக்கேடு இல்லாதவாழ்க்கை, உலகத்திலேயே அற்புதமான வாழ்க்கை.

இப்படி ஒருவன் வாழவேண்டும். அப்படி வாழ்கிறவன் மற்றவர்களுக்குத் தலைவனாக, மன்னவனாக வாழ்கிற பெரும் பேற்றினைப் பெறுகிறான்.

சோம்பலற்றவன் சுறுசுறுப்பாக இருக்கிறான், சுறுசுறுப்பான உடலில் சுறுசுறுப்பான மனம். அப்படிப்பட்ட

மனம் கொண்டவன், நல்லதை நினைக்கும் நாயகனாக, நாடு போற்றும் நல்லவனாக, தகுதிமிக்கத் தலைவனாக, கண்டார் கை குவித்து வணங்கும் கலைஞனாக வாழ்கிறான்.

அப்படிப்பட்ட அற்புத அறிஞனுக்கு, ஆற்றலாளனுக்கு அனைத்தும் கிடைக்கும், கேட்டது கிடைக்கும். நினைத்தது நடக்கும், எல்லாம் கிடைக்கும். ஒருங்கே கிடைக்கும். உலக வாழ்வே இனிக்கும்.

இப்பொழுது நாம் காணுகிற புதிய பொருளைக் காண்போம். மடிந்துபோகாத, மடியை மடியச் செய்கிற மடியில்லாத மன்னவனாக வாழ்கிற ஒரு மனிதன், தன் ஞானத்தால், அறிவார்ந்த அனுபவத்தால், அகிலத்தையும் புகழால் பெறுகிற பேறும் பேரின்பமும் பெறுகிறான்.

சோம்பேறியின் மூளை சைத்தானின் தொழிற்சாலை என்றால், சுறுசுறுப்பானவன் மூளை, சொர்க்கத்தின் சுகந்த சோலை என்று கூறலாம்.

வசந்தத்தின் வளத்தை வாழ்வில் அனுபவிக்க, மடியை மடித்துவிடவேண்டும். முடித்து விடவேண்டும் அதற்கான ஆற்றல் மிகு தேகத்தை வளர்த்துக் கொண்டு, மனிதனாக வாழ்ந்து மன்னவனாக உயரவேண்டும். அதன் வழி, எல்லா நலனும் ஒருங்கே எய்திட, என்றும் இன்பத்தில் திகழ வேண்டும். மகிழ வேண்டும்.

அத்தகைய வாழ்க்கையை அறிவாளர்களாகிய நீங்கள் நிச்சயமாக வாழ்வீர்கள். வாழமுடியும் மற்றவர்களையும் வாழ்விக்க முடியும்.

# 20. செய்யாளும் பொய்யாளும்

அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல். (84)

விருந்தோம்பல் என்னும் அதிதாரத்தில் வரும் நான்காம் பாடல்.

இந்தக் குறள்பா, இல்லத்து வாழ்கிற இருவரின் உள்ளத்தே ஓங்கி எழுகின்ற உழுவலன்பு காரணமாக, உயர்ந்த பண்பாட்டைவெளிப்படுத்துகிற செய்லுக்கு விழுமிய உதாரணமாகத் திகழ்கிற, வாழ்வின் அருமையை விளக்குவதாக அமைந்திருக்கிறது.

நமது பொருளைக் கூறுவதற்கு முன்பாக, முன்பிருந்த உரையாசிரியர்களின் உயர்ந்த அறிவாண்மை மிக்கப் பொருளையும் அறிந்து கொள்வது இன்பம் பயப்பதாகும்.

முகம் இனியனாய், தக்க விருந்தினரைப் பேணும் இல்லின்கண், திருமகள் மனமகிழ்ந்து வாழா நிற்கும்

- பரிமேலழகர்

முகமலர்ச்சியோடு விருந்தினரைப் போற்றுபவன் வீட்டில், எப்பொழுதும் செல்வம் பொழியவே செய்யும்.

நெடுஞ்செழியன்

விருந்தினரை முகமலர்ந்து வரவேற்க நன்முறையில் பேணுபவன் இல்லத்தில் செல்வம் என்னும் மகள், நன் முகத்தோடு அகமும் மலரத் தங்கியிருப்பாள்

- மதுரை இளங்குமரனார்

விருந்தோம்பல் என்ற அதிகாரத்தில் வருகிற. பாடலுக்குத் தருகிற பொருள் ஒன்றுபோல இருந்தாலும், செய்யாள் என்ற சொல்லுக்குப் பொருள் தேடுகிறபோதுதான், கொஞ்சம் தடம் மாறி இருக்கின்றார்கள்.

செய்யாள் என்றதும் சொல்லுக்கு இலக்குமி என்று

பரிமேலழகரும், செல்வம் என்றும் திருமகள் என்று நாவலரும், செல்வம் என்று இளங்குமரனாரும் பொருள் எழுதியிருக்கின்றனர்.

இலக்குமி என்பது இந்து மதப் பெண் தெய்வம். செல்வத்திற்குரிய ஒரு தெய்வமாக, செல்வச் செழிப்பு வழங்கும் பெரும் இராசியான தெய்வமாக மக்கள் வழிபடுகின்றார்கள் என்பது நம்மவர்கள் மரபு.

'இப்படிப்பட்ட புராணக் கருத்தை வள்ளுவர் புகுத்தவில்லை. பரிமேலழகர் தனது மத ஈடுபாட்டின் காரணமாக இவ்வாறு விளக்கம் அளித்துள்ளார்' என்று எதிர்ப்பவர்களின் உரைகளில், இலக்குமியல்ல, செல்வம் என்றே குறிப்பிட்டால் போதும். பொதுமறையான குறளுக்கு இந்தப் பொருளே பொருந்தும்'' என்பது இன்னொரு சாராரின் இனிமையான வாதம்.

இதுபோல மாறி மாறி பொருள் தருவது, உரையாசிரியர்கள் அவரவர் வாழ்கிற காலக் கட்டத்தின் தாக்கத்தால் ஏற்படுவதாகும்.

நான் எப்போதும் திருக்குறள் நூலை உடலியல் பற்றி விளக்குகிற வாழ்வியல் நூல் என்றே கூறுவது வழக்கம். மதம் சார்ந்த வாழ்வியல் நூல், பொருள் சார்ந்த வாழ்வியல் நூல், அரசியல் சார்ந்த வாழ்வியல் நூல் நீதி அறம் காட்டும் வாழ்வியல் நூல் என்பது பலரின் கருத்துகள்.

எல்லாவற்றிற்கும் அடிப்படையாக, ஆதாரமாக விளங்கும், உடலை வளப்படுத்த, நெறிப்படுத்த வள்ளுவர் மிகவும் நுண்ணிய முறையில் அமைத்துவைத்த பாலடைக் கட்டிகள்தாம் நமது தமிழ்ப்பாரம்பரியத்தைத் தெளிவாக்கும் திருக்குறள் பாக்கள்.

விருந்தினரைப் பேணியும், ஓம்புதலும் செய்தால், வந்து இலக்குமி தங்குவாள். செல்வம் தங்கும் என்பது நம்பிக்கை. விருந்தோம்பலால், செல்வம் நல்வழிப் படுகிறது. தகுதியும்,

ஞான ஒழுக்கமும் உயர்கிறது. பொருள் கிளைத்துப் பெருகுகிறது என்பதாக, இக் குறளுக்கு மேலும் மேலும் பொருள் விரிகிறது.

என்றாலும், பொதுவாக விளக்கப்பட்ட ஏழு சொற்களுக்குரிய குறளின் பொருளையும் சற்று விரிவாகக் காண்போம்.

அகன் அமர்ந்து = மனம் மகிழ்ந்து

செய்யாள்=செல்வம், திருமகள், இலக்குமி

உறையும் = தங்கியிருக்கும்

முகன் அமர்ந்து = முகம் மலர்ந்து

நல்விருந்து = தக்க விருந்தினரை

ஓம்புவான் இல் = பேணுபவனது இல்லத்தின் கண்

என்று, குறளில் உள்ள ஏழு சொற்களுக்கும் பொருளைப் பல உரையாசிரியர்கள் பிரித்துக் கூறியதையும் இங்கே தந்திருக்கிறேன். விருந்தோம்பல் என்பது தமிழர்க்குரிய தனிப் பண்பாடாகும்.

**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**

என்ற பாட்டிலும்

**சோற்றால் அடித்த சுவர்**

என்று உடலைக் குறிப்பதிலும் ஒருவருக்குச் சோறு போட்டு விட்டால், அவரை அடிமையாக்கி விடலாம் . என்பதாக, செஞ்சோற்றுக் கடன்பட என்னும் ஒரு சொல்லை உருவாக்கி வைத்திருப்பதும், இன்றைய தமிழர்கள் பலரைச் சோறு போட்டே அடிமைகளாய் வைத்து வதைத்து வாழ்விக்கிற அரசியல்வாதிகளின் செயற்பாடும், உணவுக்குத்தருகிற உயரிய மரியாதையையுமே காட்டுகிறது.

ஔவையோ அதற்கு மாறாக, ஒரு பாடலையே பாடிச் சென்றிருக்கிறாள்.

ஒப்புடன் முகம் மலர்ந்து உபசரித்து உண்மைபேசி, உப்பிலாக் கூழ் இட்டாலும் உண்பதே அமுதமாகும்.

அமுதத்துக்குரிய குணம், வாழ்நாளை நீட்டிப்பது. உணவையும் அமுதம் என்று போற்றப்படுவதும் அதனால் தான். உறவினருக்கு உணவிடுவது கடமையாகி விடுகிறது. கட்டாயமாகிவிடுகிறது. அதை உரிமையாக எடுத்துக் கொண்டு கேட்டுப் பெறுவதும். சண்டைபோட்டு வாங்கி மகிழ்வதும் இயற்கையான நடைமுறைகள் தாம்.

இங்கே விருந்தோம்பல் என்பதில், விருந்து என்பதற்கு புதுமை, புதிய என்று அர்த்தம்.

புதிதாக வருகை தருபவர்கள் , அவர்களை யாரென்று அறிந்து கொள்ளாமல் அவர்களுக்கு உதவி மகிழ்வது.

விருந்தளித்தல் என்று கூறாமல், வள்ளுவர் விருந்து ஓம்பல் என்றார். அதாவது புதிய வரவிற்கு, உதவி செய்து காத்தல் என்கிற அர்த்தத்தில், அவர் இந்த சொற்களைப் பெய்துள்ளார்.

இப்போது இந்தக் குறளுக்குரிய பொருளைப் பாருங்கள்.

அகன் = அகமான மனம், அகன்ற

அமர்ந்து = பொருந்திய

செய்யாள் = இலக்குமி, அதிர்ஷ்டம், அழகு

முகன் = முகம்

அமர்ந்து = பொருந்தி

நல்விருந்து = நல்ல விருந்து, புதுமை

ஓம்புவான் = துவளாமல் காப்பவன்

இல் = வீடு.

செய்யாள் என்றால் இலக்குமி. இலக்குமி என்றால் அழகு, நல்வினைப் பயன் என்றும் பொருள். இந்த நல்வினை என்பதோ இன்ப துன்பங்கட்குக் காரணமானது.

எதையும் எதிர்பாராமல், புதிதாக வருவர்க்கு

விருந்தளிப்பது என்பதற்குப் பரந்த மனம் வேண்டும், அத்தகைய விருந்துக்கு உரியவர் ஆகிற வருக்கே விருந்தர் என்றுதான் பெயர். விருந்தர் என்றால் புதியவர், விருந்தினர் என்றால் புதியோர். புதியவர்களுக்கு எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல், உணவளித்து, உகந்த நலம் காத்து, பாதுகாப்பதற்கு எப்படி அந்தக் குணம் உண்டாகும்? அதற்கான பதிலைத்தான், குறளில் அகன் அமர்ந்து என்று ஆரம்பித்தார்.

அகம் பொருந்தினால்தான், அந்த அற்புதகுணம் வரும். எதிர்பார்த்துச் செய்கிற மனத்தில், கபடும் சூதும் கவ்விக் கொள்கிறது. சூது கலவாத தூய மனதில், செய்யாள் என்ற அழகு உறையும் என்றால் இங்கே இலக்குமி, திருமகள் என்று கூறுவது கண்ணுக்குத் தெரியாத ஒன்றை, கற்பனையான ஒன்றை மனத்தில் வந்து உறையும் என்பதைவிட, அழகு வந்து உறையும் என்கிறபோது நடைமுறைக்குரிய எதார்த்தத் தன்மையைப் புரிந்து கொள்ள முடிகிறது.

அழகு என்றால் எதைக் குறிக்கிறது மன அழகு, குண அழகு என்று நாம் கூறலாம்.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். உள்ளே இருக்கும் அகத்தின் உணர்வுகளை முகந்து கொண்டு வந்து மற்றவர்களுக்குக் காட்டுவதால்தான், அதற்கு முகம் என்ற பெயர் வந்தது.

அழகு என்பதற்குச் சுகம், சிறப்பு, செழுமை, வளம், வனப்பு, பத்திரம் என்றெல்லாம் பல பொருள்கள் உள்ளன.

மனம் பொருந்தி, மற்றவர்களுக்கு மரியாதை. செய்கிறபோதுதான், முகத்திலும் அந்த ஆன்ம ஒளி, அழகுற வெளிப்படுகிறது.

அப்படி நல்ல விருந்தைப் பாதுகாத்துப் பராமரித்துக் காத்தலுக்கு ஓம்பல் என்று கூறுவார்கள்.

ஓம்பல் என்பதற்குத் தீது வராமல் காத்தல் என்பதுடன் மனத்தை ஒரு நிலைப்படுத்தல் என்றும் பொருள் கூறலாம்.

அகம் பொருந்த வேண்டும், முகம் பொருந்த வேண்டும்.

வந்தவர்களுடன் மனம் ஒன்றிட வேண்டும். அதன் பின்பே அவர்க்கு மகிழ்ச்சிதரும்படியான காரியங்களைச் செய்ய முடியும்.

தெளிவான உடலில்தான் தெளிவான மனம் குடியிருக்கும். தெளிவான மனம்தான் தேர்ச்சியான தேகத்தை வளர்க்கும்.

இந்தக் குறளில் தெளிவான மனத்தின் தேர்ந்த குணத்தை விளக்குவதற்காக, தேர்ந்த செயல்என்று விருந்தோம்பலை வள்ளுவர் எடுத்துக் கொண்டார்.

இப்பொழுது இந்தக் குறளுக்குரிய முழுப் பொருளையும் காண்போம்.

அகம் பொருந்தியதால் முகம் பொருந்தி, இனிய மொழிகளுடன் வந்தவரை வரவேற்று, விருந்தோம்பல் செய்பவரின் வீட்டில் வளமும், சிறப்பும் அழகும் நீங்காமல் நிறைந்திருக்கும்.

செல்வம் நிறைந்திருக்கும் என்று பொருள் சொன்னதும், செல்வம் என்றால் பணம் என்றே படிப்பவர்கள் முடிவுக்கு வந்து விடுகின்றார்கள்.

விருந்தினர்களுக்குச் சரியாக உபச்சாரம் செய்தால், பணம் பெருகும் என்ற பொய் நம்பிக்கை இதனால்தான் புயலாகப் புறப்பட்டுவிடுகிறது.

செல்வம் என்றால் இன்பம் அழகு,செழிப்பு பெருக்கம் எனப் பொருள்.

ஆக, நோயற்ற செல்வத்தை, நேர்த்தியான அழகை, வற்றாத வளத்தை, வளர்ந்தோங்கும் செழிப்பை, குடும்பத்தின் அன்புமயமான இன்பப் பெருக்கை. விருந்தோம்பல் அளிக்கிறது.

ஆக, நோயற்ற செல்வத்தால் நிறைவாழ்வு வாழ்வார்கள். முகப்பொலிவோடு வாழ்ந்து காட்டுவார்கள். பண்பான குடும்பப் பெருக்கத்தால், சமுதாயத்திற்கும் தாய் நாட்டிற்கும் அவர்கள் சான்றாக விளங்குவார்கள்.

இதெல்லாம் அகனமர்ந்து, முகனமர்ந்து, நல்விருந்தை ஓம்புகிறவன், வீடாகிய மனத்தில், சிறப்பும் செழிப்பும், அழகும் ஆனந்தமும், இன்பமும் ஈடிணையற்ற வளமும் பெருகும் என்கிறார் வள்ளுவர்.

வலிவான உடல். தெளிவான மனம், பொலிவான முகம், தீதற்ற இனிய சொற்கள், எதிர்படுவோரை மதிக்கின்ற மாண்பு, வரவேற்கிற பண்பாடு, உதவுகிற இலட்சியம்.

அந்தக் காட்சிகளுக்காகத்தான் இல்என்றார். .இல் என்றால் இடம், வீடு. வீடு என்றால் சுகம் மிகுந்த சொர்க்கம்.

இப்போது நாம் ஒரு புதிய பொருளைக் காண்கிறோம்.

அகத்திலே மன அழகும் குண அழகும், முகத்திலே அன்பழகும், பண்பழகும், தேகத்திலே தெம்பழகும் தேர்ந்த அழகும், வாழ்க்கையிலே வடிவழகும் வளவழகும் நிறைந்திட உண்டி கொடுத்து உயிரைக் காப்பாற்றுங்கள். உயிர்களுக்கு இன்பம் ஊட்டுங்கள். உயரிய வழிகளைக் காட்டுங்கள். உலகத்தின் உண்மை வாழ்க்கையை உணர்வித்துக் கூட்டுங்கள். அதுதான் உங்கள் அழகையும் ஆனந்தத்தையும் வளர்க்கும்.

இப்படிப்பட்ட உண்மைகளை வெளிப்படுத்தத்தான் அகனமர்ந்து முகனமர்ந்து ஓம்பல் என்ற மூன்று சொற்களைப் பெய்து, செய்யாள் (அழகு) எப்போதும் உறையும் என்ற சொல்லையும் இணைத்தார்.

கற்பனைக்கு இடம் தராது. கட்டுடலோடு உலாவருகிற கனிவான காட்சிக்கே வள்ளுவர் முக்கியத்துவம் தந்துள்ளார்.

ஓம்பல் என்றால் மன ஒருமை நிலை என்று அர்த்தம். மன ஒருமைப்பாட்டுக்கு, சுகம் உலாவருகிற தேகமும் தேவைதானே!

அடிப்படையான தேகத்திற்குள்ளே ஆட்சி செய்து வருகிறது, உள்ளம் என்றால் நல்லழகும், சொல்லழகும். முகம் என்றால் வழி. உண்மை என்றும் அர்த்தம்.

முகத்திலே அன்பு. வாய்ச் சொல்லிலே உண்மை. மனத்திலே அன்பு. இப்படி விருந்தை உபசரித்துப் பாருங்கள்.

உங்களுக்கு வெற்றிகள் வாழ்க்கையில் வந்து குவியும் என்று வள்ளுவர் உள்ளம்நினைத்த கருத்துக்களுடன், நாமும்ம வாழ்வோம். வாழ்வில் மகிழ்வோம். வற்றாத இன்பத்தில் திகழ்வோம்.

# 21. ஐயுணர்வும் மெய்யுணர்வும்

ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயம் இன்றே
மெய்யுணர்வு இல்லாத வர்க்கு. (354)

*36 வது அதிகாரத்தில், 4வது பாடலாக உள்ளது.* அதிகாரத்தின் பெயர் மெய்யுணர்வு.

பிறப்பு வீடுகளையும், அவற்றின் காரணங்களையும் விபரீத ஐயங்களன்றி, உண்மையில் உணர்தல் என்று பரிமேலழகரும், உலகில் உள்ளனவற்றையெல்லாம் உள்ளபடியே கண்டறிந்து, ஒருவன் தனது பழுத்த பகுத்தறிவினைக் கொண்டு ஆராய்ந்து பார்த்துத் தெளிவடைந்து உண்மையை உணர்தல் என்று நாவலர் நெடுஞ்செழியனும், உண்மை உணர்தல் என்று மதுரை இளங்குமரனாரும் மெய்யுணர்தல் என்பதற்குப் பொருள் உரைக்கின்றனர்.

இனி அவர்கள் தெளிந்துரைத்துப் பார்த்த பொருளைக் காண்போம்.

சொல்லப்படுகின்ற புலன்கள் வேறுபாட்டான, ஐந்தாகிய உணர்வு அவற்றை விட்டுத் தம்வயத்தாய வழியும். அதனால், செய்யினை உணர்தலில்லாதார்க்கு பயனில்லையேயாம்

- பரிமேலழகர்.

மெய்யுணர்வு இல்லாதவர்கள், ஐந்து புலன்களின் உணர்வுகளை அடக்கி வென்றிருந்த போதிலும், அதனால் அவர்களுக்கு நிலைத்த பலன் ஏதும் ஏற்படுவதில்லை

- நெடுஞ்செழியன்.

மெய்யறிவு இல்லாதவர்க்கு ஐம்புலன்களால் உண்டாகும் ஐவகை அறிவும் ஒருங்கே வாய்த்திருந்தாலும், அவற்றால் ஒரு பயனும் இல்லை - மதுரை இளங்குமரனார்

ஐயுணர்வு என்பதற்கு ஐந்தாகிய உணர்வு மனம் என்ற
எ
பரிமேலழகரும் ஐயுணர்வு என்பதற்கு ஐந்து புலன்களின் உணர்வு என்று நெடுஞ்செழியனும், ஐவகை அறிவு என்று இளங்குமரனாரும் வித்தியாசமாகப் பொருள் உரைத்திருக்கின்றனர்.

ஆக, ஐயுணர்வு என்பதற்கு ஐவகை உணர்வு என்று கூறலாம். ஐ என்றால் உயர்ந்த. அதனால் உயர்ந்த அறிவு என்றும் கூறலாம்.

ஐயுணர்வு என்றால் ஐயப்படுகிற உணர்வு என்றும் கூறலாம். ஐயப்பட்டுத் தெளிதல் அறிவுடையோர்க்கு அழகாகும்.

உயர்வு: உணர் என்றால் அறி. உணர்வு என்றால் அறிதல் தெளிதல், உணருதல், உணர்வோரே அறிவுடையவர் ஆவர்.

எய்திய என்தற்கு உண்டாக்குதல், பெறுதல், பொருந்துதல், பெற்றுக் கொள்ளுதல், சம்பவித்தல் என்பது பொருளாகும்.

கண் என்றால் விழி என்றும், பார்வை என்றும், உடம்பு, சரீரம் என்றும், கண்ணோட்டம் என்றும் பொருள் உண்டு.

பயம்என்றால் அச்சம் என்றும், பயன் என்றும் கூறலாம்.

மெய்யுணர்வு: உண்மை, உடல், திடம், திண்மை என்று பொருள் உண்டு.

இப்பொழுது நாம் கூற இருக்கின்ற புதிய பொருள் இப்படி உண்டாகி வருகின்றது.

ஐயுணர்வான, உயர்ந்த அறிவானது, நிரம்பப் பெற்றிருந்தாலும், உடல் பற்றிய தெளிவான அறிவில்லாதவர்க்கு, அதனால்எந்தவித பயனும் இல்லாமல் போகிறது.

இனி, இப்பொருள் பற்றிய விளக்கத்தையும் விரிவாகக் காணலாம்.

உடலில் சிறப்புப் புலன்கள் ஐந்து உண்டு. உலகின் முக்கிய பஞ்ச பூதங்கள் போல, உடலில் முக்கிய பஞ்சேந்திரியங்கள் இருக்கின்றன. இவைதான் அறிவின் வாசல்களும் பூசல்களும் ஆகின்றன.

உயர்ந்த, உன்னதமான உணர்வையும், அறிவையும், அவற்றின் மூலம் தெளிவையும் பெற, ஐயம் தெளிதல் முக்கியம் என்றோம், அதற்கு ஐந்து வகையான வினாக்களைத் தொகுத்து தெளிய வேண்டியிருக்கிறது. இதை மிக அழகாக விளக்கிப் பாடியிருக்கிறது பிங்கல நிகண்டு.

அறிவான் வினாவல், அறிவொப்புக் காண்டல், ஐயம் இறுத்தல், அவன் அறிவுதான் கோடல், மெய்அவற்குக் காட்டலோடு ஐவகை வினாவே! *(பிங்கல நிகண்டு 380)*

உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் அறிந்து கொள்கின்ற ஆர்வம் அதிகம் உண்டு. அதைத்தான் உணர்வு என்கிறோம். இதையே ஆங்கிலத்தில் Sense என்கிறார்கள்.

உலக இயல்புகளை, நடைமுறைகளை மூளைக்கு உணர்த்த உடல் உறுப்புக்கள்தான் முக்கிய கருவிகளாக இருந்து உதவுகின்றன. அந்த முக்கிய உறுப்புக்கள் நாக்கு, கண், மெய், செவி, மூக்கு அவற்றின் செயல்கள் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.

இவற்றைச் செய்திட, அறிந்திட படிப்பு தேவையில்லை. உடலே தனது உணர்வு மூலமாகப் பெற்று, உணர்ந்து கொள்கிறபோது, அதுவே பழக்கமாகிவிட, அறிவாகி விடுகிறது.

படிக்காத மக்களும், இப்படிப் புலன் அறிவு உடையவர்களாக இருப்பதையே, தமிழில் பொது அறிவு என்கிறோம். ஆங்கிலத்தில் Common Sense என்கிறோம்.

இந்தப் பொது அறிவிலே மேன்மை அடைந்திருப்பவரைத்தான் படிக்காத மேதை, பிறவி மேதை என்றெல்லாம் புகழ்கிறோம்.

உலகத்தை உற்று நோக்குகிறவர்கள், உணர்வு மிகுந்தவர்களாகவே திகழ்கின்றார்கள். இதைத்தான் வள்ளுவர் மிக அழகாக ஐயுணர்வு என்று பாடுகிறார்.

இப்படிப்பட்ட ஐயுணர்வை எய்திய உடம்பினால், என்ன பயன் என்று கேட்கிறார் வள்ளுவர்.

கண் என்றால் உடம்பு என்று அர்த்தம் உண்டு.

இயற்கையாகவே ஏற்பட்டிருக்கும் ஐயுணர்வைக் கொண்டிருக்கும் உடம்பினால், எப்பொழுது பலன் அதிகமாக ஏற்படும் என்றால், அந்த உடம்பைப் பற்றிய மெய்யுணர்வு இருக்க வேண்டும்.

மெய் உணர்வு என்பது உடம்பைப் பற்றிய உணர்வு. உடம்பைப் பற்றிய உயர்வு என்பது என்ன?

உடம்பால் அழியில் உயிரால் அழிவர்.

திடம்படமெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டா.

உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே! என்ற திருமூலர் இந்தக் கேள்விக்குரிய பதிலைத் தெளிவாக விளக்குகிறார்.

இதைத்தான் வள்ளுவரும், தனக்கே உரிய தந்திர முறையில் சிறப்புறத் தெளிவாக்குகிறார்.

மெய்யுணர்வு மனத்தாலும் முழுமை பெற்றிருக்கும் ஒருவருக்குத்தான் மனிதன் என்று பெயர்.

இவற்றிலே ஒன்று குறைந்தால் அவருக்கு மனிதன் என்ற பெயர் மாறிப் போய் பலப்பல பட்டப் பெயரல்லவா வந்து விடுகிறது.

கண் ஒளி மறைந்தால் குருடன். காதின் ஒலி கேட்கும். திறன் குறைந்தால் செவிடன். நாவின் சுவையும் சொல்லும் குறைந்தால் ஊமை. மூக்கின் மணம் அறியும் திறன் குறைந்தால் சுரணையற்றவன் என்றெல்லாம் பேரும் நிலையும் மாறிப் போகின்றனவே!

ஆக, ஒருவரது உண்மையான அறிவு என்ன செய்ய வேண்டும் என்றும், உடலைக் காக்க உதவ வேண்டும். உடலுக்கு வளம் சேர்க்க வேண்டும். நலம் காக்க வேண்டும். பலம் கூட்ட வேண்டும். நோயில்லாமல் நிதமும் காக்க வேண்டும்.

அதையெல்லாம் புறம் தள்ளிவிட்டு, பணம்தான் இலட்சியம், உடலுறவுதான் குறிக்கோள். உலகத்தை அனுபவிப்பதே என்வாழ்க்கையின் முயற்சி என்று உழன்று, உடல் வதைப்பட்டு, பூமியிலே நரகத்தைப் பார்க்கும் உணர்வுள்ள மனிதர்களை என்ன சொல்லி அழைப்பது?

ஆகவேதான், மெய்யுணர்வு இல்லாதவர்க்கு, நல்ல உணர்வு இருந்தாலும் ஒரு பயனும் இல்லை. அந்த உணர்வை எல்லாம் மேலும் சிறப்புற வளர்த்துக் கொள்ள, ஆதாரமாக இருக்கும் உடலைக் காக்க வேண்டும் என்பதையே வள்ளுவர் வலியுறுத்துகின்றார்.

இதைத்தான் மெய்யுணர்வு என்ற அதிகாரப் பெயராகவும் வைத்திருக்கிறார்.

உலகிலே உள்ள உண்மையான பொருள் உடல்தான். அதனால்தான் உடலை மெய் என்றனர்.

மெய்யானது உலகில் உலாவரும் வரை, வாழ்க்கை நிகழ்ச்சிகள் யாவும் மெய்தான். மெய் போய்விட்டால், எல்லாம் பொய்யாகிவிடுகிறது.

இந்த உண்மைத் தத்துவத்தைத்தான் மெய்யுணர்வு என்று, மென்மையாக மனத்தில் பதிய வைக்கிறார். மெய்யைத் தவிர, உண்மையான அறிவு வேறென்ன இருக்க முடியும்?

ஊரும் சதமல்ல, பேரும் சதமல்ல
உற்றாரும் சதமல்ல மற்றோரும் சதமல்ல

என்று சித்தர்கள் பாடியதெல்லாம் இதனால்தான்.

ஒருவருடைய உண்மையான உறவு முதலாவது உறவு அவரது உடல்தான். உடலை வைத்தே உலக வாழ்க்கை

அமைகிறது. நோய் வாய்ப்பட்ட உடல் நொந்து போவதுடன், நோவு நிறைந்த வாழ்க்கையையே நிலையாகி விடுகிறது.

ஆகவேதான், பொருளற்ற பிற பொருள்களை எல்லாம் பெரிதென்று எண்ணி, மருண்டு போய் அலைபவர்கள் இழிபிறப்பினர்கள் என்கிறார்கள்.

உடலை நன்கு பேணிப் பாதுகாக்கும் போது உறுப்புக்களின் இருள், நீங்கும். அறிவின் மருள் நீங்கும்.

கற்க வேண்டுவனவற்றுள், உடல் காக்கும் கலையே உன்னதக் கலை. ஓர்ந்துணரும் இதை உயர்ந்து விட்டால், அவரது அறியாமை, ஆதவன் கண்ட இருளாகி விலகும். பேதமை மிகுந்த பிறப்பும் சிறப்பு பெறும்.

பொய் நினைவுகள், பொல்லாத ஆசைகள், புண்படுத்தும் பழக்கங்கள் விலக, வேண்டாத துன்பங்கள் வராது ஒழியும்.

உடலைக் காப்பது பற்றிய உணர்வும், தெளிவும், ஞானமும் வந்து விட்டால், காமமும் கெடும். வெகுளியும் அடங்கும் மயக்கமாகிய தெளிவின்மையும் விலகும்.

இப்படிப்பட்ட மெய்யுணர்வைக் கொண்டு, தேகம் காக்கும் தேர்ந்த ஞானமும், தேர்ச்சியும் பெற்றவர்கள், உயர்ந்த அறிவுடன் உலா வருவார்கள். உலகை ஆள்வார்கள். இந்த மெய்யுணர்வில் மேன்மை பெறுங்கள் என்கிறார் வள்ளுவர் மெய்யுணர்வு அதிகாரத்தில்.

இயல்பாக உள்ள பொது அறிவுடன், கல்வி அறிவும் மிகுந்திருந்தாலும், உடல்நலமில்லாத ஒருவரால், உலகுக்கு என்ன பயன் ஏற்படும்? ஆகவே, மெய்யுணர்வாக, நமது தேகத்தை நலமுறக் காப்போம். ஐயுணர்வு நிறையப் பெறுவோம். அறிவான, அழகான, அமைதியான, ஆனந்தமயமான வாழ்வு வாழ்வோம் என்று நாம் இன்றே முயற்சிக்கலாம் அல்லவா?

# 22. மழித்தலும் நீட்டலும்

**மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்**
**பழித்தது ஒழித்து விடின்.**

கூடா ஒழுக்கம் என்ற அதிகாரத்தில் 10 வது பாடலாக இந்தக் குறட்பா இடம் பெற்றுள்ளது.

அறத்துப் பால் என்றதுமே ஒழுக்கம் பற்றிய பகுதி என்று தான் அர்த்மாகிறது. சாதாரண மக்களுக்குரிய ஒழுக்கம், பழக்க வழக்கம் என்ன? எப்படி இருக்க வேண்டும்? இல்லறத்தில் ஈடுபட்டிருக்கும் மக்கள் எப்படி எந்த வகையில் ஒழுக்கம் காக்க வேண்டும் என்று விளக்கிக் கொண்டே வருகிற வள்ளுவர், மக்கள் வாழ்க்கையிலிருந்து விலகி, ஒரு மகிமை மிக்க வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கும் துறவியர் ஒழுக்கம் பற்றியும் உன்னதமாக கோடிட்டுக் காட்டுகிறார்.

துற + உ என்பது தான் துறவு என்றாயிற்று.

உலக வார்க்கையின் இயல்பாக விளங்குகிற அகத்தையும் புறத்தையும் சுட்டிக் காட்டுவது **உ** . அந்த சாதாரண மனிதர் களின் ஆசா பாசங்களிலிருந்து விலகி வெளியேறி எல்லா வற்றையும் துறந்து நிற்பதைக் குறிப்பது **துற.** அப்படி துறந்து வெளியேறி வருகிற ஒருவரைத்தான் துறவி என்றார்கள்.

**வி** என்றால் அறிவு. ஆசா பாசங்களிலிருந்து அறிவோடு விலகி வருகிறவரைத்தான் துறவி என்றழைத்தனர்.

சாதாரண மக்கள் இல்லற வாசிகள். உருவத் தோற்றத்திற்கு உடையலங்காரம், ஒப்பனை, சீருடை என்று எதுவுமில்லை. ஆனால் துறவிகளுக்கென்று உடல் அமைப்பிலும் தோற்றத்திலும் சில முறைகளை அந்தக் காலம் தொட்டு இன்றைய காலம் வரை கடைப்பிடித்து வருகின்றார்கள்.

மக்களிடமிருந்த தங்களை வேறுபடுத்திக் காட்டவே காவியுடை அணிவது, கட்டை காலணி அணிவது, நீண்ட முடி வளர்ப்பது, ருத்திராட்சை மாலை அணிந்து கொள்வது, உடல் முழுவதும் பட்டை அடித்தக் கொள்வது போன்றவற்றை உருவாக்கிக் கொண்டார்கள்.

இதனால் துறவிகளுக்கு மக்களிடமிருந்து மனிதாபிமான மரியாதையும் மதிப்பும் கிடைத்தது. உண்மையாகவே துறவிகள் என்று காவி அணிந்த எல்லோரையுமே பக்தி பரவசத்தோடு மக்கள் போற்ற ஆரம்பித்தார்கள். காலில் விழுந்தார்கள் காணிக்கைகளைப் படைத்தார்கள், கற்பனைக்கும் மேலே அவர்களை கௌரவித்தார்கள்.

இதையெல்லாம் பார்த்த பாவிகள், பயங்கரவாதிகள், பகல்வேஷக்காரர்கள், பஞ்சமாபாதகர்கள், பாமர ஜனங்களை ஏய்ப்பதற்காகவும் மேய்ப்பதற்காகவும் துறவி வேடம் பூண்டார்கள். அவர்கள் எல்லா ஆசைகளையும் துறந்தவர்கள் போல வெளியிலே நடித்தாலும், மறைமுகமாக எல்லா பாவச் செயல்களிலும் தீய காரியங்களிலும் ஈடுபட்டு இன்பம் அனுபவித்து மகிழ்ந்தார்கள். தாங்கள் பண வசதியோடும், பதவி அந்தஸ்தோடும், அதிகார செல்வாக்கோடும் வாழ்வதற்கு உதவுகின்ற பலரை சிஷ்யர் என்ற பெயரிலே அடிமை யாக்கி வாழ்ந்தார்கள். தங்களை புகழ்கின்றவர்களை, பயன்படுகின்றவர்களை பணத்தை அள்ளித் தந்து பாதுகாத்துூர்கள். எதிர்த்து பேசியவர்களை ஒழித்துக் கட்டினார்கள்.

இப்படிப்பட்ட போலித் துறவிகளிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று கூற வந்த வள்ளுவர், போலித் துறவிகளை ஆந்தைக்கு ஒப்பிட்டு சுட்டிக் காட்டினார்.

போலித் துறவிகளை கணை கொடிது யாழ் கோடு என்றார். அதற்கு எல்லோரும் யாழானது வளைந்திருந்

தாலும் அது இனிமை யான இசையைக் கொடுக்கும் கணையாகிய பொருள் சொன்னார்கள். ஆனால், யாழ் என்றதும் வீணை தான் நம் நினைவுக்கு வரும். இருந்தாலும் யாழ் என்ற சொல்லுக்கு ஆந்தை என்ற ஒரு பொருள் உண்டு. கணை என்றால் **ஒலி** என்று அர்த்தம் உண்டு.

இருட்டில் மறைந்து வாழும் ஆந்தை உருவத்தால் அச்சம் ஊட்டும். அதன் உள்ளமோ வஞ்சனை நிறைந்தது. அது எழுப்பும் சத்தம் கூட கொடுமையான அச்சம் தரக்கூடியது. அதைப் போலவே பொய்த் துறவியரின் தோற்றம் மட்டுமல்ல அவரது எண்ணம் செய்கை வாழ்க்கை எல்லாமே கொடுமையானது என்று வள்ளுவர் கூறினார்.

நேரமோ இரவு. நெஞ்சமோ கரவு. காட்டியிருக்கும் தோற்றமோ துறவு. பாமரர்கள் ஏமாற இதற்கு மேல் வேறு என்ன வேண்டும்?

இந்த போலித் துறவிகளை ஆந்தை மனிதர்களை இனம் கண்டு கொள்ளுங்கள், என்று பொதுமக்களை எச்சரிக்கிற வள்ளுவர் அதே நேரத்தில் போலித் துறவிகளுக்கு நேரடியாகவே புத்திமதிகளையும் கூறுகிறார். அந்தக் குறள் தான் மழித்தலும் நீட்டலும் வேண்டா என்பதாகும்.

தவம் செய்வார்க்கு தலை மயிரை மழித்தலும் சடை நீட்டலுமாகிய வேலையும் வேண்டா. உயர்ந்தோர் தவத்திற்கு ஆகாது என்று குற்றம் கூறிய ஒழுக்கத்தை கடிந்துவிடின் அதுவே போதுமானது என்று பரிமேலழகர் பொருள் தருகிறார்.

**மழித்தல்** என்றால் மொட்டை ஆக்கல், கூர் இன்மை ஆக்குதல், சிறப்பை அழித்தல், மிகுதியை தரை மட்டமாக்குதல் என்று தான் பொருள்களுண்டு. மழித்தல் என்றால் அழித்தல் என்ற ஒரு பொருளும் உண்டு. **நீட்டல்** என்றால் பெருங்கொடை கொடுத்துக் காத்தல், ஈதல் என்றே பொருள்களும் உள்ளன.

துறவி என்றதும் மயிரை மழித்தல், நீண்ட சடை முடி வளர்த்தல் என்று அவசர கதியில் பொருள் சொல்வார்களோ என்று தெரிந்து தான் **மழித்தலும் நீட்டலும்** என்ற சொற்களை போட்டிருக்கிறார். ஆக, விரும்பியவர்களுக்கு நிறைய பொருளை பெருங்கொடையாக ஈயவும் வேண்டாம், வேண்டாதவர்களின் வாழ்க்கையை அழிக்கவும் வேண்டாம். என்று போலித் துறவிகளை எச்சரித்து, உண்மைத் துறவிகளின் பெருமையை காக்க உயர் நெறியை காட்டுகிறார். ஆக, இந்தக் குறளுக்கு என்னுடைய புதிய உரை இப்படியாக அமைகிறது.

தவநெறியில் இருப்பவர்கள் மற்றவர்களுக்கு பெருங் கொடை அளிக்கவும் வேண்டாம், மாறாக பிறர் வாழ்வை அழிக்கவும் வேண்டாம். உலகப் பெருமக்கள் பழித்து வெறுத்த அவமானம் தரும் காரியங்களை செய்யவும் வேண்டாம்.

நம் கண் முன்னே வாழ்கிற போலித் துறவிகள் பெண்ணாசை, பொன்னாசை மண்ணாசை கொண்டு வாழ்வதை பார்க்கிறோம், பத்திரிக்கைகளில் படிக்கிறோம், அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரை போலித் துறவிகள் பெருகிக் கொண்டு தான் வருகிறார்கள். பொது மக்களும் ஏமாந்து தங்களது காசையும் கற்பையும் இழந்து கொண்டுதான் வருகிறார்கள். என்றாலும் , மனிதர்கள் மாறுவதில்லை என்ற உண்மைத் தத்துவம் தான் உலகில் உலா வந்து நிருபித்துக் கொண்டிருக்கிறது.

**வாசக அன்பர்களே!**

குறள் பற்றிய புதிய விளக்கம் தருகிற புத்தகத்தை படித்து மகிழ்ந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். புகழ் பெற்றும் புதிர் நிரம்பியும் பொது மக்களிடையே பேசப் படுகிற பல குறள்களில் 22 குறள்களை மட்டும் தேர்ந்தெடுத்து விளக்கம் தந்திருக்கிறேன். மேலும் எல்லா குறள்களுக்கும் விளக்கம் தருகின்ற **திருக்குறள் புது உரை** என்ற நூல் 2000ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் வெளிவர இருக்கிறது. படித்து மகிழுங்கள். புதிய நூற்றாண்டில் புதிய சிந்தனையாளர்களாக திகழுங்கள் என்று போற்றி வாழ்த்தி, வணங்கி உங்களை சிந்திக்க வைத்துவிட்டு விடைபெறுகிறேன்.

**டாக்டர். எஸ். நவராஜ் செல்லையா**

பல்கலைப் பேரறிஞர்

டாக்டர் **எஸ். நவராஜ் செல்லையா** அவர்களின்

## வளமான வாழ்வுக்கு வழிகாட்டும் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | நீங்களும் உயரமாக வளரலாம் | 12 - 00 |
| 2. | நீங்களும் நோயில்லாமல் வாழலாம் | 12 - 00 |
| 3. | நீங்களும் மகிழ்ச்சியாக வாழலாம் | 12 - 00 |
| 4. | நீங்களும் உடலழகு பெறலாம் | 12 - 00 |
| 5. | நீங்களும் வலிமையோடு வாழலாம் | 12 - 00 |
| 6. | நீங்களும் ஒலிம்பிக் வீரராகலாம் | 12 - 00 |
| 7. | உடலுக்கு அழகு தரும் எடைப் பயிற்சிகள் | 12 - 00 |
| 8. | பலம் தரும் பத்து நிமிடப் பயிற்சிகள் | 15 - 00 |
| 9. | பேரின்பம் தரும் பிராணாயாமம் | 20 - 00 |
| 10. | பயன்தரும் யோகாசனப் பயிற்சிகள் | 15 - 00 |
| 11. | இந்திய நாட்டுத் தேகப்பயிற்சிகள் | 12 - 00 |
| 12. | நமக்கு நாமே உதவி | 12 - 00 |
| 13. | உடல் எடையும் உணவுக் கட்டுப்பாடும் | 15 - 00 |
| 14. | நலமே நமது பலம் | 40 - 00 |
| 15. | உபயோகமுள்ள உடல்நலக் குறிப்புக்கள் | 12 - 00 |
| 16. | நீங்களும் இளமையாக வாழலாம் | 15 - 00 |
| 17. | சதுரங்கம் விளையாடுவது எப்படி? | 12 - 00 |
| 18. | கேரம் விளையாடுவது எப்படி? | 12 - 00 |
| 19. | தொந்தியைக் குறைக்க சுலபமான வழிகள் | 15 - 00 |
| 20. | ஒரு நூறு சிறு விளையாட்டுக்கள் | 22 - 00 |
| 21. | பெண்கள் விளையாடினால் என்ன ஆகும்? | 12 - 00 |
| 22. | விளையாட்டுக்களின் விதிகள் | 100 - 00 |



விளையாட்டுத் துறை இலக்கியத்தின் தந்தை என்றும், பல்கலைப் பேரறிஞர் என்றும் பாராட்டப்படுகின்ற, **டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா** அவர்கள், விளையாட்டுத்துறை தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்கான பணியைத் தனது வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு, பணியாற்றி வருகிறார்.

விளையாட்டு பற்றிய கட்டுரை, கவிதை, சிறுகதைகள், நாவல் மற்றும் தனி மனித முன்னேற்றம் பற்றிய அறிவு நூல்கள், ஆய்வு நூல்கள் என இதுவரை 150க்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டிருக்கிறார்.

விளையாட்டுத்துறையில் மக்களுக்கு விழிப்புணர்வு உண்டாகவும், விருப்பத்துடன் பங்கேற்கவும் உதவும் வண்ணம், 20 வருடங்களாகத் தொடர்ந்து ''***விளையாட்டுக் களஞ்சியம்***'' என்ற மாத இதழை (1977 முதல்) நடத்தி வருகிறார்.

விளையாட்டு இசைப் பாடல்கள், உடற்பயிற்சிக்கான இசை ஒலி நாடா போன்றவற்றை மாணவ மாணவியருக்காகத் இயக்கி, இசையமைத்து, நடித்து, தயாரித்து வெளியிட்டிருக்கிறார்.

விளையாட்டின் சிறப்பை வெளிப்படுத்த, '***ஓட்டப்பந்தயம்***' எனும் திரைப்படத்தைத் தயாரித்துத் திரையிட்டுள்ளார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் முதன் முதலாக விளையாட்டுத்துறையில் ஆய்வறிஞர் (Ph.D.) பட்டம் பெற்றவர் என்ற பெருமை இவருக்கு உண்டு.

இவரது மூன்று நூல்கள் தேசிய விருதும், ஒரு நூல் தமிழ்நாடு அரசின் பரிசினையும் பெற்றுள்ளது

---

கிரேஸ் பிரிண்டர்ஸ், சென்னை - 600 017. ✆ 4342232